உ

கணபதி துணை.

குருகூர்ச்

# சுப்பிரமணியதீக்ஷிதர்

இயற்றிய

# பிரயோகவிவேகம்

## மூலமுமுரையும்.

இவை

யாழ்ப்பாணத்து நல்லூர்

## ஆறுமுகநாவலரால்

பலபிரதிரூபங்களைக்கொண்டு பரிசோதித்து,

மேற்படியூர்

## சதாசிவப்பிள்ளையால்

சென்னபட்டணம்

## வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.


இரண்டாம் பதிப்பு.

188[illegible]

விசுவாவசு ஹூ மார்கழி மீ

இதன் விலை ரூபா-௩.



(Copyright Registered.)

U. V. S. IYER LIBRARY

22098

கணபதி துணை.

# பாட்டுமுதற்குறிப்பகராதி.


| பாட்டு. | பக்கம். | பாட்டு. | பக்கம். |
|---|---|---|---|
| அடைமொழி | ௭௯ | திருநுதலாய் | ௬௬ |
| அண்ணியகர்மத் | ௧௭ | துன்னுந்தொடர் | ௫௩ |
| ஆக்கியசொற்க | ௩௧ | தேற்றுந்தமிழுக் | ௧௩ |
| ஆக்கும்பிரதி | ௯௧ | நித்தமநித்த | ௫௦ |
| ஆதியதென்ப | ௨௦ | நிறக்குந்துணை | ௭௧ |
| ஆயுமலந்த | ௮௪ | நீர்கொண்ட | ௧ |
| ஆவியெழுத்தச் | ௫ | பகுதிக்குரிய | ௭௭ |
| ஆறுருமைந்தொடு | ௨௨ | பழியாவினைசெய் | ௧௫ |
| இந்திரன்றுமரை | ௧௫ | பன்னியபோதறி | ௬௩ |
| இருமொழி | ௪௩ | பன்னும்பகாப்பத | ௧௧ |
| உடனிகழ்கின்ற | ௨௪ | பூதத்தொடு | ௮௧ |
| உண்ணுமதனை | ௫௫ | பெரும்புங்கவர் | ௫ |
| எடுத்தல்படுத்த | ௭௫ | பேர்கொண்ட | ௫௭ |
| ஏயுங்கருமஞ் | ௧௫ | பொற்பமர் | ௨ |
| காலத்திரயம் | ௮௧ | மண்டலத்துப்பதி | ௨௯ |
| கூருமிரச்சுவந் | ௬ | மருளறுகாரணங் | ௮[illegible] |
| கூறியவையிரண் | ௯ | முட்டாதுகூறிய | ௫௯ |
| சாமானியமவ் | ௫௩ | முற்றியகாரக | ௨௭ |
| சாற்றியதெய்வப் | ௮௮ | முன்மொழிப்பண் | ௩௯ |
| சின்மயஞ்சார்ந்த | ௮௬ | முன்மொழிப்பேர்ச் | ௪௧ |
| சீதளசந்த்ர | ௯௫ | முன்னிலையேவ | ௬௧ |
| சுட்டெழுத்தாதி | ௫௧ | வல்லாரிளங் | ௫௬ |
| சொன்னதொகைக்கு | ௪௭ | வினை[illegible]மொரோ | ௧௯ |
| தற்புருடத்தொகை | ௩௬ | விரிக்கும்பெய | ௬௯ |
| தற்புருடன்றுவிகுக்கர்ம | ௪௬ | வினைப்பெயரோடவ் | ௮௩ |
| தற்புருடன்றுவிகுப்பல | ௩௫ | | |

# சோதநபத்திரம்.

| பக்கம். | வரி. | பிழை. | திருத்தல். | தள்ளல். |
|---|---|---|---|---|
| கo | க | உழி, | உளி, | |
| கக | கூக | அருத்தவ ததா தப் | அருத்தவததாது ரப் | |
| ககூ | அ | ,, | ,, | பெயரியலுள் |
| ,, | கூ | எ-ம். பெயர்ப்பி ராதிபதிக | எ-ம். பெயரியலு ள் பெயர்ப்பிரா திபதிக | |
| ,, | உகூ | வைத்தார். | வைத்தாம். | |
| கரு | உஎ | நமக்கின்றுப் | நமக்கின்று | |
| கஎ | ச | "சிறுமையுணீங் | "சிறுமையி னீங் | |
| கஅ | ச | குத்தினன்' | குற்றினன்' | |
| ககூ | உ | நந்தையுந்தாயுமு வக்கும் | நந்தையுவக்கும் | |
| உக | உஉ | வந்தது. | வந்தன. | |
| உங | எ | 'அத்துவ நிகச் சதி' | 'அத்துவநி கச் சதி' | |
| ,, | கக | மேவொடு | மேயொடு | |
| கூகூ | கூச | கேட்டு | கெட்டு | |

DR. U. V. S. IYER LIBRARY MADRAS
22098

உ

கணபதி துணை.

திருச்சிற்றம்பலம்.

# பிரயோகவிவேகவுரை.

## முதலாவது காரகபடலம்.

க. நீர்கொண்ட சென்னி மகேச்சுரன் பாணினி நீள்கடல்சூழ், பார்கொண்ட கீர்த்தி வாருசி ஞான பதஞ்சலிபூந், தார்கொண்ட வானவர் கோன்பாரதியிவர் தாள் வணங்கி,யேர்கொண்ட சொற்பிரயோக விவேக மியம்புவனே.

இது தற்சிறப்புக் கூறுகின்றது. மகேச்சுரனாதியாகப் பாரதியீறாகச் சொல்லப்பட்ட இவர்கள் பாதங்களைத் தொழுது, பிரயோகவிவேகமென்னும் வடமொழிச்சத்தசாத்திரத்தை, யான கூறுவேன். எ - று.

வடமொழிப்பிரயோகவிவேகத்தினும் சொல்லிலக்கணமல்லது எழுத்திலக்கணங் கூறுமையின், சொற்பிரயோகவிவேகமென்றும. காத்தியாயனரெனினும், வரருசியெனினுமொக்கும. பதஞ்சலியெனினும், பாடியகாரரெனினுமொக்கும். மகேச்சுரன பாணினிக்காசாரியன்.

"எழியன் முறைய தெதிர்முக வேற்றுமை - வேறெண விளம்பான் பெயரது விகாரமென் - றோதிய புலவனு முளனொருவகையா - னிந்திர னெட்டாம் வேற்றுமை யென்றனன்." என அகத்தியத்தின்கண்ணும், "ஐந்திர நிறைந்த தொலகாப்பியன்" எனத் தொல்காப்பியப்பாயிரத்தின்கண்ணும், வருதலின், இவர்கட்கு முதனூல் பாணினியமும் ஐந்திரமுமாமெனக. அகத்தியநிறைந்த தொல்காப்பியன் என்னுமையானும், "கடிநிலை யின்றேயாசிரியற்க" எனப் பொதுப்படவோதியதல்லது பெயரெடுத்தோ

தாமையானும், அதுவே பொருளென்க. பின்னூல்செய்தார் தத்தம் பாயிரத்துள் வேண்டியவாறே கூறினார், அதுபற்றி உரைகாரரும் அவருரைத்தாங்குரைத்தார், அது பொருளன்மையறிக. (க)

உ. பொற்பமர் தெய்வ மொழிப்பாகு பாடும் பொதுவெ
ழுத்தாய்ப், பற்பல வாகித் திரிவதுஞ் சாற்றினர் பண்
டுணர்ந்தோர், முற்பகர் நூலுட் சிறுபான்மை பேர்க்கு
மொழிபெயர்த்தார், தற்பவந் தற்சம மேபெரும் பான்
மையுஞ் சாற்றினமே.

இது பிரதிக்கினையும் பயனுங்கூறுகின்றது. 'பிரதிக்கினைமேற் கோளெனப் பெயர் பெறும்.' இஃதுரைச்சூத்திரம். இவ்வாறு கவி தோறும் உரைக்கு முன்னாகப் பின்னாக உரைச்சூத்திரமுஞ்செய் தார், அது கண்டுகொள்க. பண்டைக்கற்றோர் முன்னூலுள் ஏகதேச வடமொழிக்கூறுபாடும் அது தற்சமந்தற்பவமாகப் பொதுவெழுத்தாய்த் திரிவதுங் கூறினார். யாம் இந்நூலுட்சொற்களின் பெயரை ஏகதேசந் தமிழாகவும், பிராயிகந் தற்சமந்தற்பவமாகவுங் கூறினாம். எ - று.

'சிறுபான்மையேகதேசமாகும்.' 'பிராயிகம் பெரும்பான்மை பேசுஞ்சாலே.' 'தேசிகச் சொல்லொடு செறிவட மொழியினைத் — தற்சமந் தற்பவந் தாமென மொழிப.' இவை உரைச்சூத்திரம்.

இனிப் பண்டைக்கற்றோராவார் தொல்காப்பியனாரும் நன்னூலாருமென்க. அவர் கூறிய வடமொழியிலக்கணம் பெற்ற தற்சமந் தற்பவமாகத் தத்தநூலுள்ளே எழுத்திற்குஞ் சொல்லிற்குங் காரணக்குறி இடுகுறியாகிய போகரூட நாமங்களைச் சிறுபான்மை கூறினார். அவ்வாறு சிறுபான்மை கூறாது, யாம் இந்நூலுட் பெரும்பான்மையுந் தற்சமந்தற்பவங்களாற் கூறினாம். இப்பெரும்பான்மையுங் கூறியது யாதுபற்றியெனின், வடமொழிக்குந் தமிழ்மொழிக்கும் இலக்கணமொன்றென்பதறியாது சம்ஞாபேதத்தாலும்

* அகத்தியம் தொல்காப்பியமெனப்படுவனவற்றிற்குப் பாணினீயம் ஐந்திரமென்னும் வடமொழி வியாகரணங்களை முதனூலென இவ்வாசிரியர் கூறியதனை வடமொழிக்கடலும் தமிழ்மொழிக்கடலும் நிலைகண்டுணர்ந்த சிவஞானமுனிவர் மறுத்து, அகத்தியம் தமிழ்க்கு முதனூலேயெனவும், தொல்காப்பியம் அதன்வழிநூலெனவுஞ் சாதித்தனர். அது தொல்காப்பியச்சூத்திரவிருத்தியிற் காண்க.

பாடைவேற்றுமையாலும் இகழ்ந்து வேறென்பாரை நோக்கியென்க. இந்நூல்செய்ததற்கும் இதுவே பயன்.

இனி அவர் சிறுபான்மை கூறிய தற்சமதற்பவமாவன,—சூத்திரம், உதாரணம், தகாரம், நகாரம், வகாரம், அந்தந்தமக்கிலவே, அவ்வேமாத்திரை, காயப்பெயர்வயின், கருமமல்லாச்சார்பு, இனனேனைதுவீங்ஙனம், அம்போதரங்கம், குஞ்சரம் பெறுமே. குழவி, வைசியன் பெறுமே வாணிக வாழ்க்கை எனவும், பாயிரத்துள் குமரி, ஐந்திரம், பாண்டியன் எனவும், கூறினார். "திங்களு நாளும்" என்னுஞ் சூத்திரத்தால், ஆணியாடிதையொழிந்த திங்களும் நாளிருபத்தேழும் தற்பவமாகலின், அவை தமிழோடு புணரும் புணர்ச்சியுங் கூறினார். விகற்பம், பகுதி, விகுதி, அச்சு, ஐவருக்கம், கருவிகருத்தா, பாந்தம் என இன்னும் பிறவும் நன்னூலார் கூறினார். பிறர் புலுதமெனவுங் கூறினார்.

பகுதி, விகுதி, பாந்தம், விகற்பம், புலுதம், பதம், சூத்திரம், உதாரணம் என்னும் வடமொழிக்குரிய குறியெல்லாம் வடமொழிக்கேயன்றித் தமிழ்மொழிக்கும் உரிமையானாற்போல யாம் இந்நூலுட் கூறிய வடமொழிக்குறியெல்லாம் தமிழ்மொழிக்குமாமென்க.

இனி அவர் கூறிய வடமொழிப்பாகுபாடுந் திரிவும் யாவையெனின்,—நன்னூலார் சொல்லதிகாரத்துள் "பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத் தானு—மீரெழுத் தானு மியைவன வடசொல்." என முழுதும் பொதுவெழுத்தானே வருவனவும், முழுதும் வடசிறப்பெழுத்தானே வருவனவும், இவ்விரண்டுமன்றி வடசிறப்பெழுத்தானும் பொதுவெழுத்தானுங்கலந்து வருவனவுமென, இயற்கையாய் நிற்கும் வடமொழிப்பாகுபாடே கூறி, பின் எழுத்ததிகாரத்துள் "இடையினான்கும்" என்னுஞ் சூத்திரமுதல் ஐந்து சூத்திரத்தான் முழுதும் பொதுவெழுத்தான் வருந் தற்சமமொழித்து மற்றையிரண்டனுள்ளும் புணர்ந்த வடசிறப்பெழுத்துக்கள் இன்னவெழுத்து இன்னபொதுவெழுத்தாய்த் திரியுமென்றும், குங்கும, குங்குமம்; மலய, மலயம்; மாலா, மாலை; சிலா, சிலை; கலா, கலை எனப் பொதுவெழுத்துள்ளும் இன்னபொதுவெழுத்து இன்னபொதுவெழுத்தாய்த் திரியுமென்றும், தற்பவச்சொல்லிலக்கணங் கூறினார். தமிழ்ச்சிறப்பெழுத்தாற்றிரியாமை நன்னூலார்க்குந் தொல்காப்பியனார்க்குமொக்கும். இவ்வாறு இவ்விலக்கணம் பகுத்தறியாதார் மூன்றுபாகுபாட்டிற்குந் தமிழெழுத்தாலுதாரணங்காட்டினவற்றை நோக்கி, நன்னூலைப் புனருத்தியென்ப.

இனித் தொல்காப்பியர் "வடசொற் கிளவி" என்னுஞ் சூத்திரத்தாலே தற்சமமென்னும் பாகுபாடொன்றற்கே விதி கூறி, மற்றையிரண்டுந் திரிந்து தற்பவமாய் நின்றனவற்றைச் "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்." என்னுஞ் சூத்திரத்தாலுரைத்தார். உ-ம். கீர்த்தி, மணி, வாரி, மேரு, வாயு, ஊரு, வேணு இவை தற்சமம். சித்தி, புத்தி, சந்தி, தச இவை வடசிறப்பெழுத்தே வந்தன. ஆதி, விரோதி இவை பொதுவுஞ் சிறப்புங் கலந்தன. இவற்றை வடவெழுத்தாலே எழுதி மூன்றுபாகுபாடுமறிக. வடவெழுத்தாகத் தமிழெழுத்தாக வடிவெழுத்தைக் கொள்ளாது ஒலியெழுத்தே கொள்க. ஆக்கினை, விருத்தம், நிருத்தம், விக்கியானம் என்பன ஆணை, வட்டம், நட்டம், விண்ணாணம் எனத் தற்பவமாம். இவற்றைப் பிராகிருதமென்பாருமுளர். ஆக்ஞையதி, விக்ஞையதி என்பனவற்றை ஆணவேதி, விண்ணவேதியென்பர். பிறபாடையுள்ளுங் காண்க.

"கடிசொ லில்லை காலத்துப் படினே." என்பதனால் தற்பவம், தற்சமம், தற்புருடன், உற்பலம் எனவுந் தகாரத்தை றகாரமாக்கிக் கூறினும்.

இனி "எந்திர வூர்தி யியற்றுமி னென்றான்." என யகாரம் எகாரமென்னுங் குற்றெழுத்தாயும், "தெய்வ மால்வரைத் திருமுனி" "தெய்வஞ் சுட்டியபெயர்நிலைக் கிளவி" என ஐகாரம் எகாரமென்னுங் குற்றெழுத்தாயும், "கொங்கணக் கூத்தருங் கொடுங்கரு நாடரும்" எனபதில் கோங்கணம் என்னுநெட்டெழுத்துக் குற்றெழுத்தாயும், "அமிர்தினு மாற்ற வினிதே" "சோள வளநாடு சோறுடைத்து" எனற்பாலனவற்றை "அமிழ்தினு மாற்ற வினிதே" "சோழவளநாடு சோறுடைத்து" என ரகார ளகாரமிரண்டுந் தமிழிற்சிறந்த ழகார மாயும், "அற்புத நாராயணனரி வாமன—னிற்பது மேவி யிருப்பதென் னெஞ்சக—நற்புகழ் வேதியர் நான்மறை நின்றதிர்—கற்பகச் சோலைத் திருக்கடித் தானமே." எனத் தகாரமும் லகாரமும் றகாரமாயும், "ஈசற் கியாம்வைத்தவன்பு" "கடிநிலையின்றே யாசிரி யற்க" "அதங்கோட்டாசாற் கரிறபத்தெரிந்து" "சிவன்றமர்" "திருநாராயணன்றன் காலம் பெறச்சிந்தித் துய்மினோ." என அகரவீறு னகரமாயும், திரிந்து பிராசீனராகிய சான்றோர் செய்யுட்கண் வருதலின், திரியாதென்ற ஐந்தும் தமிழ்ச்சிறப்பெழுத்துக்களாய்த் திரிதலுங்கொள்க. திரமிளமென்பது தமிழெனத் திரிதலுமது. 'பிராசீனர் முன்னோ ராதுனிகர் பின்னோர்.' இஃதுரைச்சூத்திரம்.

*நிலம், நீர், தீ, வளி, விண். எ-ம். என்று, எறி, ஒன்று, ஒறு, கொன்றை, கொறி, வென்றி, வெறி. எ-ம. வாழை, மழை, சோறு, கூறை. எ-ம். தமிழ் இம்மூன்றுபாகுபாடும் பெறுமாயினும், இவை வடமொழிக்கட்சென்று வழங்கித் திரியாதுந் திரிந்தும் பொருளொன்றாகாமையின், தற்பவந் தற்சமமாகாவென்க. மணலூர்புரம் என்னுந்தமிழ் வியாசபாரதத்திற்சென்றது தேசிகமல்லது தற்சமந் தற்பவமாகாதென்க. (உ)

ங. பெரும்புங்கவர்புகழ்போதா யனிகப் பிரமணியநாரு
ம்புங் குருகையிற் கோதில் குலோத்துங்க னிடமாய்,
விரும்பும் பொருளைந் தரும்பிரயோக விவேகந்தன்னை
க்,கரும்புங்கனியுமெனப்பாடினன் றமிழ்கற்பவர்க்கே.

இது தன்னைப் பிறன்போலும் நாந்தி கூறுகின்றது. குருகையிலரும்புமெனக் கூட்டுக.

வடநூலார் தாமே பதிகமுமுரையுஞ்செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான், யாமும் பதிகமுமுரையுஞ் செய்து, உதாரணமுங் காட்டினும். தண்டியாசிரியர் மூலோதாரணங்காட்டினாற்போல யாமும் உரையெழுதியதல்லது மூலோதாரணமுங்காட்டினும். இனிச் சம்பந்தா சடகோபா முதலாயினாரும் திவாகரரும் பதினெண்கீழ்க்கணக்குச்செய்தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகங்கூறுவதுங்காண்க.

பிரதீகமென்பது பதிகமென நின்றது. 'பாயிர, நாந்தி பதிகமென்ப.' இஃதுரைச்சூத்திரம். (ங)

ச. ஆவி யெழுத்தச் சொடுசுர மாகு மவற்றின்பின்னே
மேவிய மெய்கள் விளம்புமல் லோடு வியஞ்சனமாந்
தாவி யெதிர்த்துமதர்த்தரிபாய்ந்திருதாழ்குழைதோய்
காவி நெடுங்கட் கதிர்மதி வாணுதற் காரிகையே.

இது முதலெழுத்திற்குக் குறியீடு கூறுகின்றது. 'குறியே சமிக்கை கூறுங்காலே' இஃதுரைச்சூத்திரம். உயிரெழுத்தெல்லாம் அச்சு எனவும், சுரம் எனவும், பெயர்பெறும். மெய்யெழுத்தெல்லாம் அல் எனவும், வியஞ்சனம் எனவும்,பெயர்பெறும்.எ-று.

அச்சு அல் என்பன பிரத்தியாகாரஞ்செய்த பெயர். பிரத்தியாகரித்தலாவது ககரமுதல் ணகரவிறுவாய்ப் பதினெண்ணெழுத்திற்கும் ஆதியிலே நின்ற ககரத்தையும் அந்தத்திலே நின்ற ணகரத்

MAHAMAHOPADHYAYA

தையும் கூட்டி, கனு எனப்பெயரிட்டாற்போல்வது. யரலவழள என்னும் ஆறெழுத்திற்கும் யள எனப்பெயரிட்டாற்போல்வது.

மெய்யுட் சிலவெழுத்தை மகாப்பிராணன் என்றும், சிலவெழுத்தை அர்த்தப்பிராணன் என்றும், சிலவெழுத்தை அற்பப்பிராணன் என்றும், கூறுவர்.

௫. கூறு மிரச்சுவந் தீர்க்கம் புலுதங் குறினெடிலோ
டாறு மளபெடை வல்லின மெல்லின மாம்பரிசந்
தேறும் யரலவ வாமந்தத் தாக்காஞ் சீர்த்தசந்தி
சாருமை யௌவுட னேயோ மயக்கங்கள் சையுத்தமே.

இதுவுமது. குறில் இரச்சுவமென்றும், நெடில் தீர்க்கமென்றும், அளபெடை புலுதமென்றும், வன்மையும் மென்மையும் பரிசாக்கரமென்றும், ய ர ல வ நான்கும் அந்தஸ்தாக்கரமென்றும், ஐ ஔ ஏ ஓ என்னுநான்கும் சந்தியக்கரமென்றும், மயக்கம் சையுத்தமென்றும், பெயராம். எ - று. சையோகமுமது.

வடநூலார் சையோகம் ஒருமொழியினும் புணர்மொழியினும் கொள்வர். அதுபற்றிச் சூத்திரஞ்செய்தபடி இளம்பூரணரும் நன்னூலாரும் அவ்வாறு கொள்வர். அக்கருத்தறியாத நச்சினார்க்கினியர் ஒருமொழியிற்கொண்டு, இருமொழியிற் கொள்ளாது உதாரணமிறந்தவெனபர்.

கூறும் என்ற இலேசத்தால் மென்மை அநுநாசிகம். இது பற்றி "மூக்கின் வளியிசை யாப்புறத் தோன்றும்" என்றார்.

இனி வடநூலார் குறில் தனியே ஒருமாத்திரையாய்ப் பிறப்பதோரெழுத்தும், நெடில தனியே இரண்டுமாத்திரையாய்ப் பிறப்பதோரெழுத்துமானாற்போலப் புலுதமும் தனியே மூன்றுமாத்திரையாய்ப் பிறப்பதோரெழுத்தென்று கூறி, வேதத்துட் சந்தோபங்கம் வாராமல் குறில் நின்றவிடத்தும் நெடில் நின்றவிடத்தும் புலுதம் ஆதேசமாக வருவதல்லது குறிலும் நெடிலும் போலப் பொருள்வேறுபடுக்க வாராதென்றும், உலகவழக்கிற் சம்புத்தி சம்போதனத்தில் வருமென்றும், சுலோகபதமான சம்புத்தியிற் குறிலும் நெடிலும் இயல்பாய் நிற்குமென்றும், சேய்மை விளியிலே தாளவோசை மணியோசையென்கின்ற அநுகரணத்தொனிபோலு மென்றும், கூறுவர். அவர் குறில் நின்றவிடத்தும் புலுதம் வருமென்பதுபற்றித் தொல்காப்பியர் "ழகர வுகர நீடிட னுடைத்தே—யுகரம் வருதல் லாவயி னான." எனச் சூத்திரஞ்செய்து,

JAYOHANANAM

'பழூஉப்பல லன்ன பருவுகிர்ப் பாவடி" என உதாரணங்காட்டுவர். அதுவே உபலக்கணமாக நாலடியில் 'விராஅய்ச் செய்யாமை நன்று" "நெருப்புழற் சேர்ந்தக்கா னெய்போல வதூஉம்" எ-ம். திருவள்ளுவர் குறளில் "துப்பார்க்குத் துப்பாய தூஉ மழை" "நீங்கிற் றெறூஉங் குறுகுங்கால்" எ-ம். குறிலெழுத்து நீங்குமிடத்தும் சிறுபான்மை அசைநிலையாக அளபெடுத்து வந்தனகாண்க. குரீஇ, உடீஇ எனவரும் இறுதிநிலையளபெடையுமிது.

இனித் தமிழ்நூலார் "நா[illegible] ...டங் கைக்கு மென்முலைக்கு—மாறேமா லென்றனள் பண்." "உப்போஒ வெனவுரைத்து மீள்வா ளொளிமுறுவற்—கொப்பாமோ நீர்வேலி யுலகு" என இசைவிளிபண்டமாற்று முதலியவற்றின் வரும் இயற்கையளபெடையென்றும், "கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்—படாஅ முலைமேற் றுகில்." "செறாஅஅய் வாழிய நெஞ்சு." எனக் காரியமுள்ளவழி வரும் அசைநிலையளபெடையைச் செயற்கையளபெடையென்றும், கூறுவர்.

இயற்கையென்பது சகசம். செயற்கையென்பது ஆகந்துகம். 'இயற்கை சகசஞ் செயற்கையாகந்துகம்.' இஃதமரசூத்திரம். இயற்கையளபெடை செயற்கையளபெடையென இருவகைப்படுமெனவே, இயற்கையாவது பொருட்குப் பின்வேறொன்றுந் உடனிகழ்ந்தன்மை, செயற்கை ஒருகாரணத்தால் இரியுந்தன்மையாகலின் 'குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்" என்னுஞ் சூத்திரவிதி செயற்கையளபெடைக்கல்லது இயற்கையளபெடைக்குப் பொருந்தாமை தேற்றெனவறிக. இயற்கையளபெடைக்கு வடநூலார் சொன்னவுதாரணமேயாம். "அளபிறந்துயிர்த்தல்" என்னுஞ் சூத்திரவிதி சிறுபான்மை பொருந்திற் பொருந்துமெனக. இரண்டுமாத்திரையாய்ப் பிறந்த நெட்டெழுத்துக்கள் மூன்றுமாத்திரையாய் அளபெடுத்தலும் செயற்கையாமாகலின், சிறுபான்மையென்றாம். 'உவாஅப்பதினான்கு' 'இராஅப்பகல்' என்னும் எழுத்துப்பேறுகள் "குன்றிசை மொழிவயி னின்றிசை நிறைக்கும்" காரியமில்லவழிவந்த புலுதசந்தி. வடமொழியினும் 'அக்கிநீஇஇதியாக' எனவரும்.

இனிச் சந்தியக்கரமாவது,—'அகர இகரமே ஐகார மாகும்.' 'அகர வுகரமே ஔகார மாகும்.' 'இகார வுகார மென்னு மிவற்றோ—டகாரம் ஐஔ வாகலு முரித்தே.' இவ்வுரைச்சூத்திரங்களால் ஈரெழுத்தாகிய சந்தியக்கரமென்றும், ஓரெழுத்தாகிய ஏகாக்கரமென்றுமறிக. அம்முறைமைபற்றித் தொல்காப்பியரும் "அகர

விகர மைகார மாகும்." "அகர வுகர மௌகார மாகும்" "அகரத் திம்பர் யகரப் புள்ளியு—மையெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்." எனச் சந்தியக்கரமாக நேரே கூறினார். அவ்வாறு கொள்ளாது உரைகாரர் "ஐயொத்திசைக்கும்" "ஔவோரன்ன" என நன்னூலார் மதம்பற்றி "ஐகாரமாகும்" "ஔகாரமாகும்" "ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்" என்புழி ஐகாரம்போல வாகும் ஔகாரம்போலவாகும் ஐயெனெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும் என விரித்து, விகாரமாக்கி, நலிந்து பொருள் கொண்டு, போலியெழுத்தென்றிடர்ப்படுவர். அவர் போலியெழுத் தென்றால், "வைகிற் றெம்மனை வாழிய போதெனக்—கையி ளுலடி தைவரக் கண்மலர்ந்து" எ-ம். "மெய்யணி செம்பொற் சுண்ண மேதகு நான நீரி—னைதுபட் டொழுகி யானை யளிமதங் கலந்து சேரும்" எ-ம். "ஐயெ னெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்." எ-ம். "ஐயந் திரப் பொருளை யுணர்த்தலு—மெய்ந்நடு நிலையு மிகு நிறை கோற்கே" எ-ம். "கையி னூற்சொலக் கண்ணினிற் கேட்டிடு—மொய்கொள் சிந்தையின் மூங்கையு மாயினேம்." எ-ம். "கையறு நெஞ்சங் கடியல் வேண்டும்—பொய்தீர் காட்சிப் புரையோய் போற்றி." எ-ம். 'கௌவையங் கடும்புன லொலியுங் காப்பவர்—செவ்வனா ருயிரஞ் சிலைக்கும் பம்பையு—மெவ்வெலாத் திசைதொறு மீண்டிக் காரொடும்—பௌவநின் றியம்புவ வொத்த வென்பவே." எ-ம். "வெவ்வினை வெருண்டு சார விழுநிதி யமுத மன்னீர்—கௌவிய வெஃகி நின்ற கயக்கமி னிலைமை நோக்கி—யௌவிய மகன்று பொங்கு மழல்படு வெகுளி நீக்கி—யிவ்விய லொருவற் குற்ற திற்றென விளம்பு கின்றான்." எ-ம். "ஔவிய நெஞ்சத்தா னாக்கமுஞ் செவ்வியான்—கேடு நினைக்கப் படும்." எ-ம். வருவனவற்றுள் ஐகார ஔகாரங்களை ஈரெழுத்தாகக் கொள்ளாக்கால், செய்யுளியலுட்கொண்ட எதுகையோடு மாறுபடவரு மென்க. அதுபற்றி "ஆயிருதொடை" என்னுஞ்செய்யுளியற்சூத்திரத்துள் உரைகாரர் ஐகார ஔகாரம் போலிவகையாற் கிளையெழுத்தெனப்படுமென்றார். இனி நச்சினார்க்கினியார் எழுத்ததிகாரத்துள் போலியெழுத்துக் கொள்ளற்கவென்பர். கொள்ளாவெழுத்திற்கு இலக்கணங்கூறின், அந்நூற்கு நின்று பயனின்மையென்னுங் குற்றந்தங்குமென்க. நன்னூலாரும் போலியைத் தள்ளாது எழுத்திலக்கணம் "பன்னிருபாற்றதுவே" என்றலின், போலி எதுகைநிமித்தம் அங்கீகாரமாயிற்று. இளம்பூரணரும் போலியெழுத்தைக் கொள்ளற்கவென்று கூறாமை அவருரையிற்காண்க. தொல்காப்பியர் இயற்கையாயிரமென ஓரெண்ணுக்கொண்டதன்

றித் தொள்ளாயிரமென்பதன்கட் சந்தி நோக்கி நூறுதிரிந்தவாயிரமுங் கொண்டாற்போலவும், தாமரையென்பது செம்மொழியும் பிரிமொழியுமானாற்போலவும், இயற்கையாய ஓரெழுத்தைகார ஔகாரங்கள் கொண்டதன்றி எதுகைநோக்கி ஈரெழுத்தியைந்த ஐகார ஔகாரங்களுங் கொண்டாரென்க. உயிர்மெய்களை ஒற்றுமைநயங்கருதி ஓரெழுத்தாகவும் வேற்றுமைநயங்கருதி ஈரெழுத்தாகவுங் கொண்டாற்போல, ஐகார ஔகாரங்களையும் அவ்வாறு கொண்டாரென்பதும் ஒன்று. போலியெழுத்தென்பார் இலக்கணப்போலி ஒப்பில்போலிபோல எழுத்துப்போலியுங் கைக்கொண்டு, எதுகை கொள்வாரென்க. மியா, நுந்தையென்பன ஒரு செய்யுட்கும் பயன்படாது இக்காலத்து நின்றாற்போல அஇ, அஉ என்பனவும் இக்காலத்துப் பயன்படாமலே நின்றனவெனினுமமையும். (௫)

௬. கூறிய வையிரண் டானொடுமூன் றுருவ்வோடுபொருட்
டேறிய நான்குமற் றேழொடு கூடி யியைந்தநின்றோ
டாறிய வின்னைந் ததுகுவ் வுடைய அ ஆறில்கண்ணேழ்
தேறிய சத்த மிவற்றுள்ளு மத்தஞ் சிலவுளவே.

இது விபத்தியென்னும் வேற்றுமையும் விபத்தியர்த்தமென்னும் வேற்றுமைப்பொருளுங் கூறுகின்றது. துதியை திருதியை என்றாற்போலத் தொல்காப்பியரும் ‘இரண்டாகுவதே’ ‘மூன்றாகுவதே’ ‘நான்காகுவதே’ என மொழிபெயர்த்துக் கூறுவர். துதியையாகிய ஐ இரண்டாம்வேற்றுமையாம். திருதியையாகிய ஆன், ஒடு மூன்றாம்வேற்றுமையாம். சதுர்த்தியாகிய கு நான்காம்வேற்றுமையாம்; சதுர்த்தியர்த்தமாகிய பொருட்டு நான்காம்வேற்றுமைப்பொருளாம். பஞ்சமியாகிய இன் ஐந்தாம்வேற்றுமையாம்; பஞ்சமியர்த்தமாகிய மேனின்று என்பது ஐந்தாம்வேற்றுமைப்பொருளாம். மற்றென்ற மிகையானே மேனின்று எனவியைந்து வருதலுமன்றித் தனியே நின்று எனவும் வரும். சட்டியாகிய அது, அ என்பன ஒருமைக்கும் பன்மைக்கும் ஆறாம்வேற்றுமையாம்; சட்டியர்த்தமாகிய கு, உடைய என்பன ஆறாம்வேற்றுமைப்பொருளாம். சத்தமியாகிய இல் ஏழாம்வேற்றுமையாம்; சத்தமியுஞ் சத்தமியர்த்தமுமாகிய கண் ஏழாம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமைப்பொருளுமாம். கால், புறம், அகம் முதலாயின சத்தமியர்த்தமென்னும் ஏழாம்வேற்றுமைப்பொருளும் ஏழாமுருபேற்றசொல்லின் ஏகதேசமுமாம். எ - று.

இதனுட் கூறுதன உழி, மாறு என்னுமிடைச்சொற்களும், கொண்டென்னுமெச்சமும், திருதியையர்த்தமாகிய ஆன் என்னும் வேற்றுமைப்பொருளாம். ஆசாரியதண்டிகள் உவமவுருபகளைச் சாத்திரியென்றும், ஒப்பில்வழியாற்பொருள் செய்வனவற்றை ஆர்த்தியென்றும், கூறுவர். அவ்வாறு சேனாவரையர் முதலாயினோருமபொருளென்றும் பொருட்டென்றுங் கூறுவர்.

உ-ம். 'நிலத்தைக் கடந்தான்.' எ-ம். 'தச்சனால் இயற்றப்பட்டது மாடம்;' 'வேலாலெறிந்தான்;' 'கொடியொடு துவக்குண்டான்;' 'ஊசியொடுகுயின்ற தூசு.' எ-ம். 'இரப்பானுக்குச் சோறிட்டான்;' 'நகுதற்பொருட்டன்று நட்டல.' எ-ம். 'கள்ளரினஞ்சும;' 'போதாரமளியின்மேனின்றும் புரண்டிங்ஙன்;' 'சிறுகணையானையொடு பெருந்தேரெய்தி யாமவணின்றும் வருதும்.' எ-ம். 'சாத்தனதுகை,' 'சம்பந்தன செந்தமிழ்;' 'நம்பிக்கு மகன்;' 'தம்முடைய தண்ணளி;' 'என்னுடைய தோழி.' எ-ம். 'ஊரிலேயிருந்தான்.' எ-ம். வரும். வடமொழியுள் பரிமெளலி, அநுகரி, அதிகாகம் என்பன சத்தமியர்த்தமாதற்போல, உள்ளூர, கீழ்நீர், மீகண், என மாறி நின்றும், 'ஊர்க்கணிருந்தான்;' 'ஊர்க்கானிவந்தபொதும்பர்;' 'ஊரப்புறத்திருந்தான்' என மாறி நில்லாதும், முறையே வருவது காண்க. 'இடைக்கண் முரிந்தார்;' 'கடைக்கால்;' 'தலைக்கணணதாகி;' 'அஃறிணை மருங்கிற் கிளந்தாங்கியலும்' என்பனவற்றுள் இடை, கடை, தலை, மருங்கு என்பன ஓரிடத்தினேகதேசமாகியும், கண், கால், இல் எனபன உருபாகியும், மாறியிரட்டித்தும் வருதலின், முன்னின்றனவற்றை ஏகதேசமான இடமாக்கியும், பின்னின்றனவற்றை உருபாக்கியுங் கூறுவர். இரட்டித்து வாராவிடத்து இலென்னுமுருபு லுக்கு ஆயிற்றென்பர் வடநூலார். கண், கால், புறம், அகம் முதலாயின அவ்வியயமென்னும் உபசர்க்கமாயினும், அவை ஓரிடத்தில் ஏகதேசமாகவும் பொருள்படுமென்பதுபற்றி நன்னூலாரும் "இடப்பொருளுருபே" என விதந்தோதினு. உருபுகள் பிறிதோருருபுமாத்திரையாய் நிற்பனவற்றையும் வேற்றுமைப்பொருட்டெனறும், பொருளென்றும் சேனாவரையர் முதலாயினோருமுரைப்பர். 'இயல்புளிக்கோலோச்சும்' 'மரபுளிவழா' 'இதன் மாறென்னும்' 'சிறந்தோன் பேரன பிறந்த மாறே' 'விழித்தகண் வேல்கொண் டெறிய' என்பனவும் ஆனென்னும் மூன்றும் வேற்றுமைப்பொருளாயினவாறு காண்க. இவற்றைத் தொல்காப்பியர் "வேற்றுமைப் பொருள்வயி னுருபா குநவும்" என்பர். அது சேனாவரையருரையானுங் காண்க.

இனிச் சகார்த்தமாய் வந்த திருதியையைச் சகார்த்தத்திருதியை என்றும், சகார்த்தமென்றும், தாதர்த்தியமாய் வந்த சதுர்த்தியைத் தாதர்த்தியேசதுர்த்தி என்றும், தாதர்த்தியமென்றும், தும் என்பதினர்த்தமாய் வந்த சதுர்த்தியைத் துமர்த்தமென்றும், சத்தமியர்த்தமாய் வந்த கண், கால் முதலிய உபசர்க்கத்தைச் சத்தமியர்த்தமென்றும், தும் என்பதினர்த்தமாய் வந்த துவா என்பதைத் துமர்த்தமென்றும், ணிச் என்பதினர்த்தமாய் வந்த சொல்லை ணிசர்த்தமென்றும், தத்திதார்த்தமாய் வந்த துவிகுமாசனைத் தத்திதார்த்தமென்றும், சுவார்த்தமாய் வந்த பிரத்தியயத்தைச் சுவார்த்தப் பிரத்தியயமென்றும், சுவார்த்தமென்றும், அதுவே பிரகிருதியர்த்தமென்றும், இன்னும் பல கூறுவர். இனிச் சகார்த்தபதத்தை உத்தரத்திலேயுடைய திருதியையைச் சகார்த்தத்திருதியையென்றும், ஒன்றனிமித்தத்தைத் தாதார்த்தியமென்றும், கூறுவாருமுளர். அவையெல்லாம் மேலாண்டாண்டுக் காண்க. (௬)

௭. பன்னும் பகாப்பதப் பேரே பிராதி பதிகமது, ஞா
னனுங் குறிபெற் றொருமை யிருமை தொகைவில்பன்
மை, யென்னும் பிரதமை சேர்ந்தெழு வாயென லாமி
வைபோய், மன்னும் பிறவுரு பாறொடு வாறு வட
மொழிக்கே.

‘குறி’ லிங்கம். ‘துன்னுங்குறி’ பொருளை நீங்காத குணமென்னுஞ்சாத்திரலிங்கம், உபசாரத்தால் அச்சொன்மேனின்றது.

இது "பொதுவெழுத் தானுஞ் சிறப்பெழுத் தானும்" என்னும் நன்னூற்சூத்திரம் வடமொழிப்பாகுபாட்டிலக்கணங் கூறினாற்போல, வடமொழியகண்டபதத்திற்குப் பெயரும் மேற்பிரதமாவிபத்தியென்னும் முதல்வேற்றுமையுருபு முதலிய உருபு பெறுமாறுங்கூறுகின்றது. பெயர்ப்பகாப்பதம் பிராதிபதிகமாம். அது குறி பெற்று, ஏகவசனமும், துவிவசனமும், வெகுவசனமுமாகிய பிரதமாவிபத்தியோடு சேர்ந்து, கருத்தாவென்னும் எழுவாயாம். இம்மூன்றுவசனமும் போக, ஒன்று மூன்றாகிய ஐ முதலிய விபத்திகளாறொடும் பொருந்தும். எ - று.

‘அருத்தவ ததாதப் பிரத்திய மாகித்—திருத்தக நிற்பது பிராதிபதிகம்.’ இஃதுரைச்சூத்திரம். மன்னுமென்பது வினைமுற்று.

உ - ம். இறை, உமை, தையல், கோ, வேள், பெண்டு, நாய், நரி, நிலம், நீர் என்னும் பெயர்ப்பகாப்பதங்களைப் பிராதிபதிகமென்றும், அவை பிராதிபதிகமாவதன்றி முதல்வேற்றுமையுருபு பெற்

றனவல்லவென்றும், அவை எழுவாயாகாவென்றும், பின்னர் அன், அர், ஆள், ஆர், கள் என்னும் பிரதமாவிபத்தியாகிய முதல் வேற்றுமையுருபோடு புணர்ந்து, இறைவன், இறைவர், உமையாள், தையலாள், தையலார் என நிற்குமென்றும், 'இறை கடியன்;' 'இறை காக்கும்;' 'உமையமர்ந்து விளங்கும்;' 'தையல் வரும்' என அன்னீறும் ஆளீறும் பெருது நின்றவற்றை அன்னிறு ஆளீறு என்னுஞ் சுப்பிரத்தியயமுதலாயின வந்து லோபமாயினவென்றும், கூறுவர். அன்றியும், கோ, வேள், பெண்டு என்னுமுயர்திணையியற்பெயரும், நாய், நரி முதலிய அஃறிணையியற்பெயரும், அவன், அவர், அவள், அது, அவை என்பனபோல ஒருமையீறும் பன்மையீறுங் காட்டாது நின்று, பின் கள்ளீறு பெற்று,கோக்கள், வேள்கள், பெண்டுகள், நாய்கள், நரிகள் என வெகுவசனமாதற் போலவென்று கூறுவர். இவ்வாறு ஒருமைக்கும் பன்மைக்குமன்றி இருமைக்கும் வேறுவிபத்தி வந்து பிரதமாவிபத்தியாமென்றும், இம்மூன்று விபத்தியும் போக இறையென நிறுத்தி, வனை, வரை, வனோடு, வரோடு, வற்கு, வர்க்கு, வனின், வரின், வனது, வரது, வன்கண், வர்கண் என வருவித்து, இறைவனை, இறைவரை, இறைவனொடு, இறைவரோடு, இறைவற்கு, இறைவர்க்கு, இறைவனின, இறைவரின், இறைவனது, இறைவரது, இறைவன்கண், இறைவர் கண் என நின்றாற்போல, ஐம்முதலிய விபத்திகளாறும் ஒன்று மூன்றாகி அவ்வாறு புணர்ந்து சகண்டபதம் இருபத்தொன்றாமெனறும், கூறுவர். ஒருமை பன்மை யென்றொழமல் இருமையென வகுக்குமாறென்னையெனின்,—பன்மையுள் சில பலவென்னுஞ் சுருக்கப்பெருக்கம் பற்றிய வழக்குப்போலவென்க. இருமைக்குதாரணம் வடமொழிக்கல்லது தமிழ்மொழிக்கில்லையென்க. வருமொழிப்பொருளை ஒருமை பன்மையாக்கவேண்டி, அது, அ என ஆறனுருபு இரண்டாய் வந்தாற்போல, வடநூலார் நிலைமொழிப்பொருளை ஒருமை, இருமை, பன்மையாக்க வேண்டி, எழுவாய்விபத்தி முதல் எழுவிபத்தியும் ஒன்று மூன்றாய் இருபத்தொன்றாமென்பர். இனி ஏகமென்னும் பதத்தில் ஒருமையீறாய் வரும் எழுருபுமன்றி இருமை பன்மையீறாய் வரும் பதினன்குருபும் வடமொழிக்குமில்லை. பாணினி பிராதிபதிகத்தையும் தாதுநிட்பன்னமென்றாராலெனின்,—எழுத்துமாறாட்டமென்னும் அக்கரப்பிரஞ்சம் வாராமைபற்றி அவ்வாறுரைத்தாரென்பர் பாடியகாரர். இனித் தொல்காப்பியரும், தமிழில் "எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே." என்றாராயினும், வடநூலில் எழுவாய்வேற்றுமை இவ்வாறிருக்குமென்றறிதற்கு நும் என்னுமொருபெயரைமாத்திரம்

எழுவாய் வேற்றுமையாக்காது பிராதிபதிகமாக்கி, பின்னர் நும்மை, நுங்கண் என இரண்டுமுதல் எழிறுதியும் வேறுபடுத்து வேற்றுமையாக்கினாற்போல, "அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை" என்னுஞ் சூத்திரவிதிகொண்டு நீயிரென வேறுபடுத்து, எழுவாய் வேற்றுமையென்னும் பிரதமாவிபத்தியாக்குவர். இவ்வாறு நின், தன், தம், என், எம், நம் என்பனவற்றையும் பிராதி பதிகமாக்கி, பின் நீ, தான், தாம், யான், யாம், நாம் எனத் திரிந்தனவற்றை எழுவாய்வேற்றுமையாக்காமையானும், "எல்லாநீயிர்நீ" எ-ம் பெயரியலுள் "நீயிர் நீயென வரூஉங் கிளவி" எ-ம். பெயர்ப்பிராதிபதிகமாகச் சூத்திரஞ்செய்தலானும், "அல்லதன் மருங்கிற் சொல்லுங் காலை" என்னுஞ் சூத்திரத்தை வடமொழிக்கு எழுவாய்வேற்றுமை யிவ்வாறிருக்குமென்று தமிழ்நூலோர் அறிதற்கே செய்தாரெனக. நிலைமொழி விகாரமொழி எட்டாம்வேற்றுமையானாற்போல நும்மென்னு நிலைமொழிவிகாரம் முதல்வேற்றுமையாமெனக. மேலவருஞ் சமத்தபதம், தத்திதன், கிருதந்தம், பாவபதம் என நான்கும் பிராதிபதிகமெனப் பெயர்பெற்று, வேற்றுமையேழுமேற்று சுபந்தமென நிற்குமெனக. (எ)

அ. தோற்றுந் தமிழுக் கெழுவாய் விபத்தி திரிபில்பெயர்,
தோற்றும் பிறவுரு போராறும் வேற்றுமை தோன்றநி
ற்கு, மாற்றுங் கருத்தாக் கருமங் கரண மவைகொள்
வோன், சாற்றுந் தொழிற்கிட மென்றறு காரக தாமு
ளவே.

இது தமிழ்ப்பெயர் உருபேற்றலும், காரகமாதலுங் கூறுகின்றது. தமிழுக்கு எழுவாய்வேற்றுமை ரூபபேதமின்றித் திரிபில்பெயராம். அஃதல்லாத உருபுகளாறும் ரூபபேதந்தோன்ற வரும். கருத்தா முதலாகக் காரகமாகிய வினை ஆறுள. எ - று.

"வினையே செய்வது" என்னுஞ்சூத்திரத்துள், சேனாவரையரும் அவ்வெட்டினையுங் காரகமென்பர். செய்யுளாகலின், அவதினைய முன் வைத்தார். 'பன்னும்பகாபதம்' என்னும் பாட்டுப் பிறமதங்கூறி இப்பாட்டுத் தந்துணிபுரைத்தல்.

பெயர்க்கு ரூபபேதங் காட்டும் வேற்றுமையுருபு வடமொழிக்கல்லது தமிழ்மொழிக்கில்லாமை கண்டு, 'எழுவாய் விபத்தி திரிபில்பெயர்' என்றும். "எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே." "எழுவா யுருபு திரிபில் பெயரே." எனத் தொல்காப்பியனாரும் நன்னூலாருங் கூறினாரென்க. இனி உரையாசிரியரும் நச்சி

ஞார்க்கினியரும், பெயர் தனித்து நின்ற காலை எழுவாய் வேற்று மையாகாதென்றும், அது "பெயர்தோன்று நிலை" என்பதற்கு கலி ந்து பயனிலை தோன்ற நிற்குநிலையாகிய அவசரத்தில் எழுவாய்வே ற்றுமையாமென்றும், உரைத்தார். பெயர்தாம் பயனிலை தோன்ற நின்றாற் கர்த்திருகாரகமென்னும் எழுவாயாவதன்றி ரூபபேதம் பெற்ற எழுவாய்வேற்றுமையாமோவென மறுக்க. அன்றியும், அவ் வாறே 'நிலங்கடந்தான்' முதற் 'குன்றக்கூகை' இறுதியாக ஆறுரு பும் வாராது தத்தம்பயனிலை தோன்ற நிற்குநிலைமையேயமையும். அங்ஙனம் அமைவனவற்றை "ஐயெனப் பெயரிய" "ஒடுவெனப் பெயரிய" எனப் பெயரொழிந்த ஆறுவிபத்தியும் எடுத்தோதியது நின்றுபயனின்மையென்னும் நூற்குற்றந் தங்குதற்கோவெனக்கூறி மறுத்து, அஃதுரையன்மையாதலறிக. இனிச் சேனாவரையர், அச்சூ த்திரத்திற்கு, முதல்வேற்றுமையாவது பெயர் தோன்றியதுணையாய் நிற்குநிலைமையென்றும், பெயர்தோன்றிய துணையாய் நிற்குநிலைமை யாவது உருபும் விளியுமேலாமையும் பிறிதொன்றனோடு தொடரா மையும் நிற்குநிலைமையென்றும் கூறி, பொருண்மைசுட்டலுள் உரு பேற்றல் பெயர்க்கிலக்கணமாயினும் உருபேலாதவழியும் பெயரா மாறுபோல எழுவாய்வேற்றுமை கிரியாசமாத்தியாகிய பயனிலை கொள்ளாதவழியும் எழுவாய்வேற்றுமையேயாமென்றும்,செயப்படு பொருண் முதலியவற்றிற்குங் கருத்தாவிற்கும் பொருண்மாத்தி ரமேரூபபேதங்காட்டும் வேற்றுமையென்றும்,பன்மைபற்றிய வழக் காலே ரூபபேதங்காட்டாத கருத்தாவாகிய பெயரையும் எழுவாய் வேற்றுமையென்றாரென்றுங் கூறி, உரையாசிரியர் முதலாயினாரை மறுத்தலானும், யாமுரைத்ததே பூருவாசிரியர்க்குங் கருத்தாயி ற்று. பின்னூல் செய்த குணவீரபண்டிதரும் "பெயரெழுவாய் வேற்றுமையாம் பின்பதுதா னுறு—பயனிலையு மேற்கப் படுதல்-கயல்விழியா—யீற்றி னுருபாறு மேற்றன்முக் காலமுந்—தோற் றாமை நிற்ற றுணிவு." என நேமிநாதத்துட்கூறினார். ஆதலால், பெயரொழிந்த 'பிறவுரு போராறும் வேற்றுமைதோன்ற நிற்கும்' என்றும். 'விபத்தி வேற்றுமை யுருபெண விளம்புவர்.' இஃது ரைச்சூத்திரம். "எற்கு மெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்— வேற்றுமை செய்வன வெட்டே வேற்றுமை." எனப் பொருள்வே ற்றுமைப்படும் உருபேற்ற பெயரையும் வேற்றுமையென்றது வேற் றுமைசெய்யும் உருபைமாத்திரம் வேற்றுமையென்பர் நன்னூலார். தொல்காப்பியர் "உருபுதொடர்ந்தடுக்கிய வேற்றுமைக் கிளவி", "ஐயெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" என உருபேற்ற பெய ரையும் உருபையும் வேற்றுமைக்கிளவியென்பர். (அ)

௯. பழியா வினைசெய் பவன்கருத் தாச்செயப் பட்டபொரு
ளழியாது நிற்குங் கருமங் கருவி யருங்கரண
மொழியாது கொள்பவன் சம்பிர தான மொழிபவதி
யிழியா வதிகர ணந்தா னிடமென்ப ரேந்திழையே.

இது காரகமாறினுக்கும் பிரதிபதமும் பன்மைபற்றிய வழக்கான் நிருத்தியுங்கூறுகின்றது. (௯)

௧௦. இந்திரன் றாமரை யைக்கரத் தாற்கொய் திறைவனுக்
குத், தந்திருங் குற்றத்தி னீங்கிவிண் மேலிருந் தானெ
னலும், வந்தருங் காரக மெல்லாம் பிறக்குமோர் வா
க்கியத்துட், சிந்தூர வானுதற் செவ்வாய்க் குறுந
கைத் தேமொழியே.

இஃது அறுவகைக்காரகத்திற்கும் உதாரணக்காரிகை. (௧௦)

௧௧. ஏயுங் கருமஞ் சுதந்திர மேதுவென் றெண்ணவிரிந்
தரியுங் கருத்த னபிகித மொன்றே யநபிகிதஞ்
சாயும் பிரிவி னபாதான மாகுஞ் சலமசலங்
காயுங் கதிர்வடி வேல்விழித் தேமொழிக் காரிகையே.

இது கர்த்திருகாரகபேதமும் அபாதானகாரகபேதமும் கூறுகின்றது. கருத்தாவுள், கருமமுதலாக ஏதுவீறாக அபிகிதகருத்தா மூன்றுவகைப்படும், அநபிகிதகருத்தா ஒன்றேயாம். அபாதானம் சலம், அசலமென இருவகைப்படும். எ - று.

உ - ம். 'கூரை மேய்ந்தது;' 'கன்று விட்டுக்கொண்டது;' 'பசுக்கறந்தது;' 'திண்ணைமெழுகிற்று;' 'சோறட்டது;' 'கறிபொரித்தது' எனக் கர்த்திருவற்பாவமெனுங்கருமகருத்தா வரும். "செயப்படுபொருளைச் செய்தது போல" என்னுஞ்சூத்திரத்துள், சேனாவரையர் 'அரிசி தானேயட்டது' எனவுதாரணங்காட்டி, அத்துணை எளிதினடப்படுமெனவுங் கூறுவர். இனிக் குணிவிருத்திகாரர் "பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னாப்—பிற்பகற் றாமே வரும்." "பெரியவர் கேண்மை பிறைபோல நாளும்—வரிசை வரிசையா னந்தும் - வரிசையால்—வானூர் மதியம்போல் வைகலுந் தேயுமே—தானே சிறியார் தொடர்பு." என்னும் இவற்றுள் 'தாமே' 'தானே' என்னுஞ் சுயமேவபதந்தொடர்ந்த 'வரும்' 'நந்தும்' 'தேயும்' என்னும் அகன்மக பரஸ்மைபதமென்னுஞ் செயப்படுபொருள் குன்றிய வினைமுற்றுச்சொல்லோடு வருங் கருமத்தைக்

கருமகருத்தாவென்பர். இவை சகன்மகபரஸ்மைபதமென்னுஞ் செயப்படுபொருள் குன்றாத வினைமுற்றுச்சொல்லோடு முடியாமையின், பாடியகாரர் கருமகருத்தாவாகாவென்பர். பாடியகாரரு க்குமுன் குணிவிருத்தி, பாடியகாரருக்குப்பின் காசிகாவிருத்தி எனவறிக. 'இனி எழுத்தாணியெழுதும்;' "கண்ணவனை யல்லது காணா செவியவன—தெண்ணருஞ்சீ ரல்ல திசைகேளா—வண்ணல்—கழலடி யலலது கைதொழா வந்தா—லழலங்கைக் கொண்டான்மாட் டன்பு." "கோளில் பொறியிற் குணமிலவே யெண்குணத்தான்—றாளை வணங்காத் தலை." எனக் கருவி கருத்தாவாகியும், "இரப்பவ ரென்பெறினுங் கொள்வர்" எனச் சம்பிரதானங் கருத்தாவாகியும், "அகழ்வாரைத் தாங்கு நிலம்போல" "அறநோக்கி யாற்றுங்கொல் வையம்" "வசையிலாவண் பயன் குன்று மிசையிலா—யாக்கை பொறுத்த நிலம்." என அதிகரணங் கருத்தாவாகியும், வந்தனவல்லவோவெனின், அலலவென்க. என்னை? அபிகிதகருத்தாவும் அபிகிதகருமமும் பிரதமையோடே வருமெனவும், ஒழிந்த கரணமும், சம்பிரதானமும், அவதியும், அதிகரணமும் பிரதமையோடு வாராவெனவும், 'ஆதிய தென்பது' என்னும் பாட்டினும் 'ஆறுருபு மைந்தொடும்' என்னும் பாட்டினும் விதித்தமையாலென்க.

'தேவதத்தன் சோற்றையட்டான்;' 'சோற்றையட்டான்றேவதத்தன்' இவை சுதந்திரகருத்தா.

'தேவதத்தன் எஞ்ஞதத்தனையஞ்சுவித்தான்;' 'ஆசாரியன் மாணாக்கனையறிவித்தான' இவை ஏதுகருத்தா. 'ஏவுதற் கருத்தாப் பிரயோசகனே—இயற்றுதற் கருத்தாப் பிரயோச் சியனே.' இது துரைச்சூத்திரம். இனிக் காரிய காரணத்தொடரின் அவ்வினைக் கண்ணும் வரும். உ - ம். 'அலலுழப்பிக்குஞ் சூது.' 'அம்மநோய்பீட்டிக்கும்' 'அறிவிப்ப போலும்' 'துறந்தமை தேற்றுகொல்' என வரும்.

'தச்சனாலெடுக்கப்பட்டது மாடம்;' 'மாடந்தச்சனாலெடுக்கப் பட்டது.' இவை அபிகிதகருத்தா.

'ஏயும்' என்ற மிகையாற் பாவகருத்தாவுமுண்டு. கருமமும் கருத்தாவும் தடுமாறி நிற்றலுமுண்டு. உ - ம். "தேரான் றெளிவுந் தெளிந்தான் கணையுறவுந்—தீரா விடும்பை தரும்." "கோறல்—பிறவினை யெல்லாந் தரும்." இவை பாவகருத்தா. "ஒத்த கிழவனுங் கிழத்தியுங் காண்ப." இது தடுமாறி நிற்றல்.

சலம்: 'குதிரையினிழிந்தான்.' அசலம்: 'மலையினிழிந்தான்.' 'நிலைத்திணையசல மியங்குதிணை சலமே.' 'சொல்லப் படுநிலை சொல்

டை டாநிலை—டபிகித மாம் சிதவென மொழிப—தெரிநிலை தெரியா நிலையென வம்பெயராகும்.' இவை உரைச்சூத்திரம்.

'சாயுப' என்பன பிறகைபோல சலமும் அசலமுமன்றி "குடைப்பி டித்த குற்றத்தினீங்கி" எ-ம். "றுமைய னீங்கிய வின்சொல்" எ-ம். வரும் புறப்பாட்டெல்லையென்னும் வெளிச்சிமைக்கண் வரு வது அபாதானம். (கக)

கஉ. அண்ணிய கர்மந் தபிகித மொன்றே யநபிகிதங், கண் ணிய விச்சித நன்றெ டநீச்சிதந் தானிருமை.யெண் ணிய நற்கருத் தாவொ டகதித மென்றுரைந்தாங், கண்ணிய காலை யகம்புற மாகுங் கரணங்களே.

இது கருமகாரகபேதமும் கரணகாரகபேதமுங் கூறுகின்றது. கருமத்துள், அபிகிதகருமம் ஒன்றேயாம், அநபிகிதகருமம் ஐந்து வகைப்படும். அகம், புறம் எனக் கரணம் இருவகைப்படும். எ-று. 'கள்' அசை.

உ-ம். 'மாடந்தச்சனுலியற்றப்பட்டது;' 'தச்சனுலியற்றப்பட்டது மாடம்' இவை அபிகிதகன்மம.

'பாயை நெய்தான்;' 'பொன்னையடைப்பட்டோர் வறியர்;' 'சோற்றையுண்டான்;' 'துவரப்பத்தான்;' 'வேலியைப்பிரித்தான்;' 'நஞ்சையுண்டான்' இவை அநபிகிதத்துள் ஈச்சிதகருமம். 'சோற் றைக்குழைத்தான்;' 'திக்கனைவைக்கண்டான்;' 'வழிசெலப் புகுந் தான் வாணிகனைக் கண்டான்;' ஒளிநெய்திநுழிழக்குஞ்சுதர்.' இவை அநபிகிதத்துள் அநீச்சிதகர்மம். இவற்றைக் கல்லாடர் முத லாயினர் கருத்துள்வழிச் செயப்படுபொருள், கருத்தில்வழிச்செய ப்படுபொருள் எனபா. 'ஈச்சிதந் தனதே டநீச்சிதந் தாமே— கருத்துள் வழியில வழிச்செயப் படுபொருள்.' இஃதுரைச்சூத்தி ரம். 'ஊரைச் செல்வான் பசும்புலலை மிதித்தான்;' 'பாற்சோறுண் கின்ற சிறுவன் அதன்கண்வீழ்ந்த தூளியைத் தின்றான்.' இவை அநபிகிதத்துள் ஈச்சிதாநீச்சிதகாமம். பசும்புல்லை மிதித்தலும் தூளி யைத் தின்றலும் அநீச்சிதம், ஊரைச்சேறலும், பாற்சோற்றையுண் டலும் ஈச்சிதமாமென்க.

'மாணாக்கனையூர்க்குப் போக்கினானாசிரியன்;' 'மகட்போக்கிய தாய்' என்புழிமாணாக்கன், மகள் என்னுமிருவரும் தனித்தனியே போவாரும் போக்கப்படுவாருமாகலின், கர்த்திருகருமமாம். 'தன் னைத் தந்த கற்பகம்;' 'தன்னைத் தான காதலன்;' 'நாணுலுயிரைத் துறப்பர்;' 'நன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை—நிலைக

லக்கிக் கீழிடு வானு நிலையினு—மேன்மே லுயர நிறுப்பானுந் தன்னைத்—தலையாகச் செய்வானுந் தான்.'' என வருஞ்செய்யுட்களும் கன்மவற்பாவமான காத்திருகருமமாம். வடநூலார் 'ஆத்மாநஞ்சிநத்தி' என்பதனைத் தமிழார் 'தன்னைக் குத்தினான்' என்பர். இதுவுமது.

'பசுவினைப் பாலினைக் கறந்தான்;' 'ஆனையைக் கோட்டைக் குறைத்தான்' இவை கதிதமல்லாத அகதிதகருமம். 'துணைநிலையகதிதந் துகன்மக மென்பர்.' இஃதுரைச்சூத்திரம். 'ஆசாரியனையை யுற்றபொருளை வினவினான்' என்பது பசுவினது ஆனையினது எனப்பொருள்படுதல்போல ஆசாரியனது எனப் பொருள்படாது வந்த அகதிதம்.

'அண்ணிய' என்ற மிகையால் அகநிலைச்செயப்படுபொருளென்னும் அந்தர்ப்பாவிதகருமமுங்கொள்க. அது 'வந்தான்' என்றால் வருதலைச்செய்தான் எனக் கருமபாவத்தின்மேல் துதியை விரிந்து நிற்குமென்க. ''எரினுழாஅர்'' என்புழிப் பரிமேலழகியாரும் இவ்வாறு விரித்தல்காண்க. வடமொழியினும் 'ஆகச்சதி ஆகமநங்கரோதி' என வரும்.

இனி வாக்கியபதீயத்துள்ளும் கையடத்துள்ளும், நிர்வர்த்தியம், விகாரியம், பிராப்பியம் எனக் கூறியவண்ணம், சேனாவரையர் முதலாயினார் இயற்றப்படுவதும், வேறுபடுக்கப்படுவதும், எய்தப்படுவதுமெனச் செயப்படுபொருளை மூன்றாக்குவர். இயற்றுதலாவது முன்னில்லதனை உண்டாக்குதல், வேறுபடுத்தலாவது முன்னுள்ளதனைப் பிரித்தல், எய்தப்படுதலாவது அவ்விரண்டுமின்றித் தொழிற்பயனையுறுந்துணையாய் நிற்றலென நிருத்தியுங்கூறி, 'எயிலையிழைக்கும்;' 'மரத்தைக் குறைக்கும்;' 'பொருளைப் பெறும்' எனவுதாரணங்காட்டுவர். நன்னூலாரும் ஆக்கல், அழித்தல், அடைதல் முதலாகச் சைனேந்திரன்மதம்பற்றிப் பலவாக்குவர். 'இயற்றப் படுவது நிருவர்த் தியமே.' 'வேறு படுக்கப் படுவது விகாரியம்.' 'பிராப்பிய மெய்தப் படுவதென் றிசைப்பர்.' இவை உரைச்சூத்திரம்.

'பத்துத்திசையும் மனத்தான் மறைத்தபின்;' 'மனத்தான் மறுவில ரேனும்;' 'மனத்தானு மன்னுயிர்க் காக்கம்;' பொச்சாவாக் கருவியாற் போற்றிச் செயின்;' 'உள்ளத்தாலுள்ளல்' இவையெல்லாம் அகக்கரணம்.

'காலானடந்தான்;' 'கண்ணாற்கண்டான்;' 'ஊசியாற்குயின்றான்;' 'நெய்யாலெரிநுதுப்பேம்' எனப் புறக்கரணம் வரும்.

'நாளுலுயிரைத்துறப்பர்;' 'சாத்தன் கையெழுதுமாறு வல்லன் அதனூற்றந்தையுந்தாயுமுவக்கும்;' 'கௌவையாற் காமநுது ப்பேமெனல்' என வருவனவெல்லாம் ஏதுவின்கண் வந்த மூன்றும்வேற்றுமை.

இனி ஏது காரகம், ஞாபகமென இருவகைப்படும். உ-ம். 'வாணிகத்தானூயினுன்' என்பது காரகம். 'முயற்சியாற் பிறத்தலி னெலிநிலையாது' என்பது ஞாபகம். 'அப்பியந் தரமே வாகிய மெ ன்னச்—செப்பிய கரண மகம்புற மாகும்.' இஃதுரைச்சூத்திரம்.

கரு. விடைய மொரோவழி மேவுத லெங்கும் வியாபகமெ
ன்றடையவிம் மூன்று வகையான் விரியு மதிகரணம்,
பெடைமயி லேயநி ராகருத் தாவும் பிரோகமுங்,
கொடையெதிர் கூற்றநு மந்தாவு மாமென்பர் கொள்
பவனே.

இது அதிகரணபேதமும் சம்பிரதானபேதமுங் கூறுகின்றது. விடயமுதன்மூன்றும் அதிகரணமெனப்படும். அநிராகருத்தாமுதன மூன்றும் சம்பிரதானமெனப்படும். எ - று.

'விடய முரிமை விளம்புங் காலே.' 'ஒரோவழி மேவுத லுப ச்சி லேடம்.' 'வேற்றுமை நயத்தால் வேறே யாயினு—மொற்றுமை நயத்தா லொன்றபி வியாபகம்.' இவை உரைச்சூத்திரம். கொடையெதிர் கூற்முகிய கொள்பவனெனக் கூட்டுக. 'எங்கும்வியாபகம்' அபிவியாபகம்.

உ-ம். 'கடலுண்மீன் றிரிகின்றது;' 'காட்டுணரிதிரிகின்றது;' 'நெடும்புனலுள்வெல்லுமுதலே;' 'பகல்வெல்லுங் கூகையைக் காக்கை' இவை விடயாதாரம். 'கடலோடா கால்வ னெடுந்தேர் கட லோடு—நாவாயு மோடா நிலத்து.' 'ஆலத்தின் மேல குவளை குளத் துள—வாலி னெடிய குரங்கு.' இவ்வெதிர்மறையானும் விடயம் உரிமையென்பதறிக.

'மதிக்கண் மறுப்போ லுயர்ந்து;' 'குன்றின்கட்குவடு;' 'கையின்கண் விரல்;' 'ஆண்டின்கணிருந்து.' எ-ம். 'பாயின்கணிருந்தான்;' 'தோக்கணிருந்தான.' எ-ம். சமவாயமும் சையோகமுமாக வந்த உபச்சிலேடம்.

'எள்ளின்கணெய்;' 'தயிரின்கணெய்;' 'அரணிக்கட்டீ;' 'மணியின்கணொளி;' 'உயிரின்க ணுணர்வு' இவை ஒருபொருளின்கட் பிறிதொருபொருள் வேற்றுமையின்றி ஒற்றுமைப்பட்டுக் கலந்த அபிவியாபகம்.

இவ்வுதாரணங்களுள் சிலவாதாரவாதேயங்கள் அருவாயும் உருவாயும் வரும். உ-ம். 'வடக்கண் வேங்கடம்;' 'தெற்கட் குமரி;' 'ஆகாயத்தின்கட் பருந்து;' 'மகத்திற் பிரதானம்;' 'நல்லார்கட் பட்ட வறுமை' எனவரும்.

இனி வடநூலார் உள்ளெனனுஞ் சத்தமிவிபத்தி ஒருபொருளைக் கூட்டிப் பிரித்தலென்னும் யோகவிபாகத்தினும், ஒருபொருளைப் பிரித்துக் கூட்டலென்னும் விபாகயோகத்தினும், ஆதாரமின்றி வருவதனை நிர்த்தாரணை சத்தமியென்பர். உ-ம். 'உடையா ணரசருளேறு;' 'அறன்கடை நின்றாரு ளெல்லாம் பிறன்கடை—நின்றாரிற் பேதையா ரில.' எ-ம். 'வையத்தின் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையுந்—தெய்வத்துள் வைக்கப் படும்.' 'ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான—செத்தாருள் வைக்கப் படும்.' எ-ம். வரும். இவை அதிகரணமன்மையறிக. 'முறைசெய்து காப்பாற்று மன்னவன் மக்கட்—கிறையென்று வைக்கப் படும.' இது சத்தமி வருமிடத்துச் சட்டி வருதலின், நிர்த்தாரணைச் சட்டியெனப்படும.

'முக்கண் மூர்த்திக்குப் பூவிட்டான்,' 'கள்ளார் கழுழாயுங் கணவாலுங் கூவிளையு—முள்ளார முளரியு மாம்பலு முன கண்டக் காற்--புள்ளாயோ ரேனமாய்ப் புக்கிடந்தான் பொன்னடிக்கென--றுள்ளாதா ருள்ளத்தை யள்ளமாக் கொள்ளோமே.' இவை அநிராகர்த்திருசம்பிரதானம.

'வறியார்க்கொன் றீதலே யீதல்.' 'இரப்பார்க்கொன் றீதல்' இவை பிரேரகசம்பிரதானம்.

'ஆசாரியன் மாணாக்கனுக்குக் கசையடிகொடுத்தான்' இது அநுமந்திருசம்பிரதானம். 'அருமறை சோரு மறிவிலான் செயயும—பெருமிறை தானே தனக்கு.' என அபேததத்தினும் வரும். (கங)

கச. ஆதிய தென்ப ரபிகித கர்த்தா வநபிகித, மாதி
டாறொடு மூன்றும் பெறுமென்ப ராய்ந்துணர்ந்தோர,
ராதிய தென்ப ரபிகித கன்ம மநபிகித, மாதியைந்
தேமொழிந் தல்லா தனபெறு மாரணங்கே.

இஃது ஒருகாரகபதம் பலவுருபுகளோடு வருதல் கூறுகின்றது. அபிகிதகருத்தாப் பிரதமையோடு வரும். அநபிகிதகருத்தாத் திருதியை, சட்டியெனனும் இரண்டோடும் வரும். அபிகிதகருமம். பிரதமையோடு வரும். அநபிகிதகருமம் துதியை, திருதியை, சதுர்த்தி, சட்டியென்னும் இந்நான்கோடும் வரும். எ - று.

உ-ம். 'திண்ணை மெழுகிற்று;' 'தேவதத்தன் சோற்றையுட் டான்;' 'விழுமியோர்க் கணைமையினைச் செய்வா' என அபிகிதகருத் தாப் பிரதமாவிபத்தியால வந்தது. 'அவர்க்குச் செய்யத்தகு மக்காரியம்;' 'அவராற் செய்யத்தகுமக்காரியம்' என அநபிகிதகருத்தா வோடு ஆறும் மூன்றும் வரும. "வினைமுதல் கருவியனைமுதற் றதுவே." என்பதனாற கருத்தா மூன்றனுருபு பெறுதலோடு நான்கு ஆறு பெறுதலுங்கொள்க. நான்குக் குகரம் ஆறனுருபு.

'சோறு தேவதத்தனாலடப்பட்டது' என அபிகிதகருமம் பிர தமையோடுவந்தது.

'நூலையறிந்தான்;' 'மரத்தைக் குறைத்தான' என அநபிகித கன்மம் துதியையோடு வந்தது. 'பாலையோமஞ்செய்தான;' 'பாலா லோமஞ்செய்தான;' 'தயிரையோமஞ்செயதான்;' 'தயிராலோமஞ் செய்தான;' 'ஆலத்தினுமமிர் தாகிய கோன்றிலலை' என அநபிகி தகன்மம் திருதியையால வந்தது. 'ஆலத்தினால' என்னுந் திருக் கோவையாருள் பேராசிரியர் சொற்சேதங்காட்டிய 'பாலாறற யிராக்கினான' என்பதுமது. 'அவனைக் கொள்ளுமிவ்வணிகலம்;' 'அவட்குக் கொள்ளுமிவ்வணிகலம' இது அநபிகிதகருமம் சதுர்த் தியோடு வந்தது. 'நூலைக்குற்றங்கூறினான;' 'நூலதுகுற்றம்;' 'தாயைக் குடர்விளக்கஞ்செய்தான்;' 'தாயதுகுடர்விளக்கம்;' 'அவனை யிகலவெலல லாரக்கு மரிது;' 'அவனதிகல;' 'குடும்பத் தைக் குற்ற மறைப்பா னுடம்பு,' 'குடும்பத்தினது குற்றம்' இவை சட்டியோடு வந்தது. 'கிராமமகச்சத்' 'கிராமாயாகசசத்' என்பத ற்கு 'ஊரைச் சென்றான' 'ஊர்க்குச் சென்றான' என வடமொழி யிலிருந்தவண்ணமே தமிழுரைகாரரும் மொழிபெயாத்து, உதார ணங்காட்டினார். இவற்றை வடநூலார் காமணிசட்டியென்பர். அந பிகிதகன்மமென்னுமிலை 'அநபிநிதம்' என்ற சேடத்தாலே 'தூணைச் சார்ந்தான;' 'தூணினகட்சார்ந்தான;' 'கன்னைக்குத்தினான்;' 'கண்ணுட்குத்தினான்;' 'கோட்டைக் குறைத்தான்;' 'கோட்டின கட்குறைத்தான' என ஏழோடும் வரும்.

இனி இவ்வாறு நேரே முடிக்குஞ்சொல்லோடு வந்த மயக்கங் களைக் காரகவிபத்தியென்பர். 'நூலைக் குற்றங்கூறினான;' 'பாலைத் தயிராக்கினான் ;' 'குடும்பத்தைக் குற்றமறைப்பான' என்பன உபப தத்தோடு முடிதலின், உபபதவிபத்தியென்பர்.

'ஆதிய தென்ப ரபிகித கர்த்தா' 'ஆதிய தென்ப ரபிகித கன் மம்' எனவே, கருமகருத்தாவும், சுதந்திரகருத்தாவும், ஏதுகருத்தா வும், அபிகிதமேயாம. அபிகிதகன்மமொழிந்த ஐந்துகருமமும் அந

பிகிதமாம். ஆயினும், தத்தம்பொருள் வேறுபாட்டால் வேறுகுறி யிட்டாளவேண்டிக் கருத்தாவைந்தென்றும், கருமமேழென்றுங் கூறுவர். (கச)

கரு. ஆறொடு மைந்தொடு மூன்றொடுந் தோன்று மருங்கர ணா, மாறொடு நான்கொடு மூன்றொடுந் தோன்று மளித்தல் கொள்வோன், வீறொடுந் தோன்றுமைந் தன்றிப் பெறாது விடுமவதி, யீறொடுந் தோன்று ங்கண் ணன்றிப் பெறாதிட மேந்திழையே.

இதுவுமது. கரணம் சட்டி, பஞ்சமி, திருதியையென்னும் மூன்றோடும் வரும். சம்பிரதானம் சட்டி, சதுர்த்தி, திருதியையெ ன்னும் மூன்றோடும் வரும். அபாதானம் பஞ்சமியோடு வரும். அதிகரணம் சத்தமியோடு வரும். எ - று. 'ஈறொடும்' என்றது செய்யுள்விகாரம்.

உ - ம். 'செவிக்குக் கேட்கலாம்;' 'செவியாற்கேட்கலாம்;' கண்ணிற்குக் காணலாம்;' 'கண்ணாற்காணலாம்;' 'வாய்க்குத் தக் கது வாச்சி;' 'வாயாற்றக்கது வாச்சி;' 'கோடாலியது வெட்டு;' 'கோடாலியால் வெட்டும் வெட்டு;' 'படலொல்லா பேதைக்கென் கண்;' பேதையாலென்கண்' எனக் கரணம் ஆறனுருபோடு வந்து, ஏதுவின்கரணமாயடங்கும். ஈண்டுப் பேதை கருத்தாவாகாது கரணமாய்க் குகரம் ஆறனுருபான் வந்தது. 'யாங்கண்ணிற்காண நகுப' எனப் பஞ்சமியாற் கரணம் வந்தது. 'நெய்யா லெரிநுது ப்பே மென்றற்றால்' இது திருதியையால் வந்தது.

'நாகரது பலி;' 'நாகர்க்குப் பலி;' 'வரைவின் மகளிரான் மாலை வழங்கியோன்' எனச் சம்பிரதானம் இம்மூன்றனோடும் வந் தது. 'அறிவுடை யந்தண னவனைக் காட்டென்றான்;' 'தவ்வை யைக் காட்டி விடும்' எனச் சம்பிரதானம் வடநூலார் கூறாத இர ண்டனோடும் வந்தது.

'ஐயத்தி னீங்கித் தெளிந்தார்;' 'குடிப்பிறந்து குற்றத்தி னீங்கி;' 'சிறுமையி னீங்கிய வின்சொல்' என அபாதானமென்னு நீக்கம் ஐந்தனகண்ணே வந்தது. 'கிளைப்பானை நீங்குந் திரு;' 'ஊர்க்குத் தீர்ந்தான்' எனத் தமிழில் அபாதானம் துதியையோடும் சதுர்த்தி யோடும் நியமந்தப்பி வந்தது. உவமைசீமை ஏதுவென்பனவற்றி ன்கண்ணும் பஞ்சமிவிபத்தி வரும். நீக்கம் பஞ்சமியிலே வரும் என்பது ஆசிரியர்கருத்து. குற்றத்தினின்றும் ஐயத்தினின்றும்

என விரிக்க. 'வாணிகத்தினாயினான்' என்பதனை வாணிகத்தின் கண்ணின்று மாயினான் என விரிக்கிற் குற்றமாமென்க.

'தேரிலேயிருந்தான்;' 'தேர்க்கணிருந்தான்' என அதிகரணம் ஏழின்கண் வந்தது. 'நெறியிற்சென்றான்;' 'நெறியைச்சென்றான்' என அதிகரணத்துதியை நியமந்தப்பி அகன்மகதாதுவில் வந்தது. வடமொழி நளன்கதையில் 'வனத்திலரமனையைச் சென்றான்' என்னுங்கதிதாதுவுமது. 'அத்துவாநங்கச்சதி' 'அத்துவ நிகச்சதி' என வடமொழியில் வரும். சேனாவரையரும் "வழங்கியன் மருங்கிற்குன்றுவ" என்னுஞ் சூத்திரத்துச் செயப்படுபொருள் குன்றிய வினையையுணர்த்துஞ்சொல் இரண்டாவதனோடியையாதென்றார். இனி "இ ஈ யாகு மையா யாகும்." "ஓவு முவ்வு மேவொடு சிவணும்." "உகரந் தானே குற்றிய லுகரம்." "ஏனை யுயிரே யுயர்திணை மருங்கிற்—றாம்விளி கொள்ளா வென்மனார் புலவர்." இவையெலலாம் நியமவிதிச்சூத்திரம். இந்நியமங்கடந்து 'ஆடூவே;' மகடூவே;' 'திருவே;' 'மகவே' என விளிபெறுதல்போலக் கொள்க. இவ்வாறு வருவன பொருண்மயக்கம். அஃதாவது தன்பொருளிற் றீராது பிறிதொன்றன்பொருட்கட்சென்று உருபேற்ற சொல்லும் உருபுநோக்கிய சொல்லும் சிறுபான்மை தம்முளியைபுடைத்தாதல்.

உருபுமயக்கமாவது தன்பொருளிற்றீர்ந்து பிறிதோருருபின் பொருட்டாதல். அவ்வாறு "யாத னுருபிற் கூறிற் றாயினும்" என்னுஞ்சூத்திரத்துள் சேனாவரையர் முதலாயினோர் கூறியதானுந்தெளிக. உ-ம். 'கிளையரி நாணற் கிழங்குமணற் கீன்ற—முளையோரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்;' 'காலத்தி னாற்செய்த நன்றி' இவற்றுள் நான்கும் மூன்றும் ஏழன்பொருட்டாய் நின்று, உருபேற்ற சொல்லும் உருபுநோக்கிய சொல்லும் தம்முளியையாமலே நின்றன. 'கொக்கினுக்கொழிந்த தீம்பழம்;' 'நாகுவேயொடு நகுபு வீங்கு தோள்' இவற்றுள் நான்கும் மூன்றும் ஐந்தாவதன்பொருட்டாயும் இரண்டாவதன்பொருட்டாயும் நின்றன. 'சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர்.' இதனுள் இன் ஒடுப்பொருட்டாதல் அவ்வுரையிற்காண்க.

'பழியையஞ்சினான்;' 'பழியினஞ்சினான்' என்பது உருபும் பொருளுமுடன் மயக்கம், "அச்சப் பொருளை யிரண்டிடற்கு மைந்திற்கு—மெச்சமில" என்று மயக்கத்துள் விதித்தமையாலென்க. 'புலிகொல் யானை;' 'வாளைமீ னுள்ள றலைப்படல்' இவற்றுள் புலி கருத்தாவாகியும் கருமமாகியும் யானை கருத்தாவாகியும் கருமமாகி

யும் நிற்பதும், வாளைமீன் கருத்தாவாகியும் கருமமாகியும் உள்ளலென்னுங்குருவி கருத்தாவாகியும் கருமமாகியும் நிற்பதும், தடுமாறுதொழிலென்னும் இதரேதரக்கிரியையால் வருமென்க. சாத்தற்கு நெடியன்; 'கருவூர்க்குக் கிழக்கு,' 'மனைவாழ்க்கைக்குப் பற்றுவிட்டான்' இவை பஞ்சமியிற் சதுர்த்தி வந்தது. இவ்வாறு வந்தாலும் அபாதானகாரகமாவதல்லது வேறாகாதென்க. "அச்சக் கிளவிக் கைந்து மிரண்டும்" என்னுஞ் சூத்திரத்துள் 'பழியினஞ்சும்;' 'பழியையஞ்சும்' என இரண்டும் ஒத்தகிழமையவாய் நின்றனவென்றும், அஃதேல் ஒருபொருட்கண் வரினன்றே மயக்கமாவது, இவை செயப்படுபொருளும் ஏதுவுமாகிய பொருள்வேறுபாடுடையவாகலின் மயக்கம் யாதென்றும், அற்றன்று ஈண்டேதுவாதலே அஞ்சப்படுதலாய் வேறின்றி நிற்றலின் ஒருபொருட்கண் வந்தனவேயாமென்றும், சேனாவரையர் உரைத்ததனுமறிக. 'மாலைக்கு வரும்;' 'காலைக்கு வரும்;' 'ஊர்க்குச் சென்றான்' இவை சத்தமியிற் சதுர்த்தி வந்தது. இவ்வாறு காரகபதப்பொருளிற் பலவுருபு வருதல் காண்க. (௧௫)

௧௬. உடனிகழ் கின்ற சகார்த்ததாதி யாகு மொடுச்சொற்
கொள்வோன், விடனிகழ் கின்றருத் தாதர்த்தி யாதி
வினை நிகழ்ச்சி, படனிகழ் கின்றகண் ணேசதி சத்தமி
பான் மொழியாய், கடனிகழ் வேற்றுமை தாப் வினை
யான்முற்றல் காரகமே.

இது மூன்றனுருபும் நான்கனுருபும் ஏழனுருபும் சிறப்புப் பெயர் பெறுமாறும், காரகங்கள் முடிவுபெறுமாறும் கூறுகின்றது. ஒடுவும், ஆனும், கூடவென்னும் பொருளாய்ச் சகார்த்தத்திருதியையென்றும், குகரவுருபு தாதார்த்தியமாய் வந்து தாதார்த்தியே சதுர்த்தியென்றும், ஏழனுருபுகள் தன்வினையும் பிறவினையுமாய நின்ற தொடருள் வினை தன்னைச்சொல்லும் பெயரின்பின்னின்று சதிசத்தமியென்றும், பெயர்பெறும். உருபேற்ற சொற்கள் பெயரால் முடியாது ஆத்மநேபதத்தோடும் பரஸ்மைபதத்தோடும் முடிந்தாற் காரகமாம். எ - று.

வடநூலுள் மூன்றாம்விபத்தி ஒன்றல்லது இரண்டில்லை. தமிழ்நூலுள் ஆன், ஒடுவென மூன்றாவதற்கு வருமாயினும், பொருள் வேறுபாடின்மையின், ஒன்றேயாமெனச் சேனாவரையருங்கூறுவர்.

சதிசத்தமியைத் தொல்காப்பியர் வினைசெய்யிடமென்பர்: பரிமேலழகர் வினைநிகழ்ச்சியென்பர்.

உடனிகழ்வெனினும், ஒருவினையெனினும், கூடவெனினு மொக்கும். ஆதலிற்றொல்காப்பியரும் 'ஒருவினை யொடுச்சொல்' என்பர். ஒடுப்போலே ஆனுருபு சகார்த்தமாய வருவதூஉமன்றித் தொறுமென்னும் பொருளாயும் வரும். உ-ம். 'மாணவகனோடாசிரியன் வந்தான்;' 'ஆசிரியனொடு மாணவகன் வந்தான்;' 'தாயொடு மகள் வந்தாள்;' 'மகளொடு தாய் வந்தாள்;' சிறப்பொடு பூசனை செல்லாது' இவை சகார்த்தத்திருதியையென்னும் அதனோடியைந்த ஒருவினைக்கிளவி. இவ்வொடுச்சொற் கருவி கருத்தாவில வந்த வேற்றுமையும் வேற்றுமைப்பொருளுமாகாது, கூடவென்னுஞ் சகார்த்தப்பொருள ய் நின்றது காணக. 'அறத்தான் வருவதேயின்பம்;' தூங்கு கையா னோங்கு நடைய.' எ-ம். 'ஊரானொருந்தேவகுலம்.' எ-ம். ஆனுருபு சகார்த்தப்பொருளாயும், தொறுமென்னும் பொருளாயும், வந்தது காண்க. 'வீப்பிசை யென்ன விளம்புவர் தொறுவே.' 'ஆதி' என்ற ஆகிருதிகணத்தால் வினையின்மையென்னுங் கிரியாபாவத்தோடும், வேறுவினையென்னும் பின்னக்கிரியையோடும், இதரேதரமென்னும் அதனொடு மயங்கலோடும், அதனொடொப்பலொப்புரையோடும், ஒப்போடும், அபேதத்தோடும், கொண்டெனனுமெச்சப்பொருளோடும் வரும். உ-ம். 'மலையொடு பொருத மாலயானை;' 'கன்றுபதனொடு கழுதைபாரஞ் சுமந்தது.' எ-ம். 'காவொடு டறக்குளந் தொட்டான்;' 'தொடியொடு தொல்கவின் வாடிய தோள்.' எ-ம். 'எண்ணொடு விராயவரிசி;' 'பாலொடு தேன்கலந்தற்றே.' எ-ம். 'பொன்னொடிரும் பனையர் நின்னொடு பிறரே;' 'விலங்கொடு மக்க ளனையர்.' எ-ம். 'ஆன்றுரொ டொப்பர் நிலத்து;' 'மதியொடொக்கு முகம்.' எ-ம். 'எழுத்தொடு புணர்ந்த சொல்ல கும்மே.' எ-ம். 'வேலொடு நின்றான.' எ-ம், முறையே வருவது காண்க.

தாதர்த்தியேசதுர்த்தியாவது கொள்வோனை விட்டு ஆதிகாரணகாரியம் நிமித்தகாரணகாரியம் என்னுமிரண்டன் பின்னரும் வருங்குகரவுருபாம். உ-ம். 'குண்டலத்துக்குப் பொன;' யூபத்திற்கு மரம்;' 'சோற்றுக்கரிசி;' 'ஆடைக்கு நூல்;' 'நூற்குப் பருத்தி;' 'தயிர்க்குப் பால்;' 'எண்ணெய்க்கெள்ளு' இவை ஆதிகாரணகாரியம். 'கூழிற்குக் குற்றேவல் செய்தான;' 'சோற்றிற்குப் பணம்' இவை நிமித்தகாரணகாரியம். இவற்றைத் தொலகாப்பியர் 'அதுவாகுகிளவி, 'அதற்பொருட்டாதல்' என்பர். இவற்றை விரிக்குங்'கால பொருட்டென்னு நிமித்தத்தை விரிக்க. 'அவர்க்குப் பகை;' 'நட்டார்க்குக் காதலன்;' 'வடுகரசர்க்குச் சிறந்தார் சோழியவரசர்;' 'இச்சொற்குப் பொருள்;' 'நினக்கு வலி;' 'அவ்வூர்க்கிவ்வூர்

காதம்;' 'மனைக்குப்பாழ் வாணுதலின்மை;' 'உற்றார்க் குரியர் பொற்றொடி மகளிர்' என வருவனவெல்லாம் ஆறாவதன்பாற்படும். 'பொருட்டு நிமித்தஞ் சமானார்த் தகவே.' அது 'நாணா லுயிரைத் துறப்ப ருயிர்ப்பொருட்டா—னாண்டுறவார்' என வருதலானுமறிக. ஆதிசத்தத்தால் 'பூவிற்குச் சென்றான்;' 'துன்பத்திற் கியாரே துணையாவார்;' 'மறத்திற்கு மஃதே துணை;' 'பிணிக்கு மருந்து' என்பவற்றின்கண் பறித்தல் நீக்குதல் என நடுவே பெய்து பொருளுரைத்துத் தாதர்த்தம் என்பதுங்கொள்க.

'புல்லி விடாஅப் புலவியுட் டோன்றுமென்—னுள்ள முடைக்கும் படை.' புலவியுள் புலவாநிற்குமளவில் எனப்பொருள்பட்ட சதிசத்தமியென்னும் வினைநிகழ்ச்சியாம். அது பரிமேலழகருரையானுங் காண்க. 'தட்டுப்புடையுள் வந்தான்' என்றால் பிறனொருவனை தட்டுப்புடையாநிற்குமளவில் வந்தானென்று பொருளாம். கட்டுரைத்தல் கட்டுரையென நின்றாற்போலத் தட்டுப்புடைத்தல தட்டுப்புடையென நின்றது. 'ஓஒஒ வினித்தட்டுப் புடையலம்' என்னுமுளப்பாட்டுத் தன்மை யெதிர்மறைமுற்றுவினையாலுமறிக.

'கடனிகழ் வேற்றுமை தாம்வினை யான்முற்றல் காரகம்' என்றதனானும், 'கிரியாநுவர்த்தி காரகம்' என்றதனானும், தேவதத்தன் வந்தான், செல்க, வேண்டும், படும், தகும் என்பனவற்றோடு முடிவதே கர்த்திருகாரகமாவதன்றி உண்டு, இல்லை, வேறு, யாரென்றனவற்றோடு முடிவன கர்த்திருகாரகமன்றோவெனின்;--இவையும் சுரூபமானக்கிரியையோடொக்குங் கம்மியமானக்கிரியையென்பர். 'கம்மிய மானங் குறிப்பென லாகும்.' 'சுரூப மானந் தெரிநிலையாகும்.' இவை உரைச்சூத்திரம். 'தம்முடைய தண்ணளியுந் தாமுந்தம் மான்றேரு—மெம்மை நினையாது விட்டாரேல.' 'தானுந் தேரும் பாகனும் வந்தென் னலனுண்டான.' 'திங்களுஞ் சான்றோரு மொப்பர்.' 'தானுந்தன்புரவியுந்தோன்றினான்' என்பன தலைமைப்பொருள்வினையொடு முடிவதே தலைமையில் பொருளின் வினையுமுடிந்ததாய்க் காரகமாம். "பலவயினானுமெண்ணுத்திணை" என்னுஞ் சூத்திரத்துள் சேனாவரையரும் இவ்வாறுரைத்தார். 'பிரதானத்தோடப்பிரதானந்—தலைமைப் பொருளொடு தலைமையில் பொருளே.' இஃதுரைச்சூத்திரம். இன்னும் வடநூலார் 'தேவதத்த னெடியன்;' 'தேவதத்தனொருவன்' என்னுந்தத்திதனோடும் எண்ணோடும் முடிவனவற்றை நெடியனாயினான் ஒருவனாயினான் எனச் சன்கொடுத்துக் காரகமாக்குவர். 'ஆக்கஞ் சன

னென் றறைந்தனர் புலவர்.' இஃதுரைச்சூத்திரம். 'செயிரிற்றலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்' என்பதனுள் உண்ணாரென்ற எதிர்மறைவினை உண்பாரென்ற விதிவினையோடொத்துக் காரகமாமென்பர். 'விதியநு யோகி மறைபிரதி யோகி.' இஃதுரைச்சூத்திரம். இவ்வாறன்றியும் "எல்லை யின்னு மதுவும் பெயர்கொளு—மல்ல வினைகொளு நான்கே ழிருமையும்—புல்லும் பெரும்பாலு மென்மனார் புலவர்." எனச் சித்தாந்தஞ்செய்த சூத்திரத்துள் 'அல்ல வினைகொளும்' என்பதனால் இரண்டும் மூன்றுங் காரகமேயாம், பெயரொடு முடியும் எல்லையின்னும் அதுவுமன்றி வினையொடு முடியும் மற்றையின்னும், கிரியாசட்டியாகிய குவ்வும் காரகமாம், பெயரொடு முடிவனவன்றி மற்றைவினையொடு முடியும் நான்கு மேழுங் காரகமாமென்பர். 'மரத்தைக் குறையான்' 'வேலாலெறியான்' என்பனவற்றுள் குறையான் எறியான் என்பன வினையன்மையின் மரமும் வேலும் கருமமும் கருவியுமாமோவெனின், இவையும் 'செயிரிற் றலைப்பிரிந்த காட்சியா ருண்ணார்' என்பதுபோலக் கொள்க. இவ்வாறு "எதிர்மறுத்து மொழியினும்" என்னுஞ்சூத்திரத்துள் சேனாவரையருமுரைத்தார்.

இனி முற்கூறிய ஒடுச்சொல்லைத் தொல்காப்பியர் 'ஆசாரியனொடு மாணவகன் வந்தான்' எனக்காட்டி "ஒருவினை யொடுச்சொ லுயர்பின் வழித்தே." என்பர். இனிப் பாணினி ஒடுவென்னுமுருபேற்ற சொல்லை அப்பிரதானமென்றும், வந்தானென்னும் வினையொடு முடிந்த சொல்லைப் பிரதானமென்றும், கூறுவர். "மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு—தானஞ்செய் வாரிற் றலை." என்பதனுள் 'மொழியிற்செய்வார்' என வரும் வினையொடு முடிந்த செயப்படுபொருளையே பிரதானமென்பர். 'மகன் வினைகிளப்பின்" என்னுஞ் சூத்திரத்தில் 'மகனொடுயொடு கலாய்த்த கலாம்' என்பதுமது. (கசு)

கஎ. முற்றிய காரக மாங்கிரி யாசட்டி மொய்குழலாய்
பற்றிய பேத மபேதமென் றுனசம் பந்தசட்டி
யொற்றிய காரக மாகாது பன்மை யொருமைவிளி
துற்றிய சம்புத்தி சம்போதனமெனத் தோன்றிடுமே.

இஃது ஆறனுருபினவிகற்பமும் எழுவாய்விகற்பமுங் கூறுகின்றது. கிரியாசட்டியென்னுங்குகரம் காரகங்களோடு வரும். சம்பந்தசட்டி அபேதம் பேதமென இரண்டாய் நிற்பதல்லது காரகங்களோடு வாராது, ஒருமைவிளியும் பன்மைவிளியும் சம்புத்தி சம்போதனமாம். எ - று.

'பன்மை ஒருமை சம்புத்தி சம்போதனம்' என்பது எதிர்கிரணிறை. 'பேதஞ்சாமா ணியம்பரி யாயம்.' இஃதுரைச்சூத்திரம்.

மேல் வேற்றுமைமயக்கங்கூறிய 'ஆதியதென்பர்' என்னும் பாட்டு முதலியவற்றுள் அநபிகிதகருத்தாவும் அநபிகிதகருமமும் கரணமுஞ் சம்பிரதானமும் ஆறுருபு வருமெனக் கூறிய குகரவுருபு வினையான் முடிதலின், அது கிரியாசட்டியாய்க் காரகமாம். அதற்குதாரணம் ஆண்டுக் காட்டினும்.

இனிச் சம்பந்தசட்டியிலே அபேதம் ஒருவகையேயாம். பேதசட்டி சமவாயசம்பந்தம், சையோகசம்பந்தம், சுரூபசம்பந்தமென மூவகையாம். 'சமவாய சம்பந்தஞ் சினைகு ணந்தொழில்—சாதி விகார மெனவைந் தாகும்.' 'சையோக சம்பந்தம் பொருளிடங் கால—மெனமூ வகையா மென்மனார் புலவர்.' 'கிழமைசம் பந்தங் கிளக்குங் காலே.' 'இவ்விரண் டல்லவை சுரூப மாகும்.' 'சுரூபம்யா தானுமோர் நிமித்த மாகும்.' இவை உரைச்சூத்திரம். உ-ம். 'சாத்தனது கண்;' 'நிலத்ததகலம்;' 'சாத்தனது வரவு;' எள்ளது குப்பை;' 'எள்ளது சாந்து.' எ-ம். 'முருகனதுவேல்;' முருகனது குறிஞ்சி;' 'வெள்ளியதாட்சி.' எ-ம். 'சாத்தனது செய்.' எ-ம். வரும். வடநூலார் 'எள்ளது சாந்து' என்பதனை விகாரசட்டியென்பர். 'விறகது சாம்பர்;' 'சொல்லது பொருள்;' 'நெல்லது பொரி;' 'கோட்டது நூறு' என்பனவுமது.

இனி அபேதசட்டியாவது கருமகருத்தாவுங் கர்த்திருகருமமும்போல ஒருபொருடானே உடையானும் உடைப்பொருளுமாம். உ-ம். 'இராகுத்தலை' 'கனவினுற் காண்டலி னுண்டென்னுயிர்;' 'தன்னுடம்பு தார மடைக்கலந் தன்னுயிர்க்கு' என வரும்.

இம்மூன்றுவகையாய் நின்ற பேதசம்பந்தசட்டி நூற்றொரு பேதமாய் விரியுமென்று பாடியகாரர் சிட்டுக்கொடுப்பர். காசிகாவிருத்தியுரைகாரர் முப்பத்தாறுபேதங்காட்டினர். இனிச் சேனாவரையர் முதலாயினார் தொல்காப்பியத்துள் இருபத்திரண்டுபேதங் காட்டினர். இந்தச்சம்பந்தசட்டி வேற்றுமை வினையான் முற்றுமல் அடையடுத்த பெயராய் நிற்றலின், காரகமாகாமைகாண்க. 'ஆடை சாத்தனது' 'சாத்தனதாடை' என நின்றாற்போல 'புருஷோராஜ்ஞஃ' 'ராஜ்ஞஃ புருஷஃ' என நிற்கும்.

'வணிகீர்;' 'குருகீர்' என்பன சம்போதனம். 'வண்டே;' 'சாத்தா' என்பன சம்புத்தி. (கஎ)

காரகபடலம் முடிந்தது.

## இரண்டாவது

# சமாசபடலம்.

௧௮. மண்டலத் துப்பதி னெண்டே சிகச்சொல் வடசொ
லெனப், பண்டை வழக்கொடு பாராட் டுரிச்சொற்
பலபொருட்கே, யொண்டொடி யாய்பின் னொரு
மொழி யாய்மற் றொருபொருட்கே, கொண்டியல்
பன்மொழி யாய்ச்சத்தி யாற்றலுங்கொண் டெழுமே.

இது உரிச்சொற்களின் பகுதியும் அவற்றின் பொதுவிலக்கணங்களுங் கூறுகின்றது. திசைச்சொல்லும் வடசொல்லுமென வழக்கொடு நிகழ்த்தும் உரிச்சொல்லென்னுந் தனிமொழிகள் நாநார்த்தபதமாகியும் சமாநார்த்தபதமாகியும் ஆற்றலோடு வரும். எ - று.

ஆற்றலாவது விரலென்னுஞ்சொல் உகிரையுணர்த்தாது விரலையேயுணர்த்தி நிற்றலாம், அதுபோலச் சொல்லியற்கையாய் நிற்றலென்பது.

'நாநார்த் தகமே பலபொரு ளொருசொற்—சமாநார்த் தகமே யொருபொருட் கிளவி.' 'சத்திசங் கேதம் போட மாற்றல்.' 'துன்னரு மெழுத்துச் சொற்றொட ராற்றலை—வர்ணபத வாக்கிய போட மென்பர்.' இவை உரைச்சூத்திரம்.

வழக்காவது உலகவழக்கும், செய்யுள்வழக்குமென இருவகைப்படும். அவற்றை வடநூலார் லௌகிகப்பிரக்கிரியை, வைதிகப் பிரக்கிரியையென்பர்.

உம்மையான் மொழிப்பொருட்காரணமுங் கொண்டெழுமென்க, அதனை வடநூலார் பிரவிருத்தி நிமித்தமென்றும், வியுற்பத்தியென்றுங் கூறுவர்.

உரிச்சொல்லாவது பொருளுந்தானும் பேதமின்றி அபேதமாதற்குரிய சொல். குடமறியாதானுக்குக் குடத்தைக் காட்டி இது குடமென்றால் இதுவென்னுஞ் சுட்டுப்பெயரும் குடமென்னும் பொருளும் பேதமின்றி அபேதமாய்த் தோன்றுமென்றும், சொல்லை நித்தியமென்றும், விபுவென்றும், திரவியமென்றும், சத்தநூலார் கூறுவர். அர்த்தநாரீசுவரனென்னும் பார்வதிபரமேசுவரன்போலே பொருளுஞ்சொலும் பேதாபேதமாய் வருமென்பாருமுளர். காளிதாசனும் "வாகர்த்தாவிவ" என்னுஞ் சுலோகத்தால் அவ்வாறு கூறுவன். உரிச்சொல்லாவது பொருளைக் காரணமாய்நின்றுணர்த்த

ற்குரிய சொல்லென்றோவெனின், "பொருண்மை தெரிதலுஞ் சொன்மைதெரிதலுஞ்--சொல்லினாகும" எனக் காரணமாகவும், "கொடையெதிர் கிளவி" எனச்சம்பிரதானமாகவும், "முன்மொழி நிலையலும் பின்மொழி நிலையலு—மிருமொழி மேலு மொருங்குட னிலையலும்" என அதிகரணமாகவும், "அதிர்வும விதிர்ப்பு நடுக்கஞ் செய்யும்." "ஆடூஉ வறிசொன மகடூஉ வறிசொல்" "முதலறி கிளவி சினையறி கிளவி" "அம்மகேட் பிக்கும" எனக் கருத்தாவாகவும், சொலலைக் கூறுவா. அவையெல்லாம் உபசாரமென்க. "கமநிறைந் தியலும்." "உருவுட் காகும்." "செல்ல லின்னா மையே." "எல்லே விளக்கம்." "சொல்லே யையம்." எனச் சொல்லும் பொருளும் பேதமின்றி அபேதமாகக் கூறுதலின், தொலகாப்பியர்கருமம அதுவே கருத்தென்க. இனிச் சேனாவரையருமம சத்தநூலாருரைத்தாங்குரைப்பர். என்னை? "ஆயிரு திணையினிசைக்குமன சொலலே" என்னுஞ் சூத்திரத்தினும் "பெண்மை சுட்டிய வுயர்திணை மருங்கின்." என்னுஞ் சூத்திரத்தினும் முறையே 'செலவினும வரவினும், என வருதலானும், 'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி' என ஒற்றுமைப்பட்டு வருதலானும், சொன்னிகழ்ச்சிக்குப் பொருள் இடமேயாமெனறும், இரண்டும் ஒன்றேயாமென்றும, "மொழிப்பொருட்காரணம்" என்னுஞ் சூத்திரத்திற் பொருளொடு சொற்கியைதல இயற்கையாகலாலென்றும், ஆறுவதன் சூத்திரத்தத் 'திரிந்து வேறுபடூஉம்' என்பதற்கு உதாரணம் 'எள்ளது சாந்து,' 'கோட்டது நூறு' என்பனவற்றோடு ஒருங்கு 'சொலலது பொருள' என்பதனையுங்காட்டி முழுவதூஉந் திரிந்தவென்றும், கூறுவா. இனி நச்சினார்க்கினியார் சத்தநூலாரோடு மாறுபடச் சொலலைப் பொருளுணாத்தற்குக் கருவியென்பா். தா கிகா சுவரூபசம்பந்தமென்பா.

இனி ஆற்றலைச் சொல்லியற்கையாயுள்ளதென்றது ஈசுரசங்கேதமெனவும, சமயசங்கேதமெனவும, நாநார்த்தபதங்களையுஞ் சமானார்த்தபதங்களையும் கட்டியவழக்கெனவும், சில வடநூலாா கூறுவா. அது பொருந்தாது. வடமொழியுள் வழங்கும் இருவகைப்பதமும் ஒருவராற்சொலலப்படாமற் சுயம்புவாய் நிகழ்கின்ற வேதபுருடன்கண்ணும் வழங்கலின், ஆற்றல் சொல்லியற்கையேயாமெனக. "செய்யா மொழிக்குந் திருவள் ளுவருரைத்த—பொய்யா மொழிக்கும் பொருளொன்றே - செய்யா—வதற்குரிய ரந்தணரே." எனச் சங்கத்தாரும் வேதபுருடனைச் சுயம்பு எனறுா்.

இனி உரிச்சொல்லென்பது பதினெண்டேசிகச்சொல் வடசொல்லெனத் தொகையாற் பத்தொன்பதாம். அவற்றுள், ஒவ்

வொன்று நாநார்த்தபதமும் பரியாயபதமுமாகிய வகையான் முப்பத்தெட்டாம். ஆதலின், திசைச்சொல்லும் வடசொல்லுமல்லது இயற்சொல்லுந் திரிசொல்லும் வேறேயில்லையென மறுக்க. நாநார்த்தபதங்களுள் சிலபதம் பிரசித்தமாகியும், சிலபதம் அப்பிரசித்தமாகியும் வருதல்பற்றிப் "பயிலா தவற்றைப் பயின்றவை சார்த்தி." என்றாராகலானும், இயற்சொல்லுந்திரிசொல்லுந் தனியேயில்லையென மறுக்க. சொலவெல்லாம் உரிச்சொல்லேயாம். நன்னூலாரும் "பிங்கல முதலா—நல்லோ ருரிச்சொலி னயந்தனர் கொளலே.' என்றார். "முட்டிலா மூவறு பாடை மாக்களும்" "முனிவறவருளிய மூவறு மொழியுளும்" என வருதலின், தமிழும் திசைச்சொல்லேயாமென்க.

இனிச் செய்யுள்வழக்காவது "ஆவோ வாகுஞ் செய்யுளுள்ளே." "இனச்சுட் டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை" என வரும். உலகவழக்காவது "செயப்படு பொருளைச் செய்தது போல" என்னுஞ் சூத்திரத்து உதாரணமுதலாயினவென்க. தொல்காப்பியர் "வெளிப்பட வாரா வுரிச்சொல" எனவே ஏனையன வெளிப்படவந்த உரிச்சொல்லென்பது பெற்றாம். இதனாற் சொல்லெல்லாம் உரிச்சொல்லேயாமெனத் துணிக. (க)

௧௬. ஆக்கிய சொற்க டகுதி யவாய்நிலை யண்மைநிலை,நோ
க்கிய மூன்றும் பெறச்சேர் வருதொகை நுண்புல
வோர், வாக்கிய மும்மது தூரான் வயச்சொன் மரூ
உத்தொகைச்சொ, னீக்கிய கட்டுரை சார்ந்தசொ
லண்மை நிலைபெறுமே.

இது தொகைநிலை தொகாநிலையென்னும் இரண்டற்கும் பொதுவிலக்கணங் கூறுகின்றது. தனிநிலைச்சொற்கள் தகுதி முதலாகிய மூன்றுந் தோன்ற அவ்வழியாக வேற்றுமையாக அவ்வப்பொருண்மேற் பிளவுபட்டிசையாது தம்முட்கூடுவது தொகைநிலையாம்; பிளவுபட்டு விரிந்தது தொகாநிலை. வாக்கியங்களும் தகுதி முதலிய மூன்றுந் தோன்ற வரும். தூரான்வய முதலாகிய நான்கும் அண்மைநிலையோடல்லது வாரா. எ - று.

தகுதி யோக்கியதை எனவும், அவாய்நிலை ஆகாங்க்ஷை எனவும், அண்மைநிலை ஆசத்தி அல்லது சந்நிதி எனவும் படும். 'தகுதி யவாய்நிலை யண்மைநிலை முறையே—யோக்கியதை யாகாங் கிசையாசத்தி—சந்நிதி மற்றுமா சத்தி யாகும்.' இஃதுரைச்சூத்திரம். இக்

கருத்தேபற்றித் தொல்காப்பியரும் "நிறுத்த சொல்லுங் குறித்து வரு கிளவியும்" என்றார்.

வாக்கியமாவது 'தேவதத்தனறத்தைச் செய்தான்' என வருங் கர்த்திருகாரகமுதலாகிய தொகாநிலைத்தொடர்மொழிகள்.

தூரான்வயச்சொல்லாவது ஆற்றொழுக்கும் அடிமறிமாற்று மல்லாத "சுரையாழ வம்மி மிதப்ப." "நல்ல படாஅ பறை" முதலிய எழுவகைப்பொருள்கோளிலக்கணம் பெற்ற செய்யுட்கள்.

மரூஉத்தொகையாவது 'பின்மாலை;' 'முன்மாலை;' 'அரைக்காசு' என்பன.

கட்டியசொல்லாவது 'மூயற்கோடு;' 'கூர்மரோமகம்பலம்;' 'கரதலரோமபாசம்;' 'துன்னூசிக்குடர்' என்பன.

சார்ந்தசொல்லாவது இடைப்பிறவரற்குத்திரத்துதாரணங்களாம்.

இனித் தூரான்வயத்துள், பதத்தோடு பதம் பிரித்துக்கூட்டலன்றி, விகுதியைப் பிரித்தும், உம்மையைப் பிரித்தும், விபத்தியைப் பிரித்தும், பண்பைப் பிரித்தும், கூட்டுவர். உ-ம். 'பொறிநுதல்வெயர்த்தல்;' 'அறஞ்சொல்லு நெஞ்சத்தான்;' 'அருங்கேடன்;' 'அன்புற் றமர்ந்த வழக்கென்ப வையகத்—தின்புற்றா ரெய்துஞ் சிறப்பு;' 'செய்தவேள்வியர்;' 'பயந்தோ ளிடுக்கண் களைந்த புள்ளி—ணிவந்தோங் குயர்கொடிச் சேவ லோயே.' இவற்றுள் வெயர்ப்பொறித்த நுதலாதல், நெஞ்சோடறஞ்சொல்வான், கேடரியன், அன்புற்றார், வேள்விசெய்தவர், கொடியோய் என விகுதி பிரித்தல் வரும். "புணரிய னிலையிடைக் குறுகலு முரித்தே." இதனுள் நிலையிடையுங்குறுகலுரித்து. எ-ம். 'இனிய வுளவாக வின்னாத கூறல்—கனியிருப்பக் காய்கவர்ந் தற்று.' இதனுள் இனியகனி, இன்னாதகாய். எ-ம். 'மீகண்;' 'கீழ்நீர்;' 'செல்வத்துளெல்லாந் தலை' இவற்றுள் கண்மீ, நீர்க்கீழ், எல்லாவற்றுள்ளுந்தலை. எ-ம். 'நடுவூரு ணச்சுமரம்.' இதனுள் ஊர் நடுவுள். எ-ம். முறையே உம்மையும், பண்பும், உருபும் பிரித்தல் வரும். அநுஷங்கமென்னும் அதிகாரத்தாற் பிரித்தலுங் கொள்க. எழுவகைப்பொருள்கோளும் செய்யுள்விகாரமும் விருத்தரத்நாகரவிதியாகலின், வடநூலார் சத்தநூலுட்கூறாரென்க. நன்னூலாரும் பொருள்கோட்சூத்திரத்துள் இவ்வாறெழுதுவர்.

இடைப்பிறவரலுட்சிறுபான்மை பொருந்துவனவும் முழுதும் பொருந்தாதனவுமுள. உ-ம். 'அறத்தை யழகுபெறச்செய்தான்;'

'வாளான் மருவாரை மாய வெட்டினான்;' 'பாடினான்றேவகீதம் பண்ணினுக்கரசன்;' 'குளனூர்கழனி சூழ்கண்ணன் குறுங்குடி;' 'அடுஞ்செந்நெற்சோறு;' 'உப்பின்று புற்கையுண்க;' 'அளமரு குயிலின மழுங்கிப் பூம்பொழி—லுளமெலி மகளிரி னொடுங்கும்' இவை சிறுபான்மை பொருந்துவன. அளமருவென்றது லளயோர பேதமாம். அலமருமென்பது அளமருமென்றாயிற்று. நிலம் நிலன், கோவில கோயில என அபேதமிகவரும். 'காமனை யெரித்த கணபதி தந்தை—வாமதேவன் மலரடி பணிவாம்.' என்றால் காமனை யெரித்தல் கணபதிக்கின்மையின். இது பொருந்தாது. 'காமனை யெரித்த வாமதேவன்—கணபதி தந்தை மலரடி பணிவாம்.' இது பொருந்தும். 'வலைமெறிந்த நல்லிளங் கோசர்தந்தை மல்லல் யானைப் பெருவழுதி.' என்றால் வல்லமெறிதல நல்லிளங்கோசர்க் கின்மையிற் பொருந்தாது. 'வல்லமெறிந்த மல்லல் யானைப் பெருவழுதி நல்லிளங் கோசர் தந்தை' என்றாற் பொருந்தும். இவை யெல்லாம் அண்மைநிலையல்லது பெருமை காண்க.

தனிநிலைச்சொற்கள் வேற்றுமையாக அல்வழியாக அவ்வப் பொருண்மேற் பிளவுபட்டிசையாது தம்முட்கூடுவது தொகைநிலை யெனவே, வேற்றுமையுருபு முதலிய சொற்கள் கெட்டுத் தனிநிலைச்சொற்கள் தம்முட் கூடுவது தொகையன்றோவெனின்;— நன்று சொன்னாய், "அல்வழி வேற்றுமைப் பொருளிற் பொருந்துழி" "வேற்றுமை முதலிய பொருளின்" எனவும் "உருபுவமை யும்மை விரியி னடைவே—யுருபுவமை யும்மைத் தொகையாம்." எனவும் நன்னூலாரும் நேமிநாதத்தாருங் கூறினர். அன்றியும், உயிரீற்றுவேற்றுமையுருபும் உவமவுருபும் உயிர்மயங்கியலினும், மெய்யீற்றுவேற்றுமையுருபும் உவமவுருபும் உம்மையும் மெய்மயங்கியலினும், நிலைமொழியீறாக வைத்துக் கெடுத்துப் பின் வருமொழியோடு புணர்த்தாமையின், அவ்வாறுரைத்தல் மலைவிடறென்க. வடநூலாரும் அச்சுச்சந்தியினும் அல்லுச்சந்தியினும் அவ்வாறு உருபுகளையும் உம்மையையும், உவமையையும், ஈறாக வைத்துப் புணர்த்தார். இஃதன்றியும் 'தவளைவாய்;' 'குவளைமலர்;' 'அம்பிகாபதி' என்பனவற்றை ஆறும்வேற்றுமை நிலைமொழியீறாக நின்று கெட்ட சந்தியென்றால் இயல்புசந்தியாகாமையாலும், 'கோடி - தொகுத்தார்க்குந் துய்த்தலரிது;' 'பெயலும் விளையுளுந் தொக்கு;' 'மருவின்றொகுதி;' 'மக்கட்பெயர்த்தொகுதி;' 'அன்னமாபிணிரண்டொடுந் தொகைஇ, என்புழிக் கோடி முதலிய சொற்களெல்லாம் ஈறு கேட்டுத் தொகுவனவன்மையாலும், 'உவாப்பதினான்கு;' 'பொற்றொடி' என்னும் உம்மைத்தொகையும் அன்

மொழித்தொகையும் வருமொழியீற்றில் உம்மையும் உடையாளென்னுஞ் சொல்லுங்கெட்டவெனவும் வேண்டுமாகலானும், வேற்றுமையுருபு முதலிய சொற்கள் தொகுதலென்பது மலையிடறென்க. பாணினிபகவான் ஆருமத்தியாயத்துள் விபத்தியில்லாமற் பதத்தொடு பதம் புணருஞ்சந்தி கூறுவர். "உருபுதொக வருதல்" என்றாற்போல இரண்டாமத்தியாயத்துள் சமாசனில் விபத்தியும் விதித்து லோபமும் விதித்தார். காத்தியாயனர் சமாசனில விபத்தியில்லையென்று சித்தாந்தம் பண்ணினார். அவருரைத்தாங்குரைப்பர் சேனாவரையரும். அது காட்டுதும்:—"வேற்றுமையுருபும் உவ "மவுருபும் உம்மையும் வினைசசொலலீறும் பண்புச்சொல்லீறுந் "தொகுதலிற் றொகையாயினவென்பாரும், அவ்வப்பொருண்மேல் "இரண்டும் பலவுமாகிய சொற்கள் பிளவுபடாது ஒற்றுமைப்படத் "தம்முளியைதலிற் றொகையாயினவென்பாருமென இருதிறத்தர் "ஆசிரியர்.'செய்தான் பொருள்;''இருந்தான் மாடத்து' என உருபு "தொக்கு ஒருசொன்னீர்மைப்படாதனவும் தொகையாவான்சேற "லின் அவற்றை நீக்குதற்கும், 'வேழக்கரும்பு;''கேழற்பன்றி' என்பு "ழித் தொக்கனவில்லையெனினும் தொகையென வேண்டப்படுமா "கலான் அவற்றைத் தழுவுதற்கும், உருபு முதலாயின தொகுதலிற் "றொகையென்பாாக்கும் ஒட்டியொருசொன்னீர்மைப்படுதலுந் "தொகையிலக்கணமெனல் வேண்டும்: அதனால் உருபு முதலாயின "தொகுதல் எல்லாத்தொகையினுஞ் செல்லாமையான், எல்லாத் "தொகைக்கண்ணுஞ் செல்லுமாறொட்டி ஒருசொல்லாதல் தொ "கையிலக்கணமாய் முடிதலின், இவ்வாசிரியாக்கு இதுவே துணி "வெனப்படுமென்பது. அற்றாயின், 'உருபுதொக வருதல்' என "வும் 'வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்' எனவும் 'உம்மை "தொக்க பெயர்வயி னானும்' எனவும் 'உவமை தொக்க பெயர்வயி "னானும்' எனவும் ஓதலால், அவை ஆண்டுத் தொக்கனவெனப் "படுமன்றோவெனின்;—அற்றன்று, 'அதுவென் வேற்றுமை யுயர் "திணைத் தொகைவயின்' என்புழி அதுவென்னுருபு நின்று கெட் "டதாயின் நின்ற காலத்துத் திணைவழுவாம், அத்திணைவழு அமை "வுடைத்தெனின், விரிக்கின்றுழி நான்காமுருபு தொடராது அது "தன்னையே விரிப்பினும் அமைவுடைத்து, அதனான் முறைப்பொ "ருடோன்ற 'நம்பிமகன' என விரண்டுசொற்றொக்கனவென்பதே "ஆசிரியர்கருத்தெனல்வேண்டும். அல்லதூஉம், வினைத்தொகை, "பண்புத்தொகை, அன்மொழித்தொகை என்பனவற்றின்கண் "வினையும் பண்பும் அன்மொழியுந் தொக்கு நில்லாமையானும்,

"அஃதே கருத்தாதலறிக. அதனால் உருபும் உவமையும் உம்மை "யுந் தொகுதலாவது தம்பொருளொட்டிய சொல்லாற்றோன்றத் "தாமாண்டுப் புலப்படாதே நிற்றலேயாம். வேற்றுமைத்தொகை "யென்பது வேற்றுமைப்பொருளையுடைய தொகையென்றானும், "வேற்றுமைப்பொருடொக்க தொகையென்றானும், விரியும். உவம "த்தொகை, உம்மைத்தொகை, அன்மொழித்தொகை என்பன "வும் அவ்வாறு விரியும். அன்மொழியாவது தொகைச்சொல்லல் "லாதமொழி. வினைத்தொகை, பண்புதொகையென்பன வினை "யினதுதொகை, பண்பினதுதொகையென விரியும். வினை பண் "பென்றது அவற்றையுணர்த்துஞ்சொல்லை. ஒருசொல்லாற்றொ "கையின்மையின், பிறிதோர்சொல்லோடு தொகுதல பெறப்படும். "இச்சூத்திரத்தாற் றொகைச்சொல் இனைத்தெனவரையறுத்தவாறு." இவ்வுரை "வேற்றுமைத் தொகையே யுவமத் தொகையே" என்னுஞ் சூத்திரத்திற் சேனாவரையரெழுதிய வுரையென்றவாறு. இனி நச்சினார்க்கினியார் வேற்றுமையுருபு முதலிய சொற்களினின்று தொகுதலின் அவ்வாறு தொகையாயினவென்பார் மதம்பற்றி அவருரைத்தாங்குரைப்பர். 'ஆறுருபும் வெளிப்படா விலலது' 'உவமவுருபிலது' 'உம்மிலது' என்றவற்றை ஏற்றிலை நின்று கெட்ட அழிவுபாட்டபாவமாகக் கொள்ளாது முன்னுள்ளதனபாவமாகக் கொள்க. வடநூலார் அழிவுபாட்டபாவத்தைப் பிரத்துவஞ்சாபாவமென்பர். முன்னுள்ளதனபாவத்தைப் பிராகபாவமென்ப. (உ)

௨௦. தற்புருடன்றுவி குப்பலநெற்கர்ம தாரயனோ, டுற்
பல வாணெடுங் கட்பசுந் தேமொழி யொண்டொடி
யாய், சொற்பயி லவ்வி யயீபாவ மேனைத் துவந்தனெ
னக், கற்பவர் கூறுஞ் சமாசன்க ளேதொகைக் கட்
டளையே.

இது தொகைக்குத் தொகைகூறுகின்றது. தற்புருடன், துவிகு, வெகுவிரீகி, கருமதாரயன், அவ்வியயீபாவம், துவந்துவன் எனச் சமாசன் ஆறும். எ - று.

தற்புருடன் வேற்றுமைத்தொகை. துவிகு எண்ணொடுபொருள்புணர்ந்த எண்டொகை. வெகுவிரீகி அன்மொழித்தொகை. கருமதாரயன் பண்புத்தொகை. அவ்வியயீபாவம் முன்னும் பின்னும் மொழியடுத்துவரும் இடைச்சொற்றொகை. துவந்துவன் உம்மைத்தொகை.

நேமிநாதத்தார் வருக்கத்தொற்று வருக்கமளபெடைகள் என்னுது வடமொழியிற் பிறந்தவண்ணமே 'வர்க்கத்தொற்று' 'வர்க்கமளபெடைகள்' என்றாற்போல, யாமுங் கருமதாரயனென்னுது 'கர்மதாரயன்' எனத் தற்சமமாகக் கூறினும். அன்றியும், நருமதையென்னுது நன்மதையென்றாற்போலக் கன்மதாரயனெனினும் அமையும். அஃதன்றித் தண்டியாசிரியரும் சிந்தாமணியாரும் வடமொழியிற் பிறந்தவண்ணமே 'யுத்தமயுத்தமும்' 'ராசமாபுரி' 'ரவிகுலதிலகன்' என முறையே கூறுதல் காண்க. (௬)

௨௧. தற்புருடத்தொகை வேற்றுமை யெட்டனுட் சார்ந்த நஞ்ஞுச், சொற்பொரு ளன்மை மறையின்மை காட்டுந் தொகைத்துவிகு, முற்பத மெண்பிற் பதந்தத்திதார்த்த முடித்துமெழூஉம், பற்பல வேகவற் பாவி யநேகவற் பாவியென்றே.

இது தற்புருடனுந் துவிகுவுமாமாறு கூறுகின்றது. பிரதமாதற்புருடன், துதீயாதற்புருடன், திருதீயாதற்புருடன், சதுர்த்திதற்புருடன், பஞ்சமீதற்புருடன், சட்டீதற்புருடன, சத்தமீதற்புருடன், நஞ்ஞுதற்புருடன் எனத் தற்புருடசமாசன் எட்டு. அவற்றுள், நஞ்ஞுதற்புருடனுவது அன்மை முதலாக மூன்றும். இனித் துவிகுசமாசன் ஏகவற்பாவி, அநேகவற்பாவி எனவிரண்டாகி, முற்பதம் எண்ணுகிப் பிற்பதந் தத்திதார்த்தமாகியும் வரும். எ-று.

உம்மையால் தத்திதார்த்தமாய் வருதலுமன்றிப் பொருள், அளவு, நிறை யென்னும் மூன்றேடு வருதலுங்கொள்க. மறையென்றது எதிர்மறை.

பிரதமாதற்புருடனுக்கு உதாரணம்: 'நுனிநா;' 'நுனிக்கொம்பர்;' 'கடைக்கண்;' 'அரைக்காசு;' 'அரைக்கால்;' 'அரைமா;' 'அரைக்காணி;' 'முற்பகல்;' 'பிற்பகல்' எனவரும். வடமொழியில் 'அர்த்தபிப்பலி;' 'பூர்வகாயம்;' 'பிராத்தசீவிகன்;' 'ஆபந்நசீவிகன்' எனவரும். பரிமேலழகர் முற்பகல் பிற்பகலென்பனவற்றை முன்பின்னுகத் தொக்க ஆரும்வேற்றுமைத் தொகையென்பர். வடநூலார் முன்னின்ற மொழி பிரதமையாகலிற் பிரதமாதற்புருடனென்பர்.

'நிலங்கடந்தான்.' எ-ம். வடமொழியில் 'காந்தாராதீதன்.' எ-ம். துதியாதற்புருடன் வரும்.

'நாய்க்கோட்பட்டான்;' 'திருநீக்கப்பட்டார் தொடர்பு;' 'வேந்துசெறப்பட்டவர்;' 'அடியளந்தான்;' 'ஈதலிசைபட வாழ்தல்.' எ-ம். வடமொழியில் 'சங்குலாகண்டம்.' எ-ம். தம்மினாகிய தொழிற்சொல்லினும் பிறிதினும் திருதியாதற்புருடன் வரும்.

'மனைப்பலி;' 'குண்டலப்பொன்.' எ-ம். வடமொழியில் 'பூதபலி;' நாகபலி;' 'யூபதாரு;' எ-ம். சதுர்த்தீதற்புருடன் வரும்.

'கருவூர்க்கீழ்த்திசை;' 'மருவூர்மேற்றிசை.' எ-ம். வடமொழியில் 'சோரபயம்.' எ-ம். பஞ்சமீதற்புருடன் வரும்.

'நாநுனி;' நாவிளிம்பு;' 'கட்கடை.' 'சாத்தந்தை;' 'கொற்றந்தை.' எ-ம். வடமொழியில் 'சூதாக்கிரம்.' எ-ம். சட்டீதற்புருடன் வரும்.

'எண்ணெய்;' 'கைவிரல்.' எ-ம். வடமொழியில் 'பர்வதசிகரம்;' 'சரோசலம்.' எ-ம். சத்தமீதற்புருடன் வரும்.

"நேர்ந்த மொழிப்பொருளை நீக்க வருநகரஞ் — சார்ந்த தடலாகிற் றன்னுடல்போஞ் - சார்ந்ததுதா — னாவியேற் றன்னாவி முன்னாகும்." என்பதனான் 'அகளங்கன்;' 'அநங்கன்.' எ-ம். 'அப்பிராமணன்;' 'அநச்சுவம்,' எ-ம். 'அதன்மம்.' எ-ம். முறையே இன்மை, அன்மை, எதிர்மறை மூன்றினும் நஞ்ஞுவரும். 'ததபாவந் ததன்னியந் தத்விருத்த — மெனமூன் றுகு நஞ்ஞுதற் புருடன்.' இஃதுரைச்சூத்திரம். இனிப் பாணினிபகவான் இவ்வுதாரணங்கட்கு முன்னின்ற நகாரங்கெட்டு வேறொருநகாரம் வந்ததென்பர். தமிழினும் 'இல்பொருளுவமை' இது இயற்கையான ததபாவத்தில் வந்த நஞ்ஞு. 'வேற்றுமையல்வழி;' 'அஃறிணை' என்பன ததன்னியமான இனத்தில் வந்த நஞ்ஞு. 'பயனில் சொற் பாராட்டல்;' 'கோளில் பொறி' இவை உண்மைக்கெதிர்மறையான தத்விருத்தத்தில் வந்த நஞ்ஞு. 'கருமமல்லாச் சார்பென் கிளவி' இது இன்மைப்பொருளில் வந்த அன்மை. 'மன்னுப் பொருளு மன்ன வியற்றே;' 'பிறவாழி நீந்தலரிது;' 'புறத்த புகழுமில' எனபுழி முறையே ததபாவமும் ததன்னியமும் தத்விருத்தமுமான நஞ்ஞு. ததபாவமென்னும் இன்மைப்பொருள் 'நிர்க்குணம்' என வடமொழிக்கண்ணும் வரும். இனி 'இல்பொருள்;' 'இல்லாப்பொருள்;' 'இரப்பாரை யில்லாத வீர்ங்கண்மா ஞாலம்;' 'ஏமாப்பிறேணி' என அடையடுத்துத் தொகைமொழியாய் நிற்குமென்க. 'இல்லைபொருள்;' 'இல்பொருள்' என்பன பொருளில்லை பொருளில் என்பனபோல எழுவாய்க்குப் பயனிலையாவதன்றி ஒருபொருட்கு அடையாய் நில்லா இவ்விரண்டுமென்க. நன்னூலார் வடிவெழுத்திலக்கணமும் ஒலியெழுத்

திலக்கணமும் "புள்ளிவிட்டவ்வொடு" என்னுஞ் சூத்திரத்தான் ஒருங்கு கூறினாற்போலத் தொல்காப்பியனாரும் "இல்லென் கிளவியின்மை செப்பின்" என்னும் ஒருசூத்திரத்தால் தொகைநிலையாய் நின்ற அடைமொழிக்கும் தொகாநிலையாய் நின்ற எழுவாய்த்தொடர்க்கும் ஒருங்கு கூறினாரென்க.

இனித் துவிகுசமாசனுக்கு உதாரணம்: 'பன்னிருபடலம்;' 'பஞ்சகபாலம்;' 'ஏகாதசகபாலம்' என இருமொழியினும் தத்திதார்த்தமாக ஏகவற்பாவி வரும், பன்னிருபடலத்தாற் செய்த நூல், பஞ்சகபாலத்தில் வறுத்த புரோடாசம் எனப் பொருள்படுதலினென்க. 'பஞ்சவடி' ஏகவற்பாவி. 'பஞ்சபாண்டவர்' அநேகவற்பாவி. 'இருதேவர்பார்ப்பார்;' 'மூவேந்தர்;' 'முப்பத்து மும்மைத்தேவர்' எனத் தத்திதார்த்தமல்லாத அநேகவற்பாவி வரும். 'இருகண்;' 'முச்சுடர்.' எ-ம். 'இருகலம்;' 'முந்நாழி.' எ-ம். 'இருபலம்;' 'முத்தொடி.' எ-ம். முறையே பொருள் அளவு நிறையோடும் ஏகவற்பாவி வரும். 'பொருணிறை யளவொடு புணர்பின் மொழியுடன் மருளறு துவிகு வழங்கவும் பெறுமே.' இஃது உரைச்சூத்திரம். 'அறுகால்;' 'சட்பதம்;' 'துவிரேபம்;' 'சதுர்ப்புசம்;' 'சண்முகம்' இவை துவிகுசமாசன்மேல வந்த வெகுவிரீகி. 'முக்காலி;' 'நாற்காலி;' 'அட்டபதி;' 'உபயபதி' இவை துவிகுசமாசன்மேல் வந்த தத்திதன். இனிப் 'பதினொன்று;' 'பன்னிரண்டு.' எ-ம். 'தூணிப்பதக்கு;' 'நாடுரி.' எ-ம். 'தொடியேகஃசு' எ-ம். எண் அளவு நிறைகள் தம்மொடு தாம் புணர்ந்த தொகையைப் பாடியகாரரும் தொல்காப்பியரும் உம்மைத்தொகைத் துவந்துவமென்பர். பதினொன்றென்பதனை ஒன்றற்றிகமாகவுடைய பத்தென விரித்து, உருபும் பொருளும் உடன்றொக்க மத்திமபதலோபமென்பர் காத்தியாயனர். பிறவுமன்ன. இனித் தொல்காப்பியரும் முப்பத்து மூன்றென்பதனை முப்பதும் மூன்றுமென விரியாது, மூன்று தலையிட்ட முப்பதென விரித்துக் காத்தியாயனர் மதம்கொள்வர். இனி 'இருபது;' 'முப்பது;' 'இருநூறு;' 'முந்நூறு' என்பனவெல்லாம் மத்திமபதலோபமே. என்னை? இரண்டாற்பெருக்கிய பத்து, இரண்டாற் பெருக்கிய நூறு என விரிதலின். பிறவுமன்ன. 'அறுநான்கிரட்டி' என்பது ஆறாற்பெருக்கிய நான்கிரட்டி எனவும், வெகுவிரீகிப் பொருளால் இருபத்துநான்கிரட்டி எனவும், 'பதிற்றுப்பத்து' என்னும் ஒருதொகைச்செய்யுள் பத்தாற்பெருக்கிய பத்தெனவும், வெகுவிரீகிப்பொருளால் நூறெனவும், விரியும். 'நூற்றுப்பத்தடுக்கிய' என்பது நூற்றாற்பெருக்கிய பத்தெனவும், வெகுவிரீகிப்பொருளால் ஆயிரமெனவும், நூறும்பத்துமெனவும், விரியும். இனிப

பண்புத்தொகையென்பாருமுளர். வடமொழியினும் 'ஏகாதசம்;' 'துவாதசம்;' 'ஏகவிஞ்சதி;' 'பஞ்சவிஞ்சதி;' 'சதுச்சதம்;' 'அட்டசதம்;' 'அட்டசகச்சிரம்.' எ-ம். 'நவத்துவயதிபம்.' எ-ம். வரும். 'அறுகால்;' 'சட்பதம்' முதலாக ஈண்டுக் காட்டிய உதாரணமெல்லாம் எவற்றுக்கெனின், அவை துவிகுசமாசனல்லவென்பதற்கும், அப்பிரதிபத்தி, விப்பிரதிபத்தி, அன்னியதாப்பிரதிபத்தி வாராமைக்குமென்க. (௪)

௨௨. முன்மொழிப் பண்பிரு பண்பு விசேடிய முன்மொழி
தன், முன்மொழித் துல்லியம் பின்மொழித் துல்லிய
மொய்குழலாய், முன்மொழிச் சம்பா வனையவ தா
ரண முற்றுமிவை, நன்மொழிப் பண்புத் தொகைக்
கன்ம தாரய னற்றமிழ்க்கே.

இது கருமதாரயனுமாறு கூறுகின்றது. முன்மொழிப்பண்பு, இருமொழிப்பண்பு, முன்மொழிவிசேடியம், முன்மொழியொப்பு, பின்மொழியொப்பு, முன்மொழியெண்ணம், முன்மொழித்தேற்றம் என எழுவகையாம் கருமதாரயன். எ - று.

'முன்மொழிப் பண்பு விசேடண பூர்வம்.' 'இருமொழிப் பண்பு விசேடணேபயம்.' 'முன்மொழி விசேடியம் விசேடிய பூர்வம்.' 'முன்மொழித் துல்லிய முபமா பூர்வம்.' 'பின்மொழித் துல்லிய முபமோத் தரபதம்.' 'சம்பா வனையவ தாரண முறையே—யெண்ணந் தேற்ற மெனப்பெயர் பெறுமே.' இவை உரைச்சூத்திரம்.

'கருங்குவளை;' 'செங்குவளை.' எ-ம். வடமொழியில் 'நீலோற்பலம்;' 'இரத்தோற்பலம்.' எ-ம். முன்மொழிப்பண்பென்னும் விசேடணபூர்வபத கருமதாரயன் வரும்.

'பெருவெள்ளை;' 'சிறுவெள்ளை;' 'இன்பத்துன்பம்.' எ-ம். வடமொழியில் 'சீதோட்டணம்;' 'சுகதுக்கம்.' எ-ம். இருமொழிப்பண்பென்னும் விசேடணேபயபத கருமதாரயன் வரும்.

'தெய்வப்புலவன்றிருவள்ளுவன்.' எ-ம். வடமொழியில் 'வையாகரணகேசரி;' 'ஆசாரியதண்டி.' எ-ம். முன்மொழிவிசேடியமென்னும் விசேடியபூர்வபத கருமதாரயன் வரும்.

'சங்குவெள்ளை;' 'முத்துவெள்ளை.' எ-ம். வடமொழியில் 'சங்கபாண்டு.' எ-ம். முன்மொழியொப்பென்னும் உவமாபூர்வபத கருமதாரயன் வரும்.

MAHAMAHOPADHYAYA
DR. U.V.S. IYER LIBRARY

'அடிமலர்;' 'பெண்ணணங்கு.' எ-ம். வடமொழியில் 'புருடவியாக்கிரம்.' எ-ம். பின்மொழியொப்பென்னும் உவமோத்தரபத கருமதாரயன் வரும்.

'சங்கபாண்டு;' 'புருடவியாக்கிரம்;' 'மயூரவியஞ்சகம்.' என்னும் உதாரணம் மூன்றிற்கும் மூன்றுசூத்திரஞ்செய்வர் பாணினியென்க.

'அறச்சுற்றம்;' 'அருட்செல்வம்;' 'கல்விப்பொருள். எ-ம், வடமொழியில் 'விநயதநம்;' 'குணபுத்தி;' 'சுசிர்தபெந்து.' எ-ம். முன்மொழியெண்ணமென்னும் சம்பாவனாபூர்வபத கருமதாரயன் வரும். இவையே துணியப்படுங் காலத்துத் தேற்றமென்னும் அவதாரணபூர்வபத கருமதாரயனும். திருவள்ளுவரும் தொல்காப்பியரும் 'எண்ணித் துணிக கருமம்.' எ-ம். 'ஏற்ற நினைவுந் துணிவுமாகும்.' எ-ம். கூறினாராகலின், ஒருபொருளை எண்ணும்பொழுது ஒன்றாகவும் துணியும்பொழுது வேறொன்றாகவுங் கொள்க.

விசேடியபூர்வபதமாவது "சிறப்பி னாகிய பெயர்நிலைக் கிளவிக்கு—மியற்பெயர்க் கிளவி முற்படக் கிளவார்." என்ற சூத்திரவிதிபெற்றுத் தொகையாய் நிற்பது. இதனை மாறித் 'திருவீரவாசிரியன்;' 'சங்கராசாரியன்;' 'அகத்தியமுனிவன்' என விசேடியோத்தரபதமுமாக்குவர்.

'வெண்டிங்கள்;' 'செஞ்ஞாயிறு' என்பன இனமின்றிச் செய்யுளில் வந்த கருமதாரயன். தண்டியாசாரியரும் தவளசந்திரனென்பர். இனிச் சேனாவரையர் 'வெள்ளாடு;' 'வெண்களமர்' என்பன முன்மொழிக்குணம்பற்றி வாராது சாதிபற்றி வந்தவென்பர். அவ்வாறு 'கிர்ஷ்ணசர்ப்பம்' என்பதனைக் காசிகாவிருத்திகாரருங் கூறுவர்.

'சிறுவெள்ளை;' 'பெருவெள்ளை' என்பனவற்றை நென்மேலேற்றிக் குணநாமங்களே குணிகட்குமாகலின் இவை அன்மொழியல்லவெனச் சிறுமை பெருமைகளை வெள்ளைக்கடையாக்காது நெல்லுக்கடையாக்குவர். இனிச் 'செந்நிறம்;' 'வெண்ணிறம்;' 'மார்கழித்திங்கள்,' 'மாசித்திங்கள்;' 'பலாமரம்;' 'மாமரம்;' 'பரணிநக்ஷத்திரம்;' 'மகநக்ஷத்திரம்;' 'வாளைமீன்;' 'கயன்மீன்;' 'சாரைப்பாம்பு;' 'விரியன்பாம்பு, இவை சிறப்பும் பொதுவுமாகிய பெயர். 'கந்நியாகுமரி' 'கும்பகடம்' 'மருதந்வா' என முறையே வேதத்திலும் வான்மீகத்திலும் வியாசபாரதத்திலும், 'புட்டகப்புடைவை;' 'பெருமலைச்சிலம்பு;' 'அராஅப்பாம்பு;' 'வடுக்குற்ற மாகி விடும்;' 'உவகை மகிழ்

ச்சியிற் சோர்வு;' 'ஆடகச்செம்பொற் கிண்ணம்;' 'அலறு மூந்நீர்த் தடங்கடல்' என இவை ஒருபொருட்கு இருபெயர் பிரியாது நின்றன. இவைபோல்வன வருஞ்சொற்பற்றி "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்" எனச் சூத்திரஞ்செய்தார். 'ஆண்டகை;' 'பெண்டகை;' 'மக்கட்சுட்டு' இவை பின்மொழியாகுபெயராய் நின்ற இருபெயரொட்டுப் பண்புத்தொகையென்பர். 'மக்கட்சுட்டு' என்பதனைக் கல்லாடரும் பின்மொழியாகுபெயராய் நின்ற இருபெயரொட்டுப்பண்புத்தொகையென்பர். அதனைச் சேனாவரையர் அன்மொழித்தொகையென்பர். நச்சினார்க்கினியார் ஆகுபெயரென்பர். அவ்விரண்டும் இருமொழிமேலுமன்றி வேறொருமொழிமேனில்லாமையின், அவ்வுரை பொருந்தாமையறிக. 'கருஷபாஷாணம்;' 'கருஷோபலம்' இவை உரைகல்லென்னும் வினைத்தொகையாம். அதனை வடநூலார் இடமுணர்த்தும் வினைப்பெயரென்பர். (ரு)

உகூ. முன்மொழிப் பேர்ச்சொ லிடைச்சொ லிரண்டு மூரணிநிற்கும், தன்மொழி யவ்வி யயீபாவ மும்மைச் சகாரத்திலே, யின்மொழித் தொந்தன் சமாகாரத் தோடித ரேதரமா, மன்மொழித் தோற்றஞ் சமுச்சயத் தோடுமன் வாசயமே.

இது அவ்வியயீபாவமும், துவந்துவனும், சகாரவிரியுங்கூறுகின்றது. பெயர்ச்சொல்லும் இடைச்சொல்லுமாக முன்மொழி மாறி நின்று, நாமபூர்வபதம், அவ்வியயபூர்வபதம் என, அவ்வியயீபாவம் இருவகையாம். இனித் துவந்துவனும் சமாகாரம், இதரேதரயோகம் என இருவகையாம். சகாரவிரி சமுச்சயமும் அன்வாசயமுமென இருவகையாம் எ - று.

தன்வினையென்பது ஒருவினையாலுற்போலத் 'தன்மொழி' ஒருமொழியாம். 'உம்மைச்சகாரம்' இருபெயரொட்டிய பரியாயம். 'மன்மொழித்தோற்றம்' மன்னுமொழித்தோற்றம். அஃதாவது உம்மை விரிந்து நிற்குந் தொகாநிலைத்தொடர்மொழி.

உ-ம். 'வாண்மன்;' 'அதுமன்' என நாமபூர்வபதமாய் வந்த அவ்வியயீபாவமாகிய முன்மொழிப்பெயர்ச்சொல் வரும். 'மற்றையாடை;' 'கொன்னூர்' என அவ்வியயபூர்வபதமாய் வந்த அவ்வியயீபாவமாகிய முன்மொழியிடைச்சொல் வரும். அவ்வியயம் ஈண்டு இடைச்சொல். இக்கருத்தேபற்றித் தொல்காப்பியரும் "முன்னும் பின்னு மொழியடுத்து வருதல்" எனச் சூத்திரஞ்செய்

தார். ஆண்டுச் சூத்திரத்தாற் பெற்றனமாயினும், தொகையென்பது ஈண்டுப் பெற்றும்.

இனி ஒருமையீறாய் வந்த அஃறிணையும்மைத்தொகையைச் சமாகாரத்துவந்துவமென்றும், உயர்திணைபன்மையீறாய் வந்த உம்மைத்தொகையை இதரேதரயோகத் துவந்துவனென்றும், ஒருமையீறு காடென்னும் ஒருபெயர்ப்பொதுச்சொற்போலென்றும், ஏகவற்பாவிபோலென்றும், பன்மையீறு மரங்களென்னுஞ் சொற்போலென்றும, அநேகவற்பாவிபோலென்றும், இருட்டாந்தமுங் கூறுவர். உ-ம். 'அறம்பொருள்;' 'புலிவிற் கெண்டை.' எ-ம். 'சங்கபடகம்.' எ-ம். 'கபிலபரணர்;' 'சேரசோழபாண்டியர்;' 'இராமலட்சுமணா' எ-ம். இருதிணையினும் இருவகைமொழியினும் சமாகாரமும் இதரேதரமும் முறையே வரும்.

இனித் தொகாநிலையும்மை வருமாறு: 'நம்பியும் வந்தான்' என்றால 'நங்கையும் வந்தாள்' எனப் பொருள்பட்டு இருபெயர் ஒருவினைகொள்ளும் எச்சவும்மையைச் சமுச்சயமென்பர். 'நம்பியுழுதும் வருவன்' என்றால் 'உழாதும் வருவன்.' எ-ம். 'பசு மேய்த்தும் வருவன்' என்றால் 'மேயாதும் வருவன்.' எ-ம். பொருள்பட்டு ஒருபெயர் இருவினைகொள்ளும் எதிர்மறையும்மையை அந்வாசயமென்பர்.

'அறம்பொருள்;' 'புலிவிற் கெண்டை;' 'சேரசோழபாண்டியர்' என வரும் உம்மைத்தொகைகள் ஒன்றினுக்கொன்று அடையென்னும் விசேடணமாகாது தொகுமென்க. ஒழிந்த தொகையெல்லாம் ஒன்றினுக்கொன்று விசேடணமாகியே தொகுமென்க. அதுபற்றித் தொல்காப்பியர் "இருமொழி பன்மொழி" எனச்சூத்திரஞ்செய்தார். மற்றைக் 'கற்சுனைக்குவளையிதழ்' என்னும் வேற்றுமைத்தொகை முதலியனவெலலாம் இருமொழித்தொகையாமென்க.

அளவைப் பரிமாணமென்றும், நிறையை உன்மானமென்றும், எண்ணைச் சங்கியையென்றும், வடநூலார் பெயர் கூறுவர்.

'இன்மொழி' என்ற மிகையால் ஏகசேடபதத்துவந்துவனுங் கொள்க. 'அந்த ஞான்றை நருகம் யாமே' என்புழி யாமென்பது நீயும் யானுமென்னும் உம்மை தொக்கு நீயானென நிற்றலுமன்றி, நீயென்னும் முன்மொழியுந் தொக்கு, யானென்னும் பின்மொழி யாமெனப் பன்மையீறாகி, ஏகசேடமாய் நின்று, நருகம் என்னும்' உளப்பாட்டுத்தன்மைவினையோடு முடிதலின், ஏகசேடபதத்துவந்

துவனென்பர். 'சிறுகண்யானையொடு பெருந்தேரெய்தி யாமவணின்றும் வருதும்' என்புழி நீயும் அவனும் யானும் என்னும் உம்மை தொக்கு நீயவன் யானென நிற்றலுமன்றி, நீயவனென்னும் முன்மொழிகளிரண்டுந் தொக்கு, யானென்னும் பின்மொழி யாமெனப் பன்மையீறாகி, ஏகசேடமாய் நின்று, வருதும் என்னும் உளப்பாட்டுத்தன்மைவினையோடு முடிதலின், ஏகசேடபதத்துவந்துவனென்பர். 'நீயிர் வம்மின் பாடுதும்வாழி தோழிபாடுகம் வம்மின் போதுவம்' என வருவனவுமது. இனி வடமொழியினும் 'துவம் அகம்' என்புழிச் சகாரமும் முன்மொழியும் தொக்கு, அகமென்னும் பின்மொழி ஆவாம் எனவும் வயம் எனவும் ஆதேசமாகி, ஏகசேடபதத்துவந்துவனாமென்பர். 'நீயானென்னு மும்மைத் தொகையினும்—நீயவன் யானெனு மும்மைத் தொகையினு—மவனீ யென்னு மும்மைத் தொகையினு—மிறுதி பன்மை யெய்தி யேனவை--யிற்று நிற்பதேக சேடனாம்.' இவ்வுரைச்சூத்திரத்தானுமறிக. இனி யானென்பதனை யாமென உயர்த்துக்கூறுதலும் நீயென்பதனை நீயிரென உயர்த்துக்கூறுதலும் ஏகசேடனாமோவெனின், அவை ஏகசேடனாகாது உபசாரமாமென்க. (சு)

உச. இருமொழி பன்மொழி பின்மொழி யெண்ணே டிரு
மொழியெண், டருமொழி யொற்றொழி திக்கந் தரா
ளஞ் சகமுனிற்கு, மொருமொழி யேனைவிதி காரலக்
கணத்தோடு வரும், பெருமொழி யாகிவெகு விரியன்
மொழிப்பே ரடைந்தே.

இது வெகுவிரீகியாமாறு கூறுகின்றது. துவிபதவெகுவிரீகி, வெகுபதவெகுவிரீகி, சங்கியோத்தரபதவெகுவிரீகி, சங்கியோபயபதவெகுவிரீகி, திகந்தராளலக்ஷணவெகுவிரீகி, சகபூர்வபதவெகுவிரீகி, வியதிகாரலக்ஷணவெகுவிரீகி என வெகுவிரீகி எழுவகையாம். எ - று.

'ஒற்றொழிதிக்கந்தராளம்' திகர் ராளம். 'வரும்' என்பது வினைமுற்றாய் நின்றது. 'பெயா' டு ருள். அன்மொழிப்பொருளடைந்தெனவே, அன்மொழியையடையாமல் அதன்பொருளையடைந்தபின் இருமொழியும் பன்மொழியுந் தொகுமென்க.

வெகுவிரீகிக்கு அன்னியபதார்த்தத்திலே சத்தியென்றும், சக்கியசம்பந்தமான இலக்ஷணை வேண்டாவென்றும், 'இரதநூபுரசக்கிரவாளம்' என்புழி அவ்வச்சொற்களின் பொருண்மேலன்றி அவற்றோடு ஓருசம்பந்தமன்றியும் ஒருநகரத்தை உணர்த்தினாற்போல

வெகுவிரீகி தொகுமென்றும் உணர்க. வடநூலாருரைத்தாங்குரைக்குஞ் சேனாவரையருரை பின்னர்க் காட்டுதும்.

'ஆதி யுதாத்த மன்மொழித் தொகைபெறும்.' 'அந்தோ தாத்த மல்லவை பெறுமே.' இவை உரைச்சூத்திரம்.

உ-ம். 'உண்ணாமுலை;' 'முற்றாமுலை;' 'பாயினமேகலை;' 'பரசுபாணி;' 'ஆரூடவாநரம்;' 'நிட்கிராந்தசனம்' என உபயபதவெகுவிரீகி வரும். திருக்கோவையாரில், 'பாயினமேகலை' யைப் பெயரெச்சம் ஒருசொல்லாகலின், ஆகுபெயரென்பர் பேராசிரியர். பெயரெச்சம் நிறுத்தசொல்லுங் குறித்துவருகிளவியுமாகப் புணர்ந்தது நோக்காமையின், மறந்து அவ்வாறுரைத்தார்.

'மட்டுவார்குழல்;' 'பொன்னேறுபூண்முலை;' 'திருமயிலாடுதுறை;' 'குடங்கையி னகன்றவிழி;' 'கைபரந்து வண்டிசைக்குங் கூந்தல்;' 'தெள்ளுந்திரையமுது.' எ-ம். 'பராக்கிரமோபார்ச்சித சம்பத்து.' எ-ம். வெகுபதவெகுவிரீகி வரும். இவை, அடையடுத்து இருபதமேயாகலின், வெகுபதத்துவந்துவனுக்கேயன்றி ஒழிந்த தொகைக்கு வாராவென்க, வருமென்பர் வடநூலார்.

'கார்நாற்பது;' 'இனியநாற்பது;' 'புறநானூறு;' 'கதிராயிரம்' எனச் சங்கியோத்தரபதவெகுவிரீகி வரும். இதற்கு இன்னதொகைநிலைக்களத்துப் பிறந்ததெனக் குறியீடு கூறிலர்.

'பத்தெட்டுடைமை பலருள்ளும் பாடெய்தும்;' 'அஞ்சாறு;' 'ஏழெட்டு' எனச் சங்கியோபயபதவெகுவிரீகி வரும்.

'வடகிழக்கு;' 'வடமேற்கு;' 'தென்கிழக்கு;' 'தென்மேற்கு' எனத் திகந்தராளலக்ஷணவெகுவிரீகி வரும். இதற்கும் இன்னதொகையெனக் குறியீடு கூறிலர். "திரிபுவேறு கிளப்பி னொற்றுமுகரமுங்—கெடுதல் வேண்டும்" எனச் சந்தியிலக்கணஞ்சொன்னவர் குறியீடு கூறிலர். 'கிழக்குமேற்கு' என்பது துவந்துவன்.

'கெழுதகைமை;' 'கூடியகாமம்;' 'சகநிதி;' 'சமூலம்' எனச் சகபூர்வபதவெகுவிரீகி வரும். கெழுதகைமையாவது கூடியதகைமையினையுடையான் எனப் பொருள்பட்டவிடத்துச் சகபூர்வபதவெகுவிரீகியாம். கெழு, சக என்பன உபசர்க்கம்.

'கேசாகேசி;' 'தண்டாதண்டி;' 'முட்டீமுட்டி' என வியதிகாரலக்கணவெகுவிரீகி வரும். இது வடமொழிக்கல்லது வாராதென்க. வியதிகாரலக்கணம், அன்னியோன்னியம், இதரேதரம், தடுமாற்றம் இவை சமாநார்த்தகம்.

'மலர்க்குழல்;' 'தகரஞாழல்;' 'பவளவாய்;' 'கருங்கண்;' தாழ்குழல்' இவை தத்தம்பொருளாய் நில்லாது அன்மொழிப்பொருளாய் நிற்கிற் படுத்துச்சொல்லுக. எடுத்தல் படுத்தல் உயிர்க்கல்லது மெய்க்கின்மையின், ஈண்டு ஈற்றயலெனும் உபதையைப் படுத்துச்சொல்லுக. "சுட்டுமுத லாகிய வாய்தவிறுதி" எனத் தொல்காப்பியரும் ஈற்றயலை இறுதியென்பர்.

இனி வடநூலார் உம்மைத்தொகையில் வெகுவிரீகி வாராதென்றும், 'ஆநகதுந்துபி' என்பதனை மத்தியபதலோபன்மேல் வந்த வெகுவிரீகியென்றும், அவருட்சிலர் 'ஆநகதுந்துபி' என்பதனை உம்மைத்தொகைமேல் வந்த வெகுவிரீகியென்றுங்கூறுவர். தமிழ் நூலினும் 'தகரஞாழல்' என்பதொன்றனையே தொல்காப்பியர் நன்னூலார் முதலாயினார் உம்மைத்தொகைப்புறத்து வந்த அன்மொழித்தொகைக்குதாரணங் காட்டியதல்லது வேறுதாரணமின்மையானும், செய்யுட்களில் யாண்டும் உம்மைத்தொகைப்புறத்து அன்மொழி வாராமையானும், 'தகரஞாழல்' என்பது தகரஞாழலாகிய சாந்தென்பதன்றிச் சாந்து பூசினுளெனப் பொருள் விரிதலின் 'துவிரேபம்' என்பதுபோல அன்மொழிக்கன்மொழியாய் வருதலானும், அது பயின்று வாராமையறிக. "தத்தம் பொருள்வயிற் றம்மொடு சிவணலு—மொப்பில் வழியாற் பிறிதுபொருள் சுட்டலும்." எனத் தொல்காப்பியர் கூறிய ஆகுபெயரிலக்கணத்தைப் பாணினிபகவான் தற்குணசம்விஞ்ஞாநவெகுவிரீகி, அதற்குணசம்விஞ்ஞாநவெகுவிரீகி என அன்மொழிக்கிலக்கணமாகக் கூறுவர்.

இனிப் "பண்பு தொகவரூஉங் கிளவி யானு—மும்மை தொக்க பெயர்வயி னானு—வேற்றுமை தொக்க பெயர்வயி னானு—மீற்றுநின் றியலு மன்மொழித் தொகையே." என்னுஞ் சூத்திரத்திற்குப் பண்புச்சொற்றொகுதிஞ்சொல்லினும் உம்மை தொக்க பெயர்க்கண்ணும் வேற்றுமை தொக்க பெயர்க்கண்ணும் இறுதிச்சொற்கண் நின்று நடக்கும் அன்மொழித்தொகையென்றவாறு. பண்புத்தொகைபடவும், உம்மைத்தொகைபடவும், வேற்றுமைத்தொகைபடவும், அச்சொற்றொக்கபின் அத்தொகை அன்மொழித்தொகையாகாமையின், தொகுவதன்முன் அவற்றிற்கு நிலைக்களமாகிய சொற்பற்றி வருமென்பது விளக்கிய, தொகைவயினானும் என்றது 'பண்பு தொகவரூஉங் கிளவி யானு—மும்மை தொக்க பெயர்வயி னானும்—வேற்றுமை தொக்க பெயர்வயி னானும்' என்றார். இறுதிச்சொற்படுத்தலோசையாற் பொருள்விளக்குமாறு வழக்கினுள்ளுஞ் செய்யுளுள்ளுங் கண்டுகொள்க. 'வெள்ளாடை' 'அகர

வீறு' என்பன பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 'தகரஞாழல்' என்பது உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. 'பொற்றொடி' என்பது வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. இனி அவை 'வெள்ளாடையுடுத்தாள்.' எ-ம். 'அகரமாகியவீற்றையுடையசொல்.' எ-ம். 'தகரமு ஞாழலுமாகிய சாந்துபூசினாள்.' எ-ம். 'பொற்றொடி தொட்டாள்.' எ-ம. விரியும். பண்புத்தொகைப்புறத்துப் பிறத்தல் பெரும்பான்மையாகலின் முறையிற் கூறாது அதனை முற்கூறினார். வேற்றுமைத்தொகைப்புறத்துப் பிறத்தலின் உம்மைத்தொகைப்புறத்துப் பிறத்தல் சிறுபான்மையாயினும், ஒருபயனோக்கி அதனை அதன்முன் வைத்தார். யாதோபயனெனின், சிறுபான்மை உவமத்தொகையினும் வினைத்தொகையினும் அன்மொழி பிறக்குமென்ப துணர்த்துதலென்க. அவை 'பவளவாய்;' 'திரிதாடி' என வந்து, பவளம்போலும் வாயையுடையாள் திரிந்த தாடியினையுடையாள் என விரியும். பிறவுமன்ன. இது சேனாவரையர் கருத்து. (எ)

௨௫. தற்புரு டன்றுவி குக்கர்ம தாரயன் றமுதன்மை,
பிற்பத மாமெழு வாயா மொரூஉத்தொகை பெண்
ணணங்கே, முற்பத மவ்வி யயீபாவ மொப்பு முறை
பிறழுஞ், சொற்பதந் தொக்கவை யெல்லா முதன்
மை துவந்தனுக்கே.

இஃது அத்தொகைகளுட் பிரதானபதங்கூறுகின்றது. தற்புருடன் முதன்மூன்றும் உத்தரபதப்பிரதானமாம். பிரதமாதற்புருடன் பூர்வபதப்பிரதானமாம். அவ்வியயீபாவமும் உபமிதசமாசனும் மாறி வரும். துவந்துவன் உபயபதப்பிரதானமாம். எ-று.

உ-ம். 'யானைக்கோடு;' 'பலாக்காய்வந்தது.' எ-ம். 'இருதேவர்பார்ப்பார்.' எ-ம். 'நீலக்குவளை;' 'சாரைப்பாம்பு.' எ-ம். முறையே மூன்றும் உத்தரபதப்பிரதானமாய் வரும். 'நுனிநா;' 'இடைநா;' 'முதனு' எனப் பிரதமாதற்புருடன் பூர்வபதப்பிரதானமாய் வரும். 'யதாக்கிரமம்;' 'உபகும்பம்;' 'சாகப்பிரதி' என்னுமிவை ஒருகால் உத்தரபதப்பிரதானமாகியும் ஒருகாற் பூர்வபதப் பிரதானமாகியும் வரும். 'மதிமுகம்;' 'பெண்ணணங்கு' என்னும் உபமிதசமாசனுமது. 'உவாப்பதினான்கு;' 'இராப்பகல்;' 'கபிலபரணர்' எனத் துவந்துவன் உபயபதப்பிரதானமாய் வரும். 'எழுத்தசை சீர் பந்த மடிதொடை, என்பது வெகுபதமாகலின், 'சொற்பதந்

தொக்கவையெல்லாம் முதன்மை' யென்றும். வெகுவிரீகி அந்நிய பதார்த்தப்பிரதானமெனபது ஆண்டே அவ்விலக்கணத்தோடு கூறினும். (அ)

உகூ. சொன்ன தொகைக்கு ளுருபும் பொருளுந் தொகுவ
தெல்லா, மின்னகை யாய்மத் தியபத லோப னியை
ந்தசொற்கள், பின்னரு மாகம வாதேச லோபம் பெ
றும்பெறுமால், வன்ன விகாரம் விபரிய நாசம்வன்
னுகமமே.

இது மத்தியபதலோபனும் புணர்ச்சிவிகாரமுங்கூறுகின்றது. தற்புருடனுள் உருபும் பொருளுட் உடன்றொகுதல மத்தியபதலோபனும். ஆகமமுதலாகிய மூன்றும் பெறும். தனிமொழியுந் தொடர்மொழியுங் காரணமின்றி வன்னவிகாரமுதல் நானகும் பெறும். எ - று.

உ-ம். 'வளைக்கை;' 'பொற்றொடி;' 'மாருநீர்வையம்;' 'விரிநீர் வியனுலகம்;' 'நாமநீர்வைப்பு;' 'கடன்ஞாலம்;' 'வாயுணவினமாக்கள்.' எ-ம். 'பரசுராமன்;' 'கோதண்டராமன்;' 'தசரதராமன.' எ-ம். இருவகைமொழியினும் மத்திபதலோபன வரும். சாகப்பிரியபார்த்திவன் 'சாகபார்த்திவன' என்பதனைக் காதுதியாயனார் மத்தியபதலோபனென்பர், பாடியகாரர் இலக்கணையெனபர். இவை விரியுங்கால கனலொடு புகையுங் கூடவொடு நிழலும்போல் உருபும் பொருளும் ஒருஙகு விரியும். "மக்கண் முறைதொகூஉ மருங்கினான." எனனுஞ் சூத்திரத்தாற்காட்டிய 'சாத்தங்கொற்றன்;' 'பெருவாயினமுள்ளி;' 'காரிமாறன்;' 'வடுகஙகண்ணன்' என்பனவுமது. செம்பூததாமரை வெண்பூவலரி என்னும வண்ணச்சினைச் சொல் 'செந்தாமரை' 'வெள்ளலரி' என வருவன மத்தியபதலோபன், செங்கரும்பு செங்கிடைபோல முதலினது பண்பாகாமையி னென்க. செங்கமலத்தலர்போலுங்கண், கை, கால், செங்காந்தட் போது எனவும் வருமாலெனின், அவயவவிசேடணம் அவயவியோடொட்டி வந்தனவென்க. ஆதலிற் சொல்லுவான்குறிப்பெப்படி அப்படியென்க. 'வத்திரு விவட்சை விவட்சா தீன—முரைப்போர் குறிப்பென் றுரைத்தனர் புலவர்.' இஃதுரைச்சூத்திரம். நன்னூலாரும் "உரைப்போர்குறிப்பு" என்றார். 'மலர்முகம்;' தாமரைமுகம்' எனபன பூர்வபதலோபனும் உத்தரபதலோபனுமாகாவோவெனின், தாமரையைச் சினையின் பிரத்தியயமொன்று வந்து கெடுமென்பர் காத்தியாயனர், பாடியகாரர் தாமரையென்பது முதலுக்கும் சினைக்கும் பெயரென்பர். ஐந்திரநிறைந்த தொல்காப்பி

யர் "முதலிற் கூறுஞ் சினையறி கிளவியுஞ்—சினையிற் கூறு முதலறி கிளவியும்" என்பர். ஆதலின் இந்திரனும் இலக்கணநேர்ந்தானாயிற்று.

'யானைக்கோடு;' 'பலாக்காய்.' எ-ம். 'மரப்பாவை;' 'நாடுரி.' எ-ம். 'மரவேர்;' 'மரநீட்சி.' எ-ம். முறையே ஆகமமும் ஆதேசமும் லோபமும் வரும். 'மிகலே யாகமங் கெடமிக லாதேசங்—கெடுதலே லோபங் கிளக்குங் காலே.' இஃதுரைச்சூத்திரம்.

'உரிச்சொன்மேனா;' 'அஃறிணைமேனா;' 'கடல்கண்டன்ன கண்ணகன் பரப்பு;' மாகி 'மாசி' என வன்னவிகாரம் வரும். வைசாகி 'வைகாசி;' தசை 'சதை' என வன்னவிபரியயம் வரும். 'காமவிதி கண்முக மென்மருங்குல் செய்யவாய்—தோமி றுகடினி சொல்லமுதம்' என்னுஞ் செய்யுளில் காவி, மதி, துடி, கனி என வருவனவுமது. யாவர் யார் என வன்னநாசம் வரும். யாது யாவது என வன்னாகமம் வரும், "பலரறி சொன்முன் யாவ ரென்னும்—பெயரிடை வகரங் கெடுதலு மேனை—யொன்றறி சொன்முன் யாதென் வினாவிடை—யொன்றிய வகரம் வருதலும்" என்னுஞ் சூத்திரவிதி பெற்றதுமது. முன்னில் என்பது 'முன்றில்.' எ-ம். 'அட்டிலோலை தொட்டனை நில்' என்பது 'நின்மே' எனவும் வருதலுமது. 'மயூரம்;' 'கூடோத்துமா' விகாரம், 'நாரிகேளி;' 'சிங்கம்' விபரியயம், 'பிருஷோதரன்' வன்னநாசம், 'அஞ்சம்' வன்னாகமம் என வடமொழியினும் வரும். இவை தனிமொழியாகத் தொடர்மொழியாக இன்னவெழுத்தின்பின் இன்னவெழுத்து வந்தால் இவ்வண்ணமாமென்னும் விதியின்றி வருதலின், வேறெ வைத்தாம்.

தட்டை தண்டை முதலிய செய்யுள்விகாரங்களும் இவையன்றோவெனின்; அடிப்பாடுந்தொடையும் இன்னோசையுங்காரணமாகச் சந்தோபங்கம் வாராமல் வருதலின், அவையன்றென்க. வடமொழியினும் 'அபிமாஷம் மஷங் குர்யாத் சந்தோபங்கம் நகாரயேத்' எனவரும். 'பொற்குடம்' திரிதல். 'சண்முகம்;' வாங்மூலம்;' 'வாகீசன்' என்பனபோல ஆதேசமென்பர். வன்னவிகாரமும் ஆதிவிருத்தியும் விகரணியும் விகாரமெனக் கொள்வர். 'அராஅப்பாம்பு' நிலைமொழியும் வருமொழியும் மிக்க ஆகமம். 'பொற்றூவி' இருமொழியுந் திரிந்த விகாரம். 'தொண்ணூறு' இருமொழி முற்றுந்திரிந்தன. 'ஆந்தை;' 'பூந்தை' உபயபதமுங்கெட்ட லோபம். 'மராஅடி' பூர்வபதலோபவிகாரம். 'பனாஅட்டு;' 'அதாஅ

ன்று' பூர்வபதவிகாரம். அடி, அட்டு, அன்று என்பன உடம்படுமெய் பெறுமையால், பின்மொழிப்பிரகிருதிபாவம்.

'பின்னரும்' என்ற லேசத்தாலே 'கிளிகடிந்தார்;' 'கிளிக்கடிந்தார்;' 'குளங்கரை;' 'குளக்கரை' 'இல்பொருள்;' 'இல்லைபொருள்;' இல்லைப்பொருள்;' 'இல்லாப்பொருள்' இவையெல்லாம் விகற்பம். வைசேடிகம் உறழ்ச்சி என்பதுவுமது. 'கஃறீது' விகாரவிகாரம். 'மேற்றிசை;' 'பொன்னொடு' வருமொழிவிகாரம். இப்புணர்ச்சிவிகாரபேதமெல்லாம் அம்மூன்றினுளடக்கிக்கொள்க. 'நாடுகிழவோன்;' 'காடகமிறந்தோரே;' 'பிரமரிஷி,' 'ஹரீஏதௌ' என்பனவற்றைப் பிரகிருதிபாவமென்பர். 'பெறுவழிப் பெறுமை பிரகிருதிபாவம்.' இஃதுரைச்சூத்திரம்.

இனி இயைந்தசொற்களாவதென்னெனின், நிலைமொழியீற்றெழுத்து முன்னர்ப்பிறந்து கெட்டுப்போக வருமொழிமுதலெழுத்துப் பின்னர்ப்பிறந்துகெடும் இவ்விரண்டும் முறையிற்பிறந்து கெடுவன ஒருங்கு நின்று புணருமாறின்மையிற் புணர்ச்சியென்பதொன்றில்லையாமென்பார்க்கு அச்சொற்களைக் கூறுகின்றோருங் கேட்கின்றோரும் அவ்வோசையை இடையறவுபடாமை உள்ளத்தின்கண்ணே உணர்வாராகலின் அவ்வோசை கேடின்றி உள்ளத்தின்கண் நிலைபெற்றுப் பின்னர்க் கண்கூடாகப் புணர்கின்ற புணர்ச்சிபோலப் புணருஞ் சொற்களென்க. கண்கூடு காட்சியளவை. பூர்வபதத்தினீற்றெழுத்தும் உத்தரபதத்தின் முதலெழுத்தும் தாப்பிசையென்னும் பாசபந்தம்போலப் புணர்வதன்றிப் பூர்வபதமும் உத்தரபதமும் யோகாங்குலிநியாயம்போலப் புணராவாகலின், "நிறுத்த சொல்லி னீறா கெழுத்தொடு—குறித்துவரு கிளவி முதலெழுத் தியைய" என்றார் தொல்காப்பியர். தருக்கநூலார் எழுத்துக்களைப் பிறந்து கெடுமென்பர். சத்தநூலார் கெடாது நித்தியமாமென்பர். 'பணி பணம்;' 'கரிகரலீலை;' 'வஞ்சகரீரம்;' 'கரிகளபம்' என்பன பூர்வபதமும் உத்தரபதமும் சமானார்த்தகமென்பார்க்கு 'வெருவந்த செய்தொழுகும் வெங்கோலன்;' 'அடியளந்தான்றாயதெல்லாம்;' 'கோடாதசெங்கோல்' என்பனபோலக் கேவலபதமாத்திரையாய் நின்றனவென்க. இனிப் 'பாலாறு;' 'பாலா;' 'பால்;' 'பா.' எ-ம். 'கா;' 'காவி;' 'காவிரி.' எ-ம். அக்கரச்சுதகமும் அக்கரவர்த்தனமுமாய் வந்து பொருள்வேறுபட்டாற்போல 'அரா அப்பாம்பு;' 'யானைக்கோடு;' 'மரவேர்;' 'ஒருமாரை;' 'ஆந்தை;' பூந்தை;' என எழுத்துக்கள் மிக்குங்குறைந்துந் தொகைச்சொற்களாக நின்றாலும் வேறுபொருள்படாவென்க.

எழுத்துக்கள் தம்மொடு தாம் புணருமிடத்தும் நிலைமொழியோடு வருமொழி புணருமிடத்தும் முன்னர் ஒருவன் சொல்லச் செவி கருவியாகவுணர்ந்து மனத்தின்கண் நிலைபெற்ற ஒலியெழுத்துக்களைப் பின்னரும் புணருமாற்றால் அகரமுதலெழுத்துக்கெல்லாம் வேறுவேறடையாளமாக எழுதிய வடிவெழுத்திற்குப் "புள்ளியில்லா வெல்லா மெய்யு—முருவுரு வாகி யகரமொ டுயிர்த்தலு—மேனை யுயிரோ டுருபுதிரிந் துயிர்த்தலும்." எ-ம். "மெய்யீறெல்லாம் புள்ளியொடு நிலையல்." எ-ம். கூறிய இலக்கணம் செவி கருவியானுணரும் ஒலியெழுத்துப் பெறுமையின், இவ்விலக்கணம் வேண்டாவென்க. வடமொழி வடிவெழுத்தும் பதினெழ்மொழிவடிவெழுத்தும் இவ்விலக்கணம் பெறுதறிக்கிடந்தமையானுமென்க. "மெய்யி னியக்க மகரமொடு சிவணும்." "மெய்யின் வழியது உயிர்தோன்று நிலையே." என்பது ஒலியெழுத்திற்கிலக்கணமாகலின், வேண்டுமெனக. நன்னூலார் "புள்ளிவிட்டு" எனனுஞ் சூத்திரத்துள் ஒற்று முன்றாய் உயிர் பின்றாய் என ஒலியெழுத்திலக்கணத்தை வடிவெழுத்திலக்கணத்தோடு ஒருங்கோதினரென்க. இனி வடிவெழுத்திலக்கணம் வேண்டாவோவெனின், தமிழெழுத்திற்கு எகர ஒகர மெய் புள்ளி பெறுதலின வேண்டுமெனக் கொள்க. (கூ)

உஎ. நித்த மநித்த மலுக்குலுக் காந்தொகை நின்றநிலை,
மெய்ந்த கிடக்கை முறைத்தொகைய பார்த்தம் விபரி
யமாய், பொய்த்தொகை யாறுமவ் வாறினுந் தோன்
றும் பொருட்பெயர்ப்பின், வைத்த வினைப்பெயர்
தானே யுபபதம் வாறுதலே.

இஃது அததொகைகட்குப் புணர்ச்சி விகற்பத்தால் மறுவலுங் குறி கூறுகின்றது. நித்தமுதலாக விபரியயமீறாக ஆறும் அவ்வாறு வகைத்தொகையினும் எற்புழித் தோன்றி அப்பெயர்பெறும். எ-று.

வடநூலுட்பார்த்தமும் விபரியயமும் இல்லையாயினும், அவற்றின் விகற்பங்கண்டு யாமேகுறிகூறினும்.

உ-ம். 'ஒருகலம்;' 'ஒருபொருள்' இவை துவிகுவில் வந்த நித்தியம். 'ஒன்றுமேதரினுன்' என்னுஞ் சிந்தாமணி விகாரம்: நேரொன்றினுன் எனினமையும். 'ஒன்றுநன் றுள்ளக் கெடும்;' 'தன்றோ ஞான்கி ஞென்றுகைம் மிகூஉம்' என்பன அநித்தியமாமென்பார்க்கு 'நன்றொன் றுள்ளக்கெடும்' எனவுரைத்த பரிமேலழகருரையானுங் காண்க. 'தன்றோ ஞான்கி ஞென்றுகைம் மிகூஉம்' என்றே கொள்க.

'கைம்மிகல்' ஒருசொல். 'கிழக்கேமேற்கு' என்பது உம்மைத்துவந்துவனில வந்த நித்தியம். 'கீழ்மேற்கு' என அநித்தியமாகாமை "இருதிசை புணரின்" எனனுஞ் சூத்திரவிதியாலறிக.

"இரண்டுமுதலொன்பா னிறுதி" என்னுஞ் சூத்திரவிதி பெற்ற 'இருமா' 'இரண்டுமா;' 'மூவுறுப்பு' 'மூன்றுறுப்பு;' 'நாற்கடல்' 'நான்குகடல்;' 'ஐயறிவு' ஐந்தறிவு;' 'அறுமுகம்' 'ஆறுமுகம்;' 'எழுகடல்' 'ஏழ்கடல்,' 'எண்டிசை' 'எட்டுத்திசை.' எ-ம். 'ஐவாய வேட்கையவாவென்பா.' எ-ம். அநித்தியம் வரும்.

'புதல்வரைப்பெறுதல்;' 'மன்னரைச்சேர்ந்தொழுகல்;' 'நூற்றுவரைக்கொல்லி;' 'சேர்ந்தாரைக்கொல்லி;' 'நம்பியைக்கொணர்ந்தவன்;' 'நங்கையைக்கொணர்ந்தவன்;' 'கொற்றனைக்கொணர்ந்தவன;' 'வண்டியைக் கொணர்ந்தவன்' என உருபு தொகாமலே அதுக்கு வரும். அது "உயர்திணை மருங்கி னொழியாது வருதலு—மஃறிணை விரவுப்பெயர்க் கவ்விய னிலையலும்—சாரியை யுள்வழித் தன்னுருபு நிலையலும்" என்னுஞ் சூத்திரத்தாலறிக.

'இகழ்வார்ப் பொறுத்தல்;' 'கேளிர்ப்பிரிப்பர்' என விகாரத்தால் உயர்திணைமருங்கினொழிந்து அதுக்கு வரும்.

'சூத்திரகாரன்;' 'கும்பகாரன்;' 'உரைகாரன்;' 'கட்டியங்காரன்;' 'இசைகாரன்' என உபபதசமாசன் வரும்.

'பலாக்காய்' 'மாங்காய்;' 'நாநுனி;' 'நாவிளிம்பு' எனப் பாந்தம் வரும்.

'நுனிக்கொம்பர்;' 'கடைக்கண்;' 'அரைக்காசு;' 'முன்றில்;' 'மீகண்;' 'செய்த வேள்வியர்;' 'எய்தியசெல்வத்தர்;' 'வீழ்ந்தபாசத்தர்;' 'அறஞ்சொல்லுநெஞ்சத்தான்;' 'கழிந்தவுண்டியர்;' 'வேண்டாவுயிரார்;' 'அருங்கேடன்;' 'கொண்டகூழ்த்தாக்கி;' 'உச்சிக் கூப்பிய கையினர்;' 'வீதராகி;' 'பெண்ணணங்கு;' 'வாய்ப்பவளம்;' 'முகமதி' எனப் பிரதமாதற்புருடன் உபமிதசமாசனும் தத்திதனுமாக வரும். (க0)

உஅ. சுட்டெழுத் தாதியந் தப்பத மாகத் தொகவவற்றி,
னெட்டெழுத் தொன்றல் சவன்னத்தி னீட்சிபின்
னீட்சிதலைப், பட்டுமற் றோரச் சியைந்தாற் குணமுற்
பதந்திரியக், கட்டழித் தந்தம் புணர்ந்தால் விருத்தி
கனங்குழையே.

இஃது அத்தொகைகட்கும் மேல்வருந் தத்திதனுக்கும் வருஞ் சந்திவிதியும் அவற்றின்குறியுங் கூறுகின்றது. வருமொழிமுதலும் நிலைமொழியீறும் சுட்டெழுத்துக்களாய் நின்று தொகச் சுட்டெழுத்துக்கினமாகிய நெட்டெழுத்தொன்று வருதல் சவன்னதீர்க்கமெனப் பெயர்பெறும். தத்தமினமல்லாத நெட்டெழுத்துக்கள் வரின் அது குணமெனப் பெயர்பெறும். நிலைமொழிதிரியத் தத்திதப்பிரத்தியயம் வந்து புணர்தல் ஆதிவிருத்தியெனப் பெயர்பெறும். எ - று. எனவே, மேல்வருந் தத்திதனுக்குந்தோற்றுவாய் செய்ததூஉமாயிற்று.

'தானப் பிரயத் தினத்தா லொக்கு—மினவெழுத் தெல்லாஞ் சவன்னமென்ப.' 'முயற்சி பிரயத் தினமென மொழிப.' இவை உரைச்சூத்திரம்.

உ-ம். பத+அம்புயம்=பதாம்புயம், சுசி+இந்திரன்=சுசீந்திரன், வெகு+உவமை=வெகூவமை, வத்து+உவமை=வத்தூவமை எனச் சுட்டெழுத்து மூன்றும் தத்தநெட்டெழுத்து வரக்கெட்டு வந்த சவன்னதீர்க்கமாம். அர்த்தநாரீசுரன், திருக்காமீசுரன் என நெட்டெழுத்து முதலாய்ச் சவன்னதீர்க்கம் வருதலுங் கொள்க. கங்கா+உதகம், குல+உத்துங்கன், நர+இந்திரன் என நின்று, கங்கோதகம், குலோத்துங்கன், நரேந்திரன் எனப் பிறிதோரச்சு வந்த குணசந்தியாம். பிரம+ஏவசத்தியம், ஏக+ஏகம் என்பன பிரமைவசத்தியம், ஏகைகம். எ-ம். பிரம+ஓதனம்=பிரமோதனம். எ-ம். வரும். குள+ஓதனம், விம்ப+ஓட்டம், குளோதனம், விம்போட்டம் என ஓகாரந் திரியாமலும் வரும். தசரதன்மகன் தாசரதி, சனகன்மகள் சானகி, இருடிகணூல் ஆரிடம், இந்திரனூல் ஐந்திரம், வேதசம்பந்தம் வைதிகம், கோசலத்துப் பிறந்தாள் கௌசலை என்பன விருத்தி. (௧௧)

இரண்டாவது சமாசபடலம் முடிந்தது.

## மூன்றாவது

# தத்திதபடலம்.

௨கூ. துன்னுந் தொடர்மொழி யெல்லா மொழித்துமுற் சொற்றனைப்போய், மன்னும் பிரத்திய மேதத்தி தாந்தம் வழாததனைப், பன்னும் பொழுது வலையான் முயன்றுண் பவன்வலைய, னென்னும் பகுபதப் பேராங் குறிப்புமுற் றென்றறியே.

தத்திதனிலக்கணங்கூறுகின்றது. முற்சொற்றன்னைத் துன்னுந் தொடர்மொழியெல்லாமொழித்துப் போய்ச் சேரும் பிரத்தியயத்தையுடைய சொல்லே தத்திதாந்தத்தையுடைய சொல்லாம். அதனை விரித்துத் தொகுத்து உதாரணங்காட்டும்பொழுது வலையான் முயன்றுண்பவன் வலையன் என்னும் பகுபதக்குறிப்புப் பெயராம். எ - று.

தொகைக்கு இவ்வாறு கொள்ளாமை விவட்சாதீனம். 'பிரித்தனர் காட்டல்' என்னுஞ் சூத்திரத்திற் சேனாவரையரும் அருவாளநிலத்தான் அருவாளன், சோழநிலத்தான் சோழியன் என வருமென்பர். பொதுப்பட 'முற்சொற்றனை' என்றதனாலே, தனிச்சொல்லுந் தொகைச்சொல்லுங்கொள்க. ஆதலிற் றொகையுள்ளும் முன்னின்ற மொழியை விட்டுப் பின்னின்ற மொழியைக் கெடுத்துப் பிரத்தியயத்தைக் கூட்டி முடித்தலும், பின்னின்ற மொழியைக் கெடாது முற்றும் முன்னின்ற மொழியாக நிறுத்திப் பிரத்தியயங்கூட்டி முடித்தலுமாம். (௧)

௩0. சாமா னியமவ் வியம்பாவ மூன்றெனத் தத்திதன்வே றாமா லவற்றின் விகுதியு மூன்றென லாகிநிற்குஞ் சோமா னனத்திரு வேனள ரட்டுறு தும்மகட்டைச் சாமா னியத்தன திங்கிருத் தோடுந் தலைப்படுமே.

இஃது தத்திதன்பகுதியும் அவற்றுள் ஒன்றன்விகுதியுங் கூறுகின்றது. சாமானியதத்திதன், அவ்வியயதத்திதன், பாவதத்திதன் எனத் தத்திதன் மூன்றாகலின், அவற்றின் பிரத்தியயமும் மூன்றாம். அவற்றுள், சாமானியதத்திதனுக்கு னவ்வொற்றும், ளவ்வொற்றும், ரவ்வொற்றும், டு று து என்னும் மூன்றுயிர்மெய்யும், மகர

வொற்றும், சுட்டெழுத்துக்களும், ஐகாரமும் பிரத்தியயமாம். அன்றியும், இப்பிரத்தியயங்கள் திங்கென்னும் வினைமுற்றுச் சொற்கும் கிருத்தென்னும் வினைமுற்றுப்பெயர்க்கும் மிச்சிரப்பிரத்தியயமாய் நிற்கும். எ - று.

ஆமென்றது 'ஆகிநிற்கும்' என்றதனால் கிருற்பாவமென்னுந் தொழிற்பெயர்க்கு ஈறாதலுஞ் சிறுபான்மை கொள்க.

உம்மையால் இப்பிரத்தியயங்களுட்சில இடைநிலையெழுத்துக்களோடும் பதபூர்த்தியென்னுஞ் சாரியையோடும் தலைப்படுதலுங் கொளக. சாரியை பற்றுசுபோல விகுதிபதவுருபுகளிடை நின்று புணர்த்துவது. இக்காலத்துக் கம்மியர் பற்றுசினை இராகியென்பர்.

உ-ம். குழையன், குழையள், குழையர், குண்டுகட்டு, காதற்று, முதற்று, குழையது, காபிலம், தொல்காப்பியம், அவிநயம், பாணினியம், கௌடம், திராவிடம், குழையின, வில்லி, வாளி, நம்பி, வடுகு, தெலுங்கு, நங்கை, கௌசலை. எ-ம். சூலி, கபாலி, தந்தி. எ-ம். இருவகைமொழியினும் வரும். தொல்காப்பியம், காபிலம் என்பன ஈறு திரிந்த ஆகுபெயரன்றோவெனின், "முதலிற்கூறும்" என்னும் ஆகுபெயர்ச்சூத்திரத்துள் சேனாவரையர் வெற்பன் சேர்ப்பன் என்பனபோல வந்த வினைக்குறிப்புப் பெயரென்பராகலானும், ஈறுதிரிதல் ஆகுபெயர்க்காகாமையறிக. பெயரியலிற் றொல்காப்பியர் கூறியபெயர்களுட் சிலவொழிந்து பெரும்பான்மையும் வரும் பெயர்களெல்லாம் தத்திதனென்க. பரத்திரிமகன் பாரத்திரைணேயன் இது தொகைநிலைத்தொடர்மொழி முற்சொல்லாய் நின்று வரும். கனங்குழையாள், பொற்றொடியாள் என்பனவுமது. தெலுங்கன்சொல் தெலுங்கு, வடுகன்சொல் வடுகு இவை தொகைநிலைத்தொடர்மொழியுள் முற்சொற்றன்னைநிறுத்தி அதனொடு தொக்க சொல்லென்னும் பிற்பதத்தையழித்து முற்சொல்லினீற்றினையுமழித்து உகரப்பிரத்தியயமேற்றி, தெலுங்கு, வடுகு என வரும். வலையன், பெண்டாட்டி, வலைச்சி என ஒருமொழியினும், பொருப்பரசன்மகள் பொருப்பரசி எனத் தொகையினும் வரும்.

வந்தான், வந்தாள், வந்தார், வந்தது, போயிற்று, சொல்லும், வந்தன எனத் திங்கோடு வரும். பிறவுமன்ன. வந்தவன், வந்தவள், வந்தவர் எனக் கிருத்தோடும் வரும். தீன், பாய்த்துள், புணர், சாக்காடு, பேறு, அறிவது, ஆக்கம், புணர்ச்சி, புணர்ப்பு, உடுக்கை எனக் கிருற்பாவபதத்தோடும் வரும்.      (உ)

௩௧. உண்ணு மதனு லுரைக்கு மிதனை யுதனொடொக்கு
மெண்ணு மதனை யிதனுக்கு நாயக னீங்கிருக்கும்
பண்ணு மதனைப் பயிலு மிதற்பல வற்றினையு [லே.
நண்ணுமென் றுத லுடையவன் மேனிற்கு நன்னுத

இது சாமானிய தத்திதபேதங் கூறுகின்றது. அதனாலுண்ணன், முதலாகப் பலவற்றினையு நண்ணுமென்றுதலீறாக வரும் பொருண்மையெல்லாம் உடையான்மேனிற்கும் சாமானியதத்திதனாம். எ - று.

'உடையான் திரவிய விசிட்டன் விசேடியம்.' இஃதுரைச் சூத்திரம்.

அதனாலுண்ணலாவது வலைபன். இதனையுரைத்தலாவது வைதிகன், பௌராணிகன், கவிஞன். உதனொடொத்தலாவது பொன்னனான், மயிலன்னாள், கனகாதிசன், இருடிதுல்லியன. அதனையெண்ணலாவது சோதிடன். இதனுக்கு நாயகனாவது வைதாப்பன், நைடதன், கௌசலன், வைகைத்துறைவன, குமரிச்சேர்ப்பன, மலையமான், புனனாடன், தமிழ்நாடன், புலியூரன். ஈங்கிருத்தலாவது சோழநாடன், பாண்டிநாடன், பட்டினவன், நாகரிகன். அதனைப் பண்ணலாவது மருத்துவன. இதனைப்பயிறலாவது கூத்தன், நிருத்தன.

பலவற்றினையு நண்ணலாவது ஈண்டுரைத்துரையாத பொருள்களையும் குணத்தையும் எண்ணையும் சாதியையும் காலத்தையும் அவயவத்தையும் அவற்றோடியைந்த வினைகளையுங் கொள்க. ஈண்டுரைத்துரையாத பொருள்களாவது தண்டி, குண்டலி, வில்லி, வாளி, கச்சினன், கழலினன் என வரும். குணமாவது கரியன், செய்யன், தீரக்கன், ரத்தா, சுக்கிலா, சாமளா, பீதா என வரும். எண்ணாவது பஞ்சவர், அட்டசகச்சிரர், பஞ்சகம், அட்டமம், தசமம், சதுட்டயம், ஏகாதசி, துவாதசி, பஞ்சதசி, ஒருவர், இருவர், எழுவர் என வரும். சாதியாவது பார்ப்பார், அரசர், வணிகர், வேளாளர், பிராமணர், சத்திரியர், வைசியர் சூத்திரர் என வரும். காலமாவது விசாகன், பரணியான் என வரும். அவயவமாவது கண்ணன், செவியன், தந்தி, கும்பி, கரி, பணி என வரும். அவற்றோடியைந்த வினைகளாவது கச்சினன், கழலினன் என வரும். கச்சினையுடுத்தவன், கழலினைக்கட்டினவன் என்னுந் தொடர்மொழிகள் கச்சுக் கழலென்னும் முற்சொல்லொழிய மற்றையுருபும் வினைச்சொல்லும் போய், அன்னென்னுமீறு வந்து, சாரியை பெ

ற்று, முற்சொல்லோடு புணர்ந்து, கச்சினன், கழலினன் எனத் திரவியவிசிட்டனாகப் பொருள்பட்டு, உடைப்பொருண்மேற்பட உடையான் கீழ்ப்பட மேலைக்கிளவியொடு வேறுபாடில்லாவுடைய வன்மேனின்றன. ஒழிந்தனவும் இவ்வாறே கொள்க. (௧)

௧௨. வல்லா ரிளங்கொங்கை மாதே யிவற்கு மகன் மகண் மற், றல்லா முறைவருக் கங்கிளை பத்தனென் றாதல் புறஞ், செல்லா துடைப்பொருண் மேனிற்கு மித்தத் திதப்பொருண்மை, யெல்லாம் விசிட்டங்கொள் சா மா னியமென் றியம்புவரே.

இதுவுமது. இவற்கு மகன் முதலாகப் பத்தனீறாக வரும் பொருண்மையெல்லாம் உடைப்பொருண்மேனிற்கும் சாமானிய தத்திதனாம். எ - று.

'உடைப்பொருள் விசிட்டத் திரவியம் விசேடம்.' 'உடைமை விசிட்டமொருபொருட் கிளவி.' இவை உரைச்சூத்திரம்.

உ-ம். மகனாவது கார்த்திகேயன், காங்கேயன், வைநதேயன், வைச்சிரவணன். மகளாவது பார்ப்பதி, பாகிரதி, பொருப்பரசி, சாத்தி, கொற்றி. வாக்கமாவது ராகவன், காகுத்தன், கௌரவன். கிளையாவது தமன், தமள், தமர், நமன், நமள், நமர், நுமன், நுமள், நுமர், மதீயர், அஸ்மதீயர், துவதீயர், யுஷ்மதீயர், ததீயர். இவையல்லாத முறையாவது தந்தை, எந்தை, நுந்தை, தங்கை, எங்கை, தம்பி, எம்பி, உம்பி, பிதாமகன், பௌத்திரன், பிதிர்வியன், மாதுலன் என வரும். நம்பி, நங்கை என்பன முறையன்றி வத்திருவிவட்சையாகலின், இதனுக்கு நாயகனுள் அடங்கும். பத்தனாவது சைவன் பாகவதன். இவையெல்லாம் உடையான்மேற்பட உடைப்பொருள் கீழ்ப்பட உடைப்பொருளென்னும் விசிட்டத்திரவியத்தின்மேனிற்குந் தத்திதப்பிரத்தியயம். ஒருசார்வடநூலார் அவற்றை விசேடியத்தின்மேனின்றவெனவும், இவற்றை விசேடணத்தின்மேனின்றவெனவுங் கூறுவர்.

இனி அஃறிணையினும் இவ்வாறு 'பரியது;' 'கூர்ங்கோட்டது;' 'நல்லாளுடையதரண்;' தொல்காப்பியம், பாணினீயம், ஐந்திரம், 'யானெனதென்னுஞ் செருக்கு;' 'போகாதமம்;' 'தமது பாத்துண்டற்றால்;' 'தனதாயிற்றானுமதனைவழங்கான்;' 'தினதேபெருமம்;' அஃதில்லாருடையதுடையரோ;' 'தன்கைத்து;' 'பிடித்தெருவும்;' 'வகைதெரிவான் கட்டே' என வரும். இனித் தனது, தம

என்று அஃறிணைக்கண் இருமையினும் வேறு வந்தாற்போல உயர்
திணைக்கண் தனன், தனள், தனர் என வாராமையானும், சிவன்ற
மர், டணிவண்ணனன்றமர், நமன்றமர், கல்லாமா வன்னோர்தமர் என
இருமையினும் வருதலானும், "த ந நு எ எனுமவை" என்னுஞ்
சூத்திரத்துள் சேனாவரையர் இவற்றை இருமைக்கும் பொதுவென்
றும் முதலுமீறும் பிரிக்கப்படாவென்றுங் கூறுவர். இக்கருத்தறி
யாத நச்சினார்க்கினியார் தாம், நாம் என்பன குறுகி நின்று ஈறு
பெற்றவென்று மாறுபடக் கூறுவர். 'மகன்றந்தைக் காற்று முதவி
யிவன்றந்தை.' எ-ம். 'நல்விளங்கோசர்தந்தை.' எ-ம். வருதலின்,
தந்தை என்பதும் இருமைக்கும் பொதுவாம். "காலக்கிளவி" என்
னுஞ் சூத்திரத்தில் குழையன் என்புழி உடைப்பொருண்மேற்பட
உடையான் கீழ்ப்பட அன்னீறு குழையென்னும் மேலைக்கிளவி
யொடு வேறுபாடிலவாய் நின்றதென்பர் சேனாவரையர். அஃதொ
க்கும், விற்காமன், குழைச்சாத்தன் என்ற தொகை பிரிந்து தனித்
தனி நின்றவழியும் குழை. எ-ம். சாத்தன். எ-ம். வில. எ-ம்.
காமன். எ-ம். பொருள்படும். வில்லி, குழையன் என்ற தத்திதன்
பிரிந்து தனித்தனி நிறைவழி வில், குழை எனப் பொருள்பட்டு,
இ, அன் என்பன உடையவனென்றாகப் பூண்டவனென்றாக
யாதானுமொருபொருள் படாமைபற்றியென்க. இனி நச்சினார்க்கி
னியார் குழையன் என்புழி மேல்வந்து முடிக்கும் வினைமுதற்பெ
யரைத் தோற்றுவித்து நிற்கும் அன்னென்னும் பால்காட்டுமீறு
நின்று உடைப்பொருளைத் தனக்குரிமைசெய்யும் உடைமையை
விரித்து நிற்குமென்றார். விசிட்டங்கொளலாவது இப்பொருளையு
டையவன் இவனெனவும், இவனுடையது இப்பொருளெனவும்
இருவகையாய் நிற்றல். குழுவி, மழவன், மற்றையான் என்பன
அவ்வியயத்தோடு வந்த தத்திதன். (௬)

௫௫. பேர்கொண்ட சுட்டுப் பெயரிற் பிளந்துநில் லாவிட
னு, நேர்கொண்ட வெண்சுட் டெகாரங்க ளோடொடு
நின்றனவு, மேர்கொண்ட வேழனிடப் பொருள் கா
ட்டு மிடைச்சொற்களாந், தார்கொண்ட பூங்குழ
லாயவை யவ்விய தத்திதனே.

இஃது அவ்வியயதத்திதனுமாறு கூறுகின்றது. சுட்டுப்பெய
ருட்பிளந்து நில்லாத இடப்பெயர்களும், எண் முதலியவை ஏழாம்
வேற்றுமைப்பொருளோடு நின்றனவும், ஏழாம்வேற்றுமையிடப்
பொருளுணர்த்தும் இடைச்சொற்களாம். அவையே தமிழ்மொழி
க்கு அவ்வியயதத்திதனும். எ - று.

உ-ம். ஆங்குக்கொண்டான், ஆற்கொண்டான், ஈற்கொண்டான் என வரும். இவையெல்லாம் "சுட்டுச்சினை நீடிய மென்றொடர் மொழி" என்னுஞ் சூத்திரத்தானும் "மன்னுஞ் சின்னு மானு மீனும்" என்னுஞ் சூத்திரத்தானுங் காட்டிய ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணர்த்தும இடைச்சொலலென்னும் அவ்வியயதத்திதன். 'போகொண்ட' என்ற விதப்பால யாண்டு, யாஙகு எஙகு என வினாப்பெயருட் பிளந்து நிலலாத இடப்பெயர் வருதலுங் கொள்க.

ஒருவயின், இருவயின், பலவயின் இவை எண்ணொடு நின்ற ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணர்த்தும் இடைச்சொல்லென்னும அவ்வியயதத்திதன். அவ்வயின், இவ்வயின், உவ்வயின், எவ்வயின, அங்கண், இஙகண், அவ்வாய், ஆயிடை இவை "சுட்டுமுதல வயினு மெகரமுதல வயினும்" எனனுஞ் சூத்திரத்தாற்காட்டிய ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணர்த்தும் இடைச்சொல்லென்னும் அவ்வியயதத்திதன். நன்னூலில் அஙஙனம், இஙஙனம், உஙஙனம் எனக் காட்டியனவுமன்ன. 'அணித்தோ சேய்த்தோ கூறுமினெமக்கே' 'வடாது வேஙகடம்' 'தெனாதுகுமரி, 'குணாது கடல' 'குடாதுகுடகம்' என்பன குடக்குள்ளது குடாது, தெற்குள்ளது தெனாது, வடக்குள்ளது வடாது, குணக்குள்ளது குணாது, சேய்மைக்கண்ணது சேய்த்து, அணிமைக்கண்ணது அணித்து எனப்படும். இவற்றைச் சேனாவரையரும் "இன்றில" என்னுஞ் சூத்திரத்துள் ஏழாம்வேற்றுமைப்பொருட்கண் வந்த வினைக்குறிப்புப்பெயரென்பர். வினைக்குறிப்புப்பெயரெல்லாம் தத்திதனென்பது 'பகுபதப்பேராங் குறிப்பு முற்று' என்றதனுலறிக. யத்திர, தத்திர, அதத்திர, யதஃ, ததஃ, அதஃ எனபனவற்றிற்கு எவ்வயின், அவ்வயின, இவ்வயின, எஙகு, அஙகு, இங்கு எனவருஞ் சுட்டெழுத்துக்களையும் சுட்டுப்பெயரையும் வடமொழியார் விவட்சிதார்த்தமென்பர். அப்பொருள், இபபொருள், அக்கொற்றன், இக்கொற்றன், அவ்விரல் என்பன சுட்டெழுத்துக்களை இடைச்சொல்லாக்கி நிலைமொழியாக நிறுத்தி உயிர்மயங்கியலில வருமொழியோடு புணர்த்தலின், அவை தொகைச்சொல்லென்னுஞ் சமஸ்தபதமல்லது அவ்வியயதத்திதனுகாவென்க. வடமொழியினும் தற்பாவம், தற்புருடன், தற்காலம் என வரும். "சுட்டு முதல்வயின்" என்பது அவ்வயின், இவ்வயின் என்பனவற்றை ஒருமொழியாக்கி, அவற்றோடு வருமொழி புணர்த்தலின், அவை அவ்வியயதத்திதனென்க. சுட்டெழுத்துக்களையும் வினாவெழுத்துக்களையும் நிலைமொழியாக நிறுத்திக் கண், வயின் முதலியவற்றைப் புணர்த்தாமையானும்,

அவ்வயின் இவ்வயின் முதலாயின சொற்கள் அவ்வியயதத்திதனு தல் தெளிக. ஆனென்பது "அதுச்சொல் வேற்றுமை யுடைமையா னுங்—கண்ணென் வேற்றுமை நிலத்தி னானும்." எனப் பெயரின் பின்னின்று ஏழனுருபுமாய், "வினைமுத லானு மான்வரு மிடை யும" என ஏழாம்வேற்றுமையிடப்பொருளுணர்த்தும் இடைச் சொல்லுமாய், ஆங்கென்னும் பொருளுணர்த்தி நின்று, அவ்விய யதத்திதனுயிற்று. (௫)

௫௪. முட்டாது கூறிய பல்வகைப் பண்பின் முதனிலையுங்
கட்டான வாண்பெண் முதலிய நாமமுங் கைக்கொண்டு
மட்டார் மலர்க்குழ லாய்தன்மை காட்டிய மையுறாந்
தட்டாம னிற்பது பாவதத் திதன்றண் டமிழ்க்கே.

இது பாவதத்திதனமாறு கூறுகின்றது. பண்பின்முதனிலை போடும் ஆண் பெண் முதலிய பெயர்களோடும் மகரவைகாரமுஞ் சிறுபான்மை உகரமும் பொருந்திற் பாவதத்திதமாம். எ - று.

'பாவந் தன்மை பகருங் காலே.' இஃது சூத்திரம்.

உ-ம். வெள், செ, கரு, நெடு, பரு என நின்று, மகரவை காரம் பெற்று, வெண்மை, செம்மை, கருமை, நெடுமை, பெருமை. எ-ா. உகரம்பெற்று, வெறுப்பு கறுப்பு எ-ம். இருவகை பண் பின் முதனிலைக்கண் வந்த பாவதத்திதன. தவளபாவம், தாவளி யம், தவளிமா, நீலிமா என வடமொழியினும் வரும்.

ஆண்மை, பெண்மை, தாளாண்மை, குடிமை, செங்கோன்மை, வள்ளன்மை, காதன்மை, இவறன்மை, ஒருமை, இருமை, எழுமை, பகைமை, மேன்மை, புகழ்மை, சமழ்மை இவையெல்லாம் ஆண் பெண் முதலிய நாமத்தின்கண் வந்த பாவதத்திதன.

'மேவர்தனும் வேர்து கெடும்' 'முரசுகெழு தானை மூவருள்ளு — மரசெனப் பட்டது நினதே பெருமை.' இவற்றுள் வேந்து, அரசு என்பன வேந்தனது தன்மை, அரசனது தன்மை எனப் பாவத் தன்மையை யுணர்த்தும் உகரவீற்றுப்பாவதத்திதனம். புங்ஸதுவம், ஸ்திரீத்துவம் என வடமொழியினும் வரும். 'பிறனியலாள் பெண் மை நயவா தவன்' 'நாடொறு நலலாண்மை பண்டுடையேன்' 'பேராண்மைசுட்டல்' என்பனவுமது.

இனிச் 'சொன்மைதெரிதல்;' 'பொருண்மைதெரிதல்' சொற் றெரிதல், பொருடெரிதல், 'இளமைத தன்மைக் குளமெலிந் திரங் கல' இளந்தன்மை, 'முப்பத்து மும்மைத்தேவர்' முப்பத்து முத் தேவர்' 'இருமைவகை தெரிந்து' இருவகை, 'இம்மைப் பிறப்பிற்

பிரியலம்' இப்பிறப்பிற் பிரியலம், 'குறுமையெழுத்தினியல்பைகாரம்' குற்றெழுத்தினியல்பைகாரம், 'இருபேராண்மைசெய்தபூசல்' இருபேராண்மையர் செய்த பூசல், 'மடிமை குடிமைக்கண்' குடிமையான்கண், 'ஆண்மை யடுத்த மகனென் கிளவி' ஆணடுத்த மகனென்கிளவி, [அஃதாவது ஆண்மகனென நிற்கும்.] 'வல்லதரசு' 'வல்லதமைச்சு' 'செங்கோல னல்லன் கொடுங்கோலன் றெவ்வடு போர்—வெங்கோப மால்யானை வேந்து.' என வருவனவெல்லாம் தன்மையுணர்த்தாது தன்மையுடைப்பொருளையேயுணர்த்தலின், பகுதிப்பொருள்விகுதியென்னும் சுவார்த்தத்தில் வந்த பாவதத்திதப்பிரத்தியயம். வடமொழியிலே திரிலோகி யென்பதனைத் திரைலோக்கியம் என்பர் கன்னுமிர்தாசாரியர். சதுர்வர்ணம் என்பதனைச் சாதுர்வர்ணியம் என்பர். இனிக் "குடிமையாண்மை" என்னுஞ் சூத்திரத்தினும் திருவள்ளுவரினும் இளம்பூரணர் சேனாவரையர் பரிமேலழகர் இவற்றை ஆகுபெயராகிய இலக்கணையென்பர். நச்சினார்க்கினியார் குடிமை ஆண்மை என்பனவற்றைப் பண்பின்மேலும் பண்புடைப்பொருளின்மேலும் நிற்குமென்பர். இனி 'நாணுடைப் பெண்மை பெருமை யுடைத்து' 'பெண்ணிற் பெருந்தக்கதில்' என்பனவற்றைப் பரிமேலழகர் ஆகுபெயரென்பர். அருளுடைமை பொறையுடைமை என்றால் உடையனாயிருத்தலெனப் பொருள்பட்டுப் பாவதத்திதன்மேனின்ற தத்திதன். சாத்தனுடைமை என்றால் சாத்தனதுடைப்பொருண்மேனின்ற பாவதத்திதன். வடமொழியினும் கிருபாவிசிட்டத்துவம், தேவதத்தவிசிட்டத்துவம் என வரும். பின்னது சுவத்தின்மேனின்றது, முன்னது சுவாமிவியாபாரகுணத்தின்மேனின்றது. இனித் தச்சனது தொழில் தச்செனவும், கொல்லனது தொழில் கொல்லெனவும், கொண்டால், பாவதத்திதனும். தச்சுத்தொழிலையுடையான் தச்சன், கொல்லுத்தொழிலையுடையான் கொல்லன் எனப் பொருள் கொண்டால், சாமானியதத்திதனும். 'தச்சு வந்தது;' 'கொல்லு வந்தது' எனவருவன பகுதிப்பொருள் விகுதியென்னும் சுவார்த்தப்பிரத்தியயம். இவ்வுதாரணங்களை நன்னூலார் பதவியலுட் காட்டியதாலுமறிக. இவையெல்லாம் விலட்சாதீனமென்னுஞ் சொல்லுவான் குறிப்பெப்படி அப்படிக்கொள்க.

பெண்மையாண்மைகட்குப் பொருள் கட்புலனாகிய அமைதித்தன்மை ஆளுந்தன்மையென்பர் நச்சினார்க்கினியார். அது பொருந்தும். (௬)

மூன்றாவது தத்திதபடலம் முடிந்தது.

## நான்காவது

# திங்ஙுப்படலம்.

ருடு. முன்னிலை யேவலொருமைச்சொற்போலுமுதனிலைக
ளின்னிலைத் தாது பகுதியென்றுஞ்செப்பிளமுலையா
யந்நிலைத் தாது சகன்மகத் தோடு மகன்மகமாய்ப்
பின்னிலை விப்பி வரிற்கா ரிதமெனப் பேர்பெறுமே.

இது தாதுப்பகுதி கூறுகின்றது. முன்னிலையேவலொருமைச் சொற்போலும் நட வா மடி என்று நன்னூலிற்கூறிய முதனிலைத் தொழிற்பெயர்கள் தாதுவெனவும் பிரகிருதியெனவும் பெயர்பெறும். அவை சகன்மகதாது, அகன்மகதாது எனவும், நடப்பி வருவி என விப்பியோடு நின்று காரிதமெனவும், பெயர்பெறும். எ - று.

காரிதமெனினும் ணிசந்தமெனினும் ஒக்கும். 'விப்பி ணிசந்தங் காரித மாகும்.' இஃதுரைச்சூத்திரம்.

"வினையின்றொகுதி" என்னுஞ் சூத்திரத்துள் உண், தின், செல் என்னு முதனிலைகளை வடநூலார் தாதுவென்பரென்று சேனு வரையருமுரைப்பர். முன்னிலையேவலொருமைச் சொல்லாகுமென்னுது போலுமென்றது முதனிலையென்னுந் தாதுக்களும் வேறே முன்னிலையேவலொருமைச்சொற்களும் வேறேயென்ப தறிவித்த ற்கென்க. என்னையோவெனின், நட, வா முதலிய தாதுக்கள் நடத்தல், வருதலெனப் பொருள்பட்டு, ஐம்பான்மூன்றிடத்திற்கும் பொதுவான தொழிற்பெயராய் நின்று, பின் காலங்காட்டுமிடைநி லையெழுத்துக்களோடு வரும் விகுதிகளை அடைந்து, நடந்தேன், நடந்தாய், நடந்தான் என வரும். இவ்வாறு காலத்திரயங்காட்டுமி டைநிலைதோயிறுதியோடுமொட்டுக.

இனி முன்னிலையேவலொருமைச்சொல்லாவது நடவாய், வா ராய் என்பன ஆயென்னுமீறு குன்றி, நட, வா என முன்னிலையே வலொருமைச்சொல்லாவதன்றி, நட, வா என்பன தாமே முன்னி லையேவலொருமைச்சொல்லாகாவென்க. அம்முதனிலைகளெல்லாம் ஏவல்வினையாயின், முன்னிலைவிகுதியொழியத் தன்மைவிகுதியோ டும் படர்க்கைவிகுதியோடுங் கூடி, நடந்தேன் நடந்தான் எனவரு தல் இடவழுவாதலின், பொருந்தாவென்க. ஏவற்சொல்லுதாரண

மும் வடநூன்முடிபும் தொல்காப்பியச்சூத்திரமும் 'மற்-றேயும் பிரேரணை செய்யா வெனல்செய் யெனக்குன் றுமே' என்பதனுள் விளங்கக் காட்டுதும்.

இனி அகன்மகதாதுச் செயப்படுபொருள் குன்றி, நட, வா என வரும். சகன்மகதாதுச் செயப்படுபொருள் குன்றுகு, மடி, சீ, விடு என வரும். இவ்விரண்டுங் கேவலதாதுவாகையால் 'இன்னிலைத்தாது' என்றும். 'செயப்படு பொருள்குன் றுவினை குன்றிய—வினைத்திற மிரண்டுஞ் சகன்மக மகன்மகம்.' இஃதுரைச்சூத்திரம். "வழங்கியன் மருங்கிற் குன்றுவ குன்றும்." என்னுஞ் சூத்திரத்துள் இவ்வாறு சேனாவரையருமுரைப்பர்.

ணிசந்தமாவது ஏவுவான்வினையும் இயற்றுவான்வினையும் உடனே தோன்றுமேவற்கருத்தாவின்வினை. 'ஆற்றினொழுக்கி' 'கேளிர்ப்பிரிப்பர்' 'தொல்காப் பியனெனத் தன்பெயர் தோற்றி' ஊட்டு, தீற்று, ஆட்டு, கூட்டு, தேற்று என விப்பியின்றித் திரிந்தும், ஒற்றுப்பெற்றும் வருஞ் சகச ணிசந்தம். 'தேற்றா வொழுக்க மொருவன்க ணுண்டாயின்' 'நட்பாட றேற்றா தவர்' என்புழித் தேறாவொழுக்கம், தேறாதவர் எனப் பொருள்படுமாலெனின், இதனைப் பகுதிப்பொருள் விகுதியென்னுஞ் சுவார்த்தத்தில் வந்த காரிதமென்பர்.

'தெளித்தசொற்றேறியார்' தெளிவித்தசொற்றேறியார், 'அரசனெடுத்தவாலயம்' அரசனெடுப்பித்தவாலயம், 'இந்தவயலுழுதவனந்தணன்' இந்தவயலுழுவித்தவனந்தணன், 'காடுகொன்று நாடாக்கிக் குளந்தொட்டு' காடுகொல்வித்து நாடாக்குவித்துக் குளந்தொடுவித்து எனவும், 'உழுவாருலகத்தார்க்காணி' உழுவிப்பார் எனவும், அநுபபத்தி தோன்றியவிடத்து இவ்வாறு பொருள்படுவதனை அந்தர்ப்பாவிதணிச்சு என்பர். "உப்ப கார மிருமொழிக் குரித்தே." என்பதற்குக் காட்டிய தபுவென்பதுமது.

நட, வா முதலிய முதனிலைத்தாதுக்கள் முன்னிலையேவல் வினையாங்கால் எடுத்துச்சரிக்க, முதனிலைத்தொழிற்பெயராங்கால் படுத்துச்சரிக்க.

'இன்னிலை' என்றதனால் முதனிலைவினை முன்னிலையேவல் வினைமாத்திரையாய் நில்லாது வினையெச்சப்பொருட்டாயும், பெயரெச்சப்பொருட்டாயும், புடைபரந்து வினைதன்னைச் சொல்லும் பெயர்ப் பொருட்டாயும், முற்றுச்சொல்லாய் நின்றவிடத்து அம் முதனிலை பிரிந்து நின்று வினைதன்னைச் சொல்லும் பெயர்ப்பொ

ருட்டாயும் நிற்கும். உ-ம். 'வரிப்புனைபந்து' வரிந்து புனை பந்து; 'அறுவேறுவகையின்' அற்று வேறு வகையின்; 'பாலறிவந்த' பால றியவந்த; சாக்குத்திறன் சாவக்குத்திறன். எ-ம். பொருதகர் பொருத தகர்; அடுபுலி அட்டபுலி; 'சொற்பாலமுதிவள்' சொல் லும்பகுதி. எ-ம். 'அறிகொன்றறியான்' அறிதலைக்கொன்று; 'கெடுவாகவையாதுலகம்' கெடுதலாக வையாது. எ-ம். பொருள்படுதல் காண்க. 'தேரான் பிறனைத் தெளிந்தான் வழிமுறை—தீரா விடு ம்பைதரும்' என்புழித் தெளிந்தானென்னு முற்றுவினைப் பெயரி ன்கணின்ற முதனிலை தெளிதலாய் எழுவாயானது காண்க.

இன்னும் முதனிலைத்தாது முற்றாய் முடிவனவுமுள. உ-ம். 'உறுவது சீர்தூக்கு நட்பும் பெறுவது—கொள்வாருங் கள்வரு நேர்' என்னுந் திருவள்ளுவருள் நேர் நேர்வர் எனவும்; 'ஏயேநிகர வற்றுள்ளே' என்னுஞ் சூத்திரத்துள் நிகர் நிகர்க்கும் எனவும் பொருள்பட்டு நிற்கும்.

இன்னும் 'இருணீங்கி யின்பம் பயக்கு மருணீங்கி—மாசறு காட்சி யவர்க்கு' என்புழிக் காட்சியவரென்னுஞ் சாமானிய தத்தி தனிற் காட்சியென்னும் பதம் பிரிந்து எழுவாயாய் நிற்பதுங்கொ ள்க. இவ்வாறு வருதல் வைதிகப்பிரக்கிரியை.

இன்னும் வடமொழியார் சுப்புத்தாதுவென்னும் பெயரடியா கப் பிறக்கும் வினைகளுமுள. உ-ம். 'நாவலொடு பெயரிய பொலம்;' 'ஐயெனப் பெயரிய வேற்றுமை;' 'அழகிய சொக்கர்;' 'பேதைக் கமர்த்தன கண்;' 'பைத்தபாம்பணையான்;' 'மைத்த கூந்தல்;' 'கொடிப்ப தழுக்கறுப்பான்;' 'நல்கூர்ந்தான்;' 'முதலாவேன தம் பெயர் முதலும்;' 'அவ்வித் தழுக்கா றுடையானை;' 'கடுத்தது காட் டுமுகம்;' 'ஞகாரை யொற,ியு;' 'கரும்பையொத்தாள்' எனப் பல வகைப் பெயரடியானும் பிறந்த வினை வருதல் காண்க. கடங்க ரோதி, கடயதி, துலயதி என வடமொழியினும் வரும்.

'பெயரடி யாகப் பிறந்த வினையினைச்—சுப்புத் தாதுவெனச் செப்புவர் புலவர்—நாம தாதுவென நவில்வது மதுவே.' இஃது ரைச்சூத்திரம். (க)

ருசு. பன்னிய போதறி லாதேச மென்னும் பரப்பைபத,
மின்னிய கர்த்தரி நீங்காதிங் ஙந்த வினைமுற்றிலே,மு
ன்னிய கர்த்தரி கர்மணி பாவமிம் மூன்றிடத்து,மன்
னியதங்ஙெனச்சொல்லாற்பனேபதம்வந்தெய்துமே.

22098
KAHAMAHOPADHYAYA

இது பரப்மைபதமும் ஆற்பனேபதமுங் கூறுகின்றது. காலமுணர்த்திய லாதேசமென்னும் பரப்மைபத வினைமுற்றுச்சொற்கள் கருத்தாவிலல்லது வாரா. லாதேசமென்றுங் தங்கென்றுங் கூறப்படும் ஆற்பனேபதம் தனியே கருத்தாவினும் யக்கென்னுஞ் செயப்பாட்டு வினையோடு கருமத்தினும் பாவத்தினும் வரும். எ – று. என்னை! 'முனைச்செயப் பாட்டு வினைபாவ கர்மணி மொய்த்தயக்கே' என வருதலினென்க.

இயந்தவினைமுற்று இருபெயரொட்டாய்த் தாப்பிசையென்னும் பாசபந்தம் போல நின்றது.

போது காலம். லாதேசமென்பதனை ஆற்பனேபதத்தோடுங் கூட்டுக.

திங்கெனவும் தங்கெனவும் ஙவ்வொற்றீறாய் வடமொழிவினைமுற்றுச் சொற்கு வரும் பெயரைத் தற்சம தற்பவமாகத் தமிழ்மொழி வினைமுற்றிற்கும் யாங்கூறியது ஈண்டு மிகுதியும் பயனுயிற்றென்க. பயனென்னையெனின், ஙவ்வொற்றும் ஙகர அகரமும் பயன்படுதலன்றி மற்றைப்பதினேரெழுத்துந் தமிழ்மொழியின்கின்று பயனின்மையென்னுங் குற்றந்தங்க வருமென்று விளங்கக் கூறுது மொழிக்கு முதலெழுத்துக் கூறுவார்போல "சுட்டியா வெகர வினுவழி யவ்வை—யொட்டி ஙவ்வு முதலா கும்மே." எனச்சூத்திரஞ்செய்து நன்னூலார் காட்டிய வுதாரணத்தால் ஙவ்வரியிற் பதினேரெழுத்தும் பயன்படாமையொக்கும். மொழிமுதலிடையினின்று பயன்படாவெழுத்துக்களெல்லாம் ஈற்றிலே ஒற்றாய் நின்று உயிர்முதலிய சொல்லோடு புணர்ந்து பயன்படும். அவ்வாறு ஙவ்வொற்றுத் திங்கெனவும் தங்கெனவும் ஈறாய் நின்று, உயிர்முதன்மொழியோடு புணர்ந்து பயன்பட வருதலினென்க.

சடகோபர் "பற்பநாப னுயர்வற வுயரும் பெருந்திறலோ—னெற்பரன்" என்றாராதலின், பரஸ்மைபதம் ஆத்மநேபதம் என்னுது மகரத்தைப் பகரமாக்கி, பரப்மைபதம் ஆற்பனேபதம் என்றும். அவை பிறனுக்குப் பதம் தனக்குப் பதம் என அனுக்காய் நின்றன.

'அந்நிய கர்மணிக் கிரியா பலத்தைப்—பயப்பது பரப்மை பதமென மொழிப.' 'கர்த்திரு கர்மணிக் கிரியா பலத்தைப்—பயப்பதாற்பனே பதமென மொழிப.' 'தனக்குப் பிறர்க்கெனத் தான்வரு நியம—மேகபதிக் கின்மையி னிடுகுறி யென்ப.' 'ஞித்துச்சுவரிதேத் தென்னு மிரண்டினு—முபய பதிக்கு மொரோவட

நியம—மயங்கலிற் காரணக் குறியெனல் வழுவே.' 'குற்றெழுத் திறுதி குற்றெழுத் தீற்றயல்—பரப்பை பதமெனப் பகர்ந்தனர் புலவர்.' 'நெட்டெழுத் திறுதி நெட்டெழுத் தீற்றய—லாற்பனே பதமென் றறைந்தனர் புலவர்.' 'செயப்பாட்டு வினையொடு சேரி லீரிறுதியு—மாற்பனே பதமென் றறைந்தனர் புலவர்.' 'தனித்தனி வருவ தேக பதியே—ஒருமுத னிலையி லீற் றயலும்—வரினஃ துபய பதியென மொழிப.' இவையுரைச்சூத்திரம். என்னையோ வெனின், புலவிறுணுக்கத்துள் 'யாரினுங் காதல மென்றேனா' 'இம்மைப் பிறப்பிற் பிரியல மென்றேனா' 'அஞ்சுதும் வேபாக் கறிந்து' என்புழி அம்மீறும் எம்மீறும் தும்மீறும் ஈண்டீறு வேறுபடுதலே யன்றி உளப்பாட்டுத்தன்மையாகாமைபோலவும், 'சூடினி ரென் மறந்திர் தும்மினிர்' என்பனவும் ஈண்டீறு வேறுபடுதலேயன்றி ஏகசேடமென்னும் படர்க்கை கூடிய முன்னிலையாகாமைபோல வும், ஆற்பனே பதம் பரப்பை பதமென்பன தனக்குப் பிறர்க்கெனப் பொருள்படாது ஈறு வேறுபடுதலே கொள்க.

இனித் தொல்காப்பியரும் "னஃகா னொற்றே யாடூஉ வறிசொல்" "ளஃகா னொற்றே மகடூஉ வறிசொல்" "ரஃகா னொற் றும் பகர விறுதியு—மாரைக் கிளவி யுளப்பட மூன்று—நேரத் தோன்றும் பலரறி சொல்லே" எனக் கூறிப் பின்னுங் கூறவேண்டியவிடத்து அவ்வாறு கூறாது அன் ஆன் அள் ஆள் அர் ஆர் என வேறுபடுத்து, வடநூலார் ஆற்பனேபதம் பரப்பைபதமிரண்டினுக்கும் ஈறு வேறு கூறினாற்போலத் தமிழ்மொழிக்குங் கூறினரென்க.

உ-ம். சமைக்கின்றனன், சமைக்கின்றான், சமைப்பன், சமைப்பான், சமைக்கின்றிலன், சமையான் இவை உபயபதி. இவ்வாறு பாலிடங்கடோறும் ஏற்றவழிக் கண்டுகொள்க. உண்கின்றான், உண்மார், உண்டனை, உண்டாய் இவை ஆற்பனேபதத்திலேகபதி. சொல்லும், வரும், உண்கு, உண்டு, வருது, சேறு, உண்கும், உண்டும், வருதும், சேறும், உண்பல், உண்ப, வருதி, வம்மின், வந்தது, போயிற்று இவை பரப்பைபதத்திலேகபதி. இவற்றோடு ஏற்ற கருத்தாவைக் கூட்டிக் கர்த்தரிப்பிரயோகமென்க. சாத்தனுடையைத் தரும் இது சகன்ம கர்த்தரிப்பிரயோகம். சாத்தன் வரும் இது அகன்மகர்த்தரிப்பிரயோகம். இனிச் சாத்தனாலாடை தரப்படும் சாத்தனால் வரப்படும் எனவவ்விருவகைக்கருத்தாவும் மூன்றனுருபோடு கூடிச் செயப்பாட்டுவினையொடு முடிந்தால், முறையே கர்மணிப்பிரயோகமும் பாவப்பிரயோகமுமாமென்க. இவ்வாறு தலை

தடுமாறி நின்று பெயர் வேறுபட்டாலும், இவ்விரண்டுங் கர்த்தரிப் பிரயோகத்தின்பொருளே படுமென்க.

'அகந்தூய்மை—வாய்மையாற் காணப் படும்'' மனத்தான் மறு விலரேனுந்தாஞ் சேர்ந்த—வினத்தா லிகழப் படுவர்' எனச் செய் யுட்கட் கர்மணிப்பிரயோகம் வந்தது. 'இளைய ரினமுறைய ரென் றிகழார் நின்ற—வொளியோ டொழுகப் படும்.' இது செய்யுட்கண் வந்த பாவப்பிரயோகம். என்னை? ஒளியோடொழுகப்படும் என் பது ஒளியாலொழுகுதல் செயப்படுமென விரிந்து 'ஊசியொடு குயின்ற தூசு' என்றாற்போல ஓடென்னு மூன்றனுருபு உடனிக ழ்ச்சியாகாது ஆன்பொருட்டாய் ஒழுகப்படுமென்பதன்கண்ணே திங் பாவமான ஒழுகு என்னும் முதனிலை பிரிந்து கிருற்பாவமாய் ஒழுகுதலெனத் தல்லீறு பெற்று எழுவாயாய்ப் படுமென்பதன் முன் செய்யென்னு முதனிலையோடகரம் பெற்றுச் செய்யவென நின்ற அகன்மகச் செயப்பாட் டொருமைவினைமுற்றாய் நிற்பதெ னக்கொள்க. ஒளியோ டொழுகப்படுமென்றாலும் ஒளியாலொழு கப்படுமென்றே பொருள்படும். இவ்வாறு பரிமேலழகருரையா னுங் காணக. 'வஞ்சரையஞ்சப்படும்' என்னுங் குறளினும் 'கொள் ளப் படாது மறப்ப தறிவிலென் கூற்றுக்களே' என்னுந் திருக் கோவையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் முதனிலையைப் பிரித்தெழுவாயாக்கி முடித்தலுங் காண்க.

சமைக்கின்றனன் என அன்னீறாயுரைத்தாற் பிறர்க்கென வும், சமைக்கின்றான் என ஆனீறாயுரைத்தாற் றனக்கெனவும் பொருள்படுமென்பர். அவ்வாறு வாராது மயங்கியே பெரும்பான் மையும் வருமென்பது பின்னர் வடமொழியாற் காட்டுதும்.

தேவதத்தனுண்டவன் எனக் கிருத்தோடும், தேவதத்தன் பக்சி னன் எனத் தத்திதத்தோடும், தேவதத்தன் யாவன் எனப் பிரச்சி னபதத்தோடும், தேவதத்தனவன் எனத் தற்சத்தத்தோடும், தேவ தத்தனுண்டு எனச் சற்பாவபதத்தோடும் வந்து, விச்சிராந்தியெ ன்னு முடிவு பெற்றுக் கர்த்தரிப்பிரயோகமாமென்க. (உ)

௩௭. திருநுத லாய்கருத் தாவாதி யாதலிற் சேர்ந்திறுத, லொருபெயர்ச் சொல்லெனச் சுப்பேறி நீங்க லுருபு பெறல், பொருவரு மீற்றயற் கேரூப பேதம் பொரு ந்தலொடு, வருவினை முற்றுப் பெயர்தாங் கிருதந்தம் வண்டமிழ்க்கே.

இது கிருதந்தங்கூறுகின்றது. வினைமுற்றுப்பெயராகிய கிருதந்தம் கருத்தாவாதியாதன்முதலாக ரூபபேதம் பொருந்தலீருக ஒன்ப திலக்கணமும் பெறும். எ - று.

'ஆதி' என்றமையாற் கருமமும், பாவமும், கரணமும், அதிகரணமுங் கொள்க.

நாலடியாரும் தண்டியாசிரியரும் சிந்தாமணியாரும் வடமொழியிற்பிறந்த வண்ணம் முறையே "யோசனையோர்கேட்பர்" "யுத்தமுமயுத்தமும்" "ரவிகுலதிலகன்" எனத் தற்சமமாகக் கூறினாற்போல, யாமும் உருவபேத மென்னுமலே ரூபபேதமென்றும். யூகியோகம் என்பனவற்றை மொழிக்கு முதலாக்கி நேமிநாதத்தார் நன்னூலார் சூத்திரஞ்செய்ததுமது.

உ-ம். 'தார்தாங்கிச் செல்வது தானை' 'வினையே செய்வது' என்னுமிரண்டும் அஃறிணையிற் கருத்தாவான கிருதந்தமென்னும் வினைமுற்றுப்பெயர். 'உடுப்பதூஉ முண்பதூஉ மின்றிக் கெடும்' இவ்விரண்டுங் கருமமான கிருதந்தம். 'உறங்குவது போலுஞ் சாக்கா டுறங்கி—விழிப்பது போலும் பிறப்பு' இவ்விரண்டும் பாவமான கிருதந்தம். 'வேலன்று வென்றி தருவது' இது கரணமான கிருதந்தம். 'பற்றியார் வெல்வ தரண்' 'ஆற்ற விளைவது நாடு' 'யாமிருப்பதுறையூர்' இம்மூன்றும் அதிகரணமான கிருதந்தம். 'உலகத்தா ருண்டென்ப தில்லென்பான்' என்பது உயர்திணையிற் கருத்தாவான கிருதந்தம். 'இல்வாழ்வா னென்பான்' என்பது உயர்திணையிற் கருமமான கிருதந்தம். இவற்றைத் தொல்காப்பியர் தொழிநிலை யொட்டுமொன்றென்பர். ஒழிந்தன வந்தவழிக் காண்க.

மண்ணுணி, ஊருணி இவை முறையே கருத்தாவினும் கருமத்தினும் வந்து இகரஞ்சேர்ந்திறுங் கிருதந்தம். மானேந்தி, பிறைசூடி, அம்பலத்தாடி, குடக்கூத்தாடி, நூலோதி, சடாதாரி, வேடதாரி, சோமயாசி இவை உயர்திணைக்கண் இகரஞ்சேர்ந்திறுதலாகிய கிருதந்தம். சேர்ந்தாரைக்கொல்லி, நூற்றுவரைக்கொல்லி, ஞாயிறு காணி இவை அஃறிணைக்கண் இகரஞ்சேர்ந்திறுதலாகிய கிருதந்தம். இவை உபபதசமாசனுமாம். பங்கசம், பங்கசாதம், வனருகம் என்பனவும் உபபதத்தின்மேல் வந்த கிருதந்தம்.

தார்தாங்கிச் செல்வது முதற் காட்டிய உதாரணமெல்லாம் வினைமுற்றுச் சொல்லாயினும், பிராதிபதிகமும் தத்திதனும் பாவபதமும் போலச் சுப்பென்னும் பிரதமை யேறி நீங்கிய வினைமுற்றுப்பெயராமென்க. மேலுருபு பெறலெனவும் வருதலின், சுப்பென்

பது எழுருபிற்கும் பொதுப்பெயராயினும், ஈண்டுப் பிரதமாவிபத்திக்கே கொள்க. "ஒற்றள பெடுபெயினு மற்றெனை மொழிப" என்னுஞ் செய்யுளியற்சூத்திரம் எழுத்தியலுள் ஒற்றளபெடுத்தற்கும் விதியாய் நின்ற வியபதேசம்போல ஈண்டுக் கிருதந்தத்து 'ஒருபெயர்ச் சொல்லெனச் சுப்பேறி நீங்கும்' என்றதே பிராதிபதிகமான நிலம், நீர், தீ, வளி, வெளி முதலாயினவற்றிற்கும், கச்சினன், கழலினன் என்னுந் தத்திதனுக்கும் விதியாயிற்றென்க. 'அதிதேசம் விபதேச மாமாட் டெறிதல்.' இஃதுரைச் சூத்திரம். வடமொழியுள் அக்கினிசித்து என்னும் கிருத்தும் ததி என்னும் பிராதிபதிகமும் சுப்பேறி நீங்கினாற்போலவென்க.

உ-ம். 'நெறிநின்றார் நீடுவாழ் வார்' என உருபேறி நீங்கல் வரும். 'ஒறுத்தாரை யொன்றாக வையாரே' 'இரப்பார்க்கொன்றீவார்மே னிற்கும் புகழ்' என உருபு பெறல் வரும். 'நயவாதான்' 'செறப்பட்டார்' 'தின்பார்' என நேரே நில்லாமல் 'பெண்மை நயவாதவன்' 'வேந்து செறப்பட்டவர்' 'ஊன்றின்பவர்' என ஈற்றயற்கே ரூபபேதம் பொருந்தல் வரும். 'உபதை யீற்றய லொருபொருட் கிளவி.' இஃதுரைச் சூத்திரம்.

'தாம்வீழ்வார்மென்றோள்' 'இல்வாழ்வானென்பான்' 'உடுப்பதூஉ முண்பதூஉம்' என்னுங் கருமமாய் நின்ற வினைமுற்றுப்பெயரென்னுங் கிருதந்தமும், முதனிலையும் வினையெச்சமும் பெயரெச்சமும் கருமத்தோடு முடியுங் கிருதந்தமும், செயப்பாட்டுவினையோடு தோன்றாதும், பொருளுரைக்குங்கால் தம்மால் வீழப்படுவார் இல்வாழ்வானெனப்படுவான் உடுக்கப்படுவது உண்ணப்படுவது எனச் செயப்பாட்டு வினையோடு தோன்றியும், செய்குன்று செயப்பட்டகுன்று; அடுநறா அடப்பட்டநறா. எ-ம். 'அரம்பொருத பொன்போலத் தேயுமுரம்பொரு—துட்பகை யுற்ற குடி.' என்புழி அரத்தாற் பொரப்பட்ட பொன் உரம்பொரப்பட்டு. எ-ம். திருக்கோவையாருள் 'யாழு மெழுதி யெழின்முத் தெழுதி' என்புழி யாழுமெழுதப்பட்டு எழின்முத்து மெழுதப்பட்டு. எ-ம். 'யாம் வீழுந்—திருநுதற் கில்லை யிடம்' என்புழி எம்மால் வீழப்பட்ட திருநுதல். எ-ம். நயக்காய்த்தோன்றி யக்காய்ப் பொருள் விரியுமாறு காண்க.

'செயப்பாட் டெச்சமுஞ் செயப்படு பொருளு—நயக்கா மென்பர் நற்கிரு தந்தம்.' 'வினைமுதல் கருவி யனைமுத லிரண்டொடு—மூன்றாம் வேற்றுமை தோன்று ததற்கே,' 'ஒரோவழி யக்குமவ் வுருபும் வரப்பெறும்.' இவை உரைச்சூத்திரம். ஆதலின், அரம

பொருத பொன் தாம்வீழ்வார் என்பனபோலக் கேள்விதோளாத செவி முகடிமுடினர் என வாராது சிறுபான்மை 'கேள்வியாற் றோட்கப்படாதசெவி' 'முகடியான் மூடப்பட்டார்' எனவும் வரும்.

௩அ. விரிக்கும் பெயரார்த்த தாதுக மான வினைக்குறை யிற், றெரிக்குந் துவாதுமுன் செய்தென்ப தோடு செயவென்பதாந், தரிக்குந் திகை நுதால்சதிர் கான ச்சுச் சானச்சென்று, பிரிக்கும் பிரத்திய பேநிகழ் காலப் பெயரெச்சமே.

இஃது இருவகையெச்சத்தின் குறி கூறுகின்றது. ஆர்த்ததா துகமெனப் பெயர்பெற்ற எச்சங்களுள் செய்து செய்ய என்னும் இரண்டும் முறையே துவாதுமுன் எனப் பெயர் பெறும். நிகழ்கா லப்பெயரெச்சம் சதிர்ப்பிரத்தியயமென்றும் கானச்சு என்றும் பெயர் பெறும். எ - று.

'ஆர்த்த தாதுகமாமீ ரெச்சமும்.' 'சார்வ தாதுகந் தாம்வினை முற்றே.' 'விச்சி ராந்திபெறு தார்த்த தாதுகம்.' 'சார்வ தாதுகந் தாமது பெறுமே.' 'செய்யாச் செய்யூச் செய்புவெ னெச்சங்—கழுனே ணமுலே யப்பெண லாகும்.' 'எனவெ னெச்ச மிதியென லாகும்.' 'செயின் செய்தாலெனச் செப்பு மிரண்டினை—யதிசேத் தென்ப ரறிந்திசி னோரே.' 'நுவிலே செய்யிய வென்னு மதுவே.' 'தப்பிரத் தியயமுஞ் சப்பிரத் தியயமு—மிறப்பெதிர் புணர்த்தும் பெயரெஞ்சு கிளவி.' இவ்வுரைச்சூத்திரங்களானும் ஒழிந்த எச்ச ங்களுக்கும் பெயரறிக.

சதிர், கருத்தாவினும், கானச்சுஞ் சானச்சுங் கருத்தாவினும் கருமத்தினும், நிகழ்காலம்பற்றி வருதலானும், பிரிக்கும் பிரத்தியய மென்றும்.

வடநூலார் செய்தென்பதற்குக் கிருத்துவா செய்யவென்பதற் குக் கர்த்துமுந் என்றது துவா துமுந் என ஈறுபற்றிப் பெயரிடுவர். அவர் மதம்பற்றித் தொல்காப்பியரும் சிறுபான்மை "பின் முன் கால்கடை வழியிடத்து" எனவும் ஈற்றுவினையெச்சமாக்குவர்.

உ-ம். உண்டு வந்தான், உண்டு வருதல், மீன்விழுங்கியற்று, கற்றுவல்லவன், உண்ணுவந்தான், உண்ணூவந்தான், உண்குபுவந் தான், பாடவந்தான், பாடவல்லவன், பாடவருதல், உண்ணவு ண்டு, உடுக்கவுண்டு, உண்ணுக்கால், உண்ணவில்லை, உடுக்கவி ல்லை, 'அவியினும் வாழினுமென்,' அறஞ்செய்யிற் சுவர்க்கம் புகு

வன், அறஞ்செய்தாற் சுவர்க்கம்புகுவான், 'நாளென வொன்று போற் காட்டி,' 'பெய்யெனப் பெய்யு மழை,' பெய்யென்று பெய்யு மழை என வரும்.

கற்கிற மாணுக்கன், கற்கின்ற மாணுக்கன், கல்லாநின்ற மாணுக்கன் எனக் கருத்தாவைக் கொண்ட நிகழ்காலப்பெயரெச்சத்தைச் சதிர்ப்பிரத்தியயமென்பர். கற்கப்படுநூல், கற்கப்படுமாசிரியன் என நிகழ்காலங்காட்டிய செய்யுமென்னுஞ் செயப்பாட்டு வினைப்பெயரெச்சத்தைக் கருமத்தோடும் கருத்தாவோடும்' வந்த சானச்சென்பர். சுர்மேபதத்தாற் கானச்சுமது. பிரமதத்தவரன், முத்தகேசன், தத்தகாஞ்சனம், தத்தபடம், நிட்கிராந்தபூமி, சுத்தசலம் என்பன பூதகாலம் பெற்றதப்பிரத்தியயம். 'தேரான்பிறனில்புகல்' என்பது தேராதபிறனில் புகல் எனப் பொருள்பட்டாற் போலக் குர்வன் தேவதத்தன் என்பது குர்வத்தேவதத்தன் எனப் பொருள்படும். இஃதவ்வுரையாலுங் காண்க.

இனி மறுத்தற்கண் 'ஒருமக ளுேக்கி ளுரை யுயிரொடும் போகொ டாத—திருமகள்' எனச் சிந்தாமணியினும், 'கனவினுங் காண்கொடா கண்ணுங் கலந்த—நனவினு முன்னீங்கு நாணும்' எனச் சான்றோர் செய்யுளினும், போகொடாள் காண்கொடாள் என எச்சமாயும் முற்றாயும் வரும். திருவாய்மொழியினும் வந்து ஒட்டவெனப்பொருள் விரியும்.

பொருள்செயல்வகை வினைசெயல்வகை தோன்றலாறே உயிர்த்தலாறே என்பனவற்றுள், செயல் தோன்றல் உயிர்த்தல் என்பன பெயரெச்சமாம்; அவை பொருள்செய்யும்வகை வினைசெய்யும்வகை தோன்றுநெறி உயிர்க்குநெறி எனப் பொருள் விரிதலினென்க. சென்மபூமி சென்மநக்ஷத்திரம் என்னும் வடமொழியுமது.

'' யட்டும் யாதி - வேட்கப்போகிறுன்; அது யாகாயயாதி எனப் பொருள்பட்டு வேள்விக்குப்போகிறுன் என நிற்கும். குர்வன் தேவதத்தன் - பண்ணுகிற தேவதத்தன்; அது சானச்சு, கருத்தாவில் வந்தது. பச்சியமாந ஓதனம் கருமத்தில் வந்தது. சற்பிராமணன் நல்ல பிராமணன் எனப் பொருள்பட்டுப் பெயரெச்சக்குறிப்பாய் நின்றது. செய் கிரு, செய்து கிருத்துவா, செய்ய கர்த்துமுந், செயல் கருமம் கிரியை, செய்தவன் கருத்தா, செய்கிறேன் கரோமி, செய்வேன் கரிஷ்யே, செய்யாய் செய் குரு, கும்பஞ்செய்பவன் கும்பகாரன், செய்வித்தல் காரிதம், கரோதி செய்கிறுன் என்னும் வினைமுற்றுச்சொல். இதில் முந்தினவுதாரணச்சொல்விற் கடுத்தவுதாரணம் வடமொழியில் வந்த பெயரென்றறிக.

என்னையெனின், செய்யென்னுந் தமிழ்மொழிவினைமுற்றுச்சொற் போல வடமொழியில் இரு என்னும் வினைமுற்றுச்சொல்லாம். இதுபோல இங்ஙனஞ் சொல்லப்பட்ட உதாரணங்களுக்கெல் லாம் உய்த்துணர்க. (௪)

௩௯. நிறக்குந் துணைவினை யோர்காலத் தெய்திடு நேர்ந்த நிலை, மறுக்கும் பலவடுக் குங்கால மூன்றொடு மன்னு முன்பின், பிறக்குந் துவாதி சமானகர்த் தாவைப் பெறுமுற்றுமாய்ச், சிறக்கும் பிறபின்ன கர்த்தா வொ டுஞ்சென்று சேருமன்றே.

இஃது அவ்விருவகையெச்சங்களின் விகற்பலக்கணங் கூறுகி ன்றது. துவாவென்னுஞ் செய்தெனெச்சம் துணைவினையோர்கால த்தெய்தன் முதலாக முற்றுமாய்ச் சிறத்தலீறாக வரும் ஏழிலக்கண மும் பெறும். பிறவென்னுந் துமுனாதிகள் வேறுகருத்தாவையும் பெறும். எ - று.

துவாதி செய்து, செய்யா, செய்யூ, செய்பு என்னு நான் குமென்க.

'சமான கருத்தா வொருவினை முதலே—பின்னகருத்தா வே றுவினை முதலே' இஃதுரைச்சூத்திரம்.

உ-ம். கண்மூடிச் சிரித்தான், வறிது நீந்திச் செல்லுநீள்இடை, கொடியாடித்தோன்றும், விரைந்து போயினன், நகுபு வந்தான், குதிரையேறிக் கொண்டேசென்றான், ஓடி வந்தான் என விவை துணைவினையோர்காலத்தெய்தியது.

உண்ணுதுவந்தான், உண்டுவாரான் என எச்சமும் முடிக் குஞ்சொல்லும் எதிர்மறுத்தது. 'மருங்கோடித் தீவினை செய்யா னெனின்' 'கற்றில கண்டன்னம்' என்னுங் குறளினும் திருக்கோ வையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் செய்தலோடும் கற்ற லோடும் முடியுமென்பர். இதுவுமது. பிரதியோகி நியோகியோடே ஒக்குமென்பதே கருத்தாயிற்று. இதனை ஆகாரியாரோபம் என் பாருமுளர். 'அறவினை யாதெனிற் கொல்லாமை' என்னுங்குறளுள் பரிமேலழகர் விலக்கியதொழிதலும் செய்தலோடொக்குமாதலிற் கொல்லாமை அறவினையாயிற்றென்பர். 'காவினீர் நீங்காமை யுண் டிடுக' 'பள்ளியுமீரம் புலராமையேறற்க' என்பது எச்சமும் முடி க்குஞ் சொல்லும் எதிர்மறுத்தலின், அது சொல்லான் முடியாது ஈரம்புலர்ந்த பின்னேறுக எனப் பொருள்படுதலின் அஃதெதிர்ம றையாகாதென்க. இதனை அலங்காரநூலார் அபாவாபாவமென்பர்.

'நிறக்கும்' என்றசேடத்தால் சதிர்ப்பிரத்தியயத்துக்கு மறையும் அடுக்குங்கொள்க. 'இடிப்பாரை யில்லாத வேமரா மன்னன்' 'புரைதீரா மன்னு விளமை' 'மூவா முதலா வுலகம்' என வரும். 'மாழைமென் னோக்கி யிடையாய்க் கழிந்தது வந்துவந்தே' 'அறிந்த றிந்தும் பாகனையே கொல்லும்' என்பன ஒன்றுபல வடுக்கல். 'கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனும்' என்புழி வேறு பலவடுக்கல்.

இன்னும் அச்சேடத்தால் 'சென்றது சென்றது வாழ்நாள்' 'வந்தது வந்தது கூற்று' என முற்றுச்சொல்லும், 'அவரவ ரெச்சத் தாற் காணப்படும்' 'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும்' படைபடை, தித்தி எனப் பெயர்களும், அடுக்கி, மக்களிரட்டையும் விலங்கிரட்டையும்போல வரும்.

இன்னும் அதனாலே 'துடிதுடித்துத் துள்ளி வரும்' 'கல கல கூந்துணை' 'வற்றிய வோலை கல கலக்கும்' 'சலசலமதம்' 'பண்ணைப் பணைத்த பெருஞ்செல்வம்' 'புன்னம்புலரி' 'குறுகுறுகை' 'வயிறு மொடுமொடுத்தது', 'சிற்றஞ் சிறுகாலே' 'செக்கச் சிவந்தது' 'கன் னங்கரிய' என்பனவற்றை இலையிரட்டையும் பூவிரட்டையும் போல் வந்தன "இரட்டைக் கிளவி யிரட்டிற் பிரிந்திசையா" என் னுஞ் சூத்திரவிதி பெற்றனவென்பர். இவற்றை வடநூலார் தேதி வ்யமானம் என உதாரணங்காட்டி, யங் லுக்கு என்பர். புநப்புந, ரக்ஷ ரக்ஷ, சிவ சிவ, ராம ராம, திநே திநே என வடமொழிக்கண் ணும் மக்களிரட்டைபோல வரும்.

நேற்றுண்டு வந்தான், இஃதோ உண்டு வருகின்றான், நாளை யுண்டு வருவான். எ-ம். உண்டு வந்தான், உண்டு வருகின்றான், உண்டு வருவான். எ-ம். காலத்திரயமுங்கொண்டது. "செய்தெ னெச்சத் திறந்தகால—மெய்திட னுடைத்தே வாராக்காலம்" என விதித்ததுமது.

'நேர்த்து நிகரல்லார் நீரல்ல சொல்லியக்கால்—வேர்த்து வெகுளார் விழுமியோர்' 'கொழுநற் றொழுதெழுவாள்' 'தொழுதெழு வார் வினைவளம்' என்புழி வெகுண்டு வேரார், எழுந்து தொழு வார் என முன்பின்னாகப் பிறந்தது. வடநூலாரும் வாய்பிளந்துறங் கினான் குறட்டைவிட்டுறங்கினான் எனவும், கொடுத்திரந்தான் எனவும் காட்டுவர். 'வழுக்கினுள் வைக்குந்தன் னாளை யெடுத்து' 'பருகுவன்னபைதனே யெல்லாங் கெட' இவையும் முன்பின் பிறந்ததாக வமைக்க. இனிக் 'கொழுநற் றொழுதெழுவாள்' 'தொழுதெழு

வார் வினைவள நீரெழ' என்னுந் திருவள்ளுவரினும் திருக்கோ வையாரினும் பரிமேலழகரும் பேராசிரியரும் தொழாநின்றெழு வாள் தொழாநின்றெழுவாள் எனத் துணைவினையாயுரைப்பர். எழு தல் துயிலொழிதலாகலின், எழுந்து தொழுவாளென முன்பின்னா கப் பொருள்படுதலன்றி, நகுபுவந்தான் ஓடிவந்தான் என்பன போலத் தொழாநின்று துயிலொழிதல் கூடாமையெனக. "வைகறை யாமந் துயிலெழுந்து தான்செய்யு—நல்லறமும் ஒண்பொருளுஞ் சிந்தித்து வாய்வதிற—றந்தையுந் தாயுந் தொழுதெழுக" என்பது துயிலெழுந்து பின் தந்தையுந்தாயுந் தொழுது பின் காரியத்திற் செல்கவெனப் பொருள்பட்டு வருதலாலுமா, அவருரை அசம்பா விதமெனக.

'மோயினளுயிர்த்த காலை' என முற்றுமாய்ச் சிறந்தது. 'நறப்பாடலம்புனை வார்நினைவா' 'கலை தொழில பட்டுவழியிப் பாடினன் கனிக்—கிலைப்பொழிற் குரங்கினை வென்ற தாணாடனிர' 'கானவரிரிய வில்வாய்க் கடுங்கணை தொடுத்த வேடு—மானினை பெயர்ந்த வாய ராத்தன ரணிந்த சிலம்பட—டாமெனறுநூ முடங்கற்றுவன்று நிமிர்ந்தது சாம்பிய மாவீ போனினறவென மற்றப் பொருவருஞ் சிலம்பிறைக்கே.' 'இய யான் செழுமபொற் சான்றென்றது சென்றதாவி' 'அவிழ்த்தன போதுறி மலர்ந்தன காயா—நெகிழ்ந்தன நெரிதழ் புறவலே—மகிழாதிசைப்—விண்டன கொன்றை விரிந்த கருவிளை—கொண்டன காந்தள் குலை' 'சோலை பயிலுங் குயின்மழலை சோர்ந்தசைந்த—வாறு மயிலினங்க ளார்த்தெழுந்த—ஞாலங் குளிர்ந்த முகிலகறுத்த கோபந் சிவந்த—விளைத்த துணைபிரிந்தார் மெய்.' இவையெல்லாம் செயவெனெச்சம் முற்றாய்த் திரிந்தது. இவ்வாறுவரு முற்றுக்களை முற்றாகவே பொருளுரைக்கில ஏகவாக்கியமாகாது பின்னவாக்கியமாகிப் பொருள் சிதைதியாமெனக.

'கோழிகூவிப் போது புலர்ந்தது' 'ஊற்கா லியானை யொடித்துண் டெஞ்சிய யாமரம்' என்புழிக் கூவப் போது புலர்ந்தது உண்ண வெஞ்சிய யாமரம் எனத் தமிழ்நூலார் பொருளுரைத்துச் செயவெனெச்சம் செயவெனத் திரிந்ததென்றும், "வினையெஞ்சு கிளவியும் வேறுபல குறிய" "அம்முக் கிளவி" என்னும் இரண்டு சூத்திரத்தால் சேனாவரையர் நச்சினார்க்கினியார் செய்தெனச்சம் சமானகர்த்திருகமன்றிப் பின்னகர்த்திருகமாகவும் வருமென்றுங் கூறுவர். இவற்றை வடநூலார் கூவுவித்து எஞ்சுவித்து என அந்தர்ப்பாவிதணிச்சாக்கிக் கூறுவர். கோழியைக் கூவுவித்தற்கும்

யாமரத்தை எஞ்சுவித்தற்கும் காலமும் யானையும் எதுவாதலிற் சம்பாவிதமாம். 'குடிபொன்றிக் குற்றமு மாங்கே தரும்' என்புழிக் குடிபொன்றுவித்தென்னும் பொருள்விளங்கக் குடிபொன் றச் செய்தென வுரைப்பர் பரிமேழகரும். இனி ஞாயிறு பட்டுவந் தான் சாத்தன் என்றால், ஞாயிற்றைப் படுவித்தற்குச் சாத்தன் எதுவாகாமையின், அஃதசம்பாவிதமாம். ஆதலின், ஞாயிறுபட எனத்துமுணர்த்த மாக்குவர். நன்னூலார் எச்சத்திரிவுகளை "சொற்றிரி யினும் பொரு டிரியா வினைக்குறை" என்று சத்தவிகார மாக்குவர்.

உண்டுவந்தான் சாத்தன் இது சமானகர்த்துருகம். துவாதி மூன்றும் இவ்வாறே வரும். சாத்தனுண்ணவந்தான், சாத்தனுண் ணக் கொற்றன் சோறு கொடுத்தான் எனத் துமுன் சமானகர்த்தா வோடும் பின்னகர்த்தாவோடும் வரும். செயின் செய்தால் எனக் கூறும் அவ்வியய கிருத்துக்களும் இருவர் வினையுங்கொள்ளும்.

'கருநாய் கவர்ந்த காலினர் சிதைகிய பானையர்—பெருநாடு காண விம்மையிலே பிச்சை தானுங் கொள்வர்' என்பதனை 'இரு ம்பார்க்குங் காலரா யேதிலார்க் காளாய்' 'சேனைத் தலைவராய்' என்னும் பாட்டுக்கள்போல ஆயென்னுஞ் சன்கொடுத்து, விரவா வினையெச்சமாக்குவர். இவ்வினையெச்சங்களைக் கிரியாவிசேடண மென்பர். 'அரியானை யந்தணர்தஞ் சிந்தை யானை' என்னும் பாட் டினைக் கருமவிசேடணமென்பர். 'இடிக்குந் துணையாரை யாள் வாரை யாரே' எ-ம். 'கூற்றுவனை மன்மதனை யரக்கர் கோவை' எ-ம். தொடர்ந்தும் தொடராதும் வருவதுஉமது. 'கட்கினியாள் காதலன் காதல் வகைபுனைவாள்,' 'அசல்விசும்பு ளார்கோமா—னிந்திரன்,' 'காலார் கழலார் கடுஞ்சிலையார்' என ஒருபொருண் மேற் பலபெயர் வந்து ஒருவினை கொள்வதனையும் இடைப்பிற வரலாய் நின்ற பெயரெச்சத்தையும் கர்த்திரு விசேடணமென்பர். இவ்வாறு பெயர்பலவடுக்கி ஒருபயனிலை கொள்வதனையும் வினை பலவடுக்கி ஒருபெயர் கொள்வதனையும் அகத்தியரும் நன்னூலா ரும் "எனைத்துமுற் றடுக்கினும்" "உருபுபல வடுக்கினும் வினைவே றடுக்கினு—மொருதம் மெச்ச மீறுற முடியும்" என்னுஞ் சூத்திரங் களாலடக்குவர். 'பெண்ணேவல் செய்தொழுகு மாண்மை' 'மட லேறாப் பெண்ணிற் பெருந்தக்க தில்' என்பவற்றுள் ஒழுகுவானு ண்மை மடலேறாதவள் பெண்மை எனப் பெயரெச்சங்கள் முற் றுப் பெயராயும், 'தேரான்பிறனில்புகல்' தேராத பிறன் என முற்றுப் பெயரெச்சமாயும், அருத்தவிகாரமாய்ப் பொருடிரிந்தன.

கலுபீத்துவா என்னுந் துவாப்பிரத்தியயம் வேண்டா குடித்து என நின்று, வேண்டாகுடிக்க எனப் பொருள்பட்டுத் துமுனர்த் தமா மென்பர். துமுன துவாவாய்த்திரிந்த ஆதேசமென்றது துமுன் பொருளில்வந்த துவாவென்பர். (ரு)

சo. எடுத்தல் படுத்த லவிதலென் றுரு மிசையனைத்துந்
தொடுத்த வுதாத்த மநுதாத்த மேனைச் சுவரிதமா
மடுத்த கிருத்துண் முற்றெல்லாமெடுத்தலருந்திஙந்தம்
படுத்த விரண்டு முடைத்தாஞ் சரூபம் படுந்தொடரே.

இது சுரமென்னு மோசையும் அது வருமிடனுங் கூறுகின்றது. எடுத்தன் முதலாகிய மூன்றோசையும் உதாத்தம், அநுதாத்தம், சுவரிதம் என்னு மூன்று சுரமாம். அவற்றுள், எடுத்தல் கிருத்துட் சரூபமான முற்றுப்பெயரோடும், படுத்தல் திஙந்தத்தோடும், அவ்விரண்டும் சொல்லாகப் பொருளாக வேறுபடுகிற சரூபச்சிலிட்டத்தோடும் வரும். எ - று.

'அடுத்த' என்றமிகையால் விலங்கலுங்கொள்க. 'பிரசயம் விலங்கல் பேசுங் காலே.' இஃதுரைச்சூத்திரம்.

எல்லாப்பொருளுமென்பது எப்பொருளுமென நின்றாற்போலச் சமானரூபம் சரூபமென நின்றது.

கிருத்துப் படுத்தல் திஙந்தம் எடுத்தலெனமாறிக் கூறுவாருமுளர்.

உ-ம. 'நெறிநின்றார் நீடுவாழ் வார்' 'மலர்மிசை யேகினான் மாணடி சேர்ந்தார்—நிலமிசை நீடுவாழ் வார்' என்புழி நெறிநின்றார் சேர்ந்தார் என்னுங் கிருத்தை உதாத்தமாக எடுத்துச்சரிக்க. வாழ்வார் என்னுந் திஙந்தமாகிய ஆற்பனேபதத்தை அநுதாத்தமாகப் படுத்துச்சரிக்க.

சொல் வேறுபடாது பொருள் வேறுபட்ட சரூபச்சிலிட்டமும், பொருள் வேறுபடாது சொல் வேறுபட்ட சரூபச்சிலிட்டமும், சொல்லும் பொருளும் வேறுபட்ட சரூபச்சிலிட்டமுமெனச் சரூபச்சிலிட்டம் மூவகைப்படும்.

உ-ம். 'குழல்வளர் முல்லையிற் கோவலர் தம்மொடு—மழலைத் தும்பி வாய்வைத்தூத' 'சிந்தைநலி கின்றதிரு நீர்க்குமரி யாட' எனச் சொல் வேறுபடாது பொருள் வேறுபட்ட சரூபம் வந்தவாறு காண்க. அஃது இஃது உஃது என்னுஞ் சுட்டுமுதலாகிய

வாய்தக்குற்றுகரமும், அது இது உது என்னும் முற்றுகரமும், பொருட்புணர்ச்சிக்கண் உயிரோடு புணருங்கால, அஃதழகிது இஃதழகிது உஃதழகிது என நிற்கும். அஃது இஃது உஃது எனனுங் குற்றுகரமும், அது இது உது என்னு முற்றுகரமும், உருபு புணருங்கால் அன்சாரியை பெற்றும் ஆய்தங் கெட்டும் உருபேற்றியும் அதனை இதனை உதனை என நிற்கும். இவை பொருள் வேறுபடாது சொலவேறுபட்ட சரூபம். ஈண்டும் எடுத்தல் படுத்தல் கொள்க.

செம்பொன்பதின்பலம், குன்றேறுமா, குறும்பரம்பு, நாடியாது, எட்டியாது, எட்டு, கொட்டு, தாமரை இவை சொல்லும் பொருளும் வேறுபட்ட சரூபம். ஈண்டும் எடுத்தல் படுத்தல கொள்க.

இவ்வாறு வரும நாநார்த்தபதத் தொடரையெல்லாம் தொல்காப்பியர் இரட்டுறமொழிதலென்பர். அதுபற்றிப் பரிமேலழகரும் பெரியாரைப் பிழையாமை என்பதனை இரட்டுறமொழிதலென்பர். இக்கருத்தறியாத நச்சினார்க்கினியார் "ஒருபொரு ளிருசொற் பிரிவில வரையார்' என்னுஞ் சூத்திரத்தை இருபொருளொருசொற் பிரிவில வென நலிந்து பொருள்கொண்டு, இச்சிலேடையுதாரணத்தைக்காட்டி யிடர்ப்படுவரெனக.

இனி நாநார்த்தபதத்தையெல்லாம் வர்ணவற்பாவமென்னு மெழுத்தொப்புமையுடைய பலபொரு ளொருசொல், பலசொல் லலது ஒருசொல் லன்றெனவும், ஒன்றல்லவை பலவென்பதனானும் பலவென்பதல்லது ஒருசொல்லன்றெனவும், இருசொல்லாதலின் இருகாலுரைக்கவெனவும், வடநூலார் கூறுவர். என்னை? பயக்ஷீரம் பயோம்புச [பயம்-பால், பயம்-நீர்] என அமரசிங்கத்துள் வருதலினென்க. அதுபற்றிச் சேனாவரையரும் "காலமுலகம்" எனனுஞ் சூத்திரத்துள் உலகமென்பதற்கு அவ்வாறுரைப்பர். தொலகாப்பியரும் "தெவ்வுக்கொளற்பொருட்டே" "தெவ்வுப்பகை யாகும்" எனவும், கண்ணென்பது ஏழாம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமைப் பொருளுமாதலிற் "கண்ணெனப் பெயரிய வேற்றுமைக் கிளவி" எனவும, "கண்கால் புறமகம" எனவும், இரட்டித்துக் கூறுவர். அப்பதீக்ஷிதர் 'ஏகநாளாவலம்பிபலத்துவந்துவம்' போலவென்று திருட்டாந்தங்கூறி, ஒருகாலுரைக்கவே பலபொருளிற் பிரவிருத்திநிமித்தம் ஒருங்குதோன்றுமென்றுங் கூறுவர்.

"உப்ப கார மொன்றெனு மொழிய—விருவயி னிலையும் பொருட்டா கும்மே" எனபுழி தபு என்னுஞ்சொற் கெடுமென

வுங் கெடுவியெனவும் அந்தப்பாலிதணிக்கென்பர் தொல்காப்பியனாகலின். ஈண்டும் எடுத்தும் படுத்துஞ் சொல்லுக.

ஆடிக்குக் கொண்டான், சித்திரைக்குக் கொண்டான் என்புழி இக்குச்சாரியை முதலெழுத்தாகிய இகரங்கெட்டுப்புணர்ந்த இடப்பொருட்டுத் தொகைமொழியென்பர். அவை நான்கனுருபு தொடர்ந்த பொருளாகக் கொள்ளுங்காலும், எடுத்தும் படுத்துஞ் சொல்லுக.

ஐ முதலிய சிலவெழுத்துக்கள் விளங்கலாம.

நவிதலை ஈறுமீற்றுபமுமாகவுடைய செய்யுளுறுப்பைச் சரிதகமென்பர். உருவகம் ரூபகமென்பதுபோல சாரிதகமென்பது சரிதகமென நின்றது. தமிழ்நூலுரைகாரர் சரிந்திறுதலிற் சரிதகமென்பது அறியாமை. (௩)

௪௧. பகுதிக் குரிய விகரணி யீரைந்தாம் பாணினியெனப்புந்
தொகுதிக் குரிய லகார மிடைநிலை தோயிறுதி ட்டாந்
விகுதிக் குரியலிங் லோட்டு வியங்கோள் விதிப்பொரு
தகுதிக் குரிய கிருத்தியம் வேண்டுங் கருதப்படுமே.

இது சிலவெழுத்திற்கும் சில பிரத்தியயத்திற்கும் சம்ஞையென்னுங்குறியீடு கூறுகின்றது. பகுதிப்பின்னின்றற்குரிய எழுத்துக்கள் பத்துவகை விகரணியாம். வினைசொன்மருங்கிற் காலமொடுவருவனவாகிய காலமுணர்த்தும் இடைநிலை தோயிறுதி தசலகாரமாம். அவற்றுள் வியங்கோள் லிங் எனவும் லோட்டு எனவும் இருவகையாம். வேண்டும் தகும் படும் என்னுமூன்றுங் கிருத்தியப் பிரத்தியயமாம். எ - று. பாணினி காலம்.

'முதனிலைப் பின்னரு மிடைநிலை முன்னரு—மேவிய வெழுத்தே விகரணி யென்ப.' 'தவ்விய மிக்குத் தவ்விய மநீயமென்—றிவ்வகை மூன்றுங் கிருத்தியப் பிரத்யயம்.' இவை உரைச் சூத்திரம்.

உ-ம். உண்ணப்படும், உண்ணாநின்றான், 'சொல்லுக சொல்லை,' 'வினைகலந்து வென்றீக,' 'தேமல ரங்கட் டிருவே புகுதக,' 'இன்பத்தின் பக்க மிரிந் தைக்க,' 'அறைகுவன் சொல்லே,' கூடிப் பெறுகுவம் என விகரணி யெழுத்துக்களேழுவந்தன. ஒழிந்த மூன்றும் வந்தவழிக் காண்க. அநாதி ஆதி என அலுக்காயும் லுக்காயும் வந்தாற்போல, அறைகுவன் அறைவன் பெறுகுவம் பெறுவம் என வரும். உண்ணாநின்றான் உண்ணுவோம் என்புழி அலுக்

காயே வந்தது. உண்டாமென்பது அஸ்தி என்பதுபோல வுக்காயே வந்தது.

'அ ஆ உ ஊ என்னு நான் குயிருந்—தைகுவ் வென்னு முயிர் மெய்ம் மூன்றும்—விகரணி யுயிர்சில மெய்யூர்ந்து வருமே—யேனை மூன்று மீண்டில வென்ப.' இஃதுரைச்சூத்திரம்.

தடறவொற்றுஇன் முதலாகிய காலங்காட்டும் இடைநிலையோடு நீங்காத அன்னிறு முதலியவற்றை விரித்து லகாரமாதல் காண்க.

இனி வியங்கோளாவன வாழியர், வாழிய, வாழி, வாழ்க என ஆசிர்வாதம் என்னும் வாழ்த்தற்கண்ணும், 'பரந்து—கெடுக வுலகியற்றி யான்.' 'பொற்பாவாய்—நீருய் நிலத்து விளியரோ' எனச் சாபத்தின்கண்ணும், 'தேமல ரங்கட் டிருவே புகுதக,' 'எந்தை வருக,' 'எம்மான் வருக' என வேண்டிக் கோடலாகிய பிரார்த்தனைக்கண்ணும் ஏவலாகிய பிரேரணைக்கண்ணும் வந்தன. 'கங்கையாள் னீள்கழலான் காப்பு,' 'குறித்தோன் கூற்றந் தெரித்து மொழி கிளவி,' 'மறப்ப தறிவிலென் கூற்றுக்களே,' 'நலத்தின்கணாரின்மை தோன்றி னவனைக்—குலத்தின்க ணையப்படல்,' 'இயற்கைப் பொருளை யிற்றெனக் கிளத்தல' என விதிப்பொருட்டின்கண்ணும் வந்தன.

உயிரீறும் ஒற்றீறுமாய் வரும் இருவகைவியங்கோளையும் லிங்கென்றும் லோட்டென்றுங் கூறுக.

கிருத்தியம்போல லோட்டும் வடநூலார் விதிப்பொருட்டாமென்பர். அதுபற்றி லோட்டிற்குங் கிருத்தியத்திற்கும் நடுவே தீபகமாக விதிப்பொருட்டாம் என்றும்.

கிருத்தியவுதாரணம்:—'ஓஒதல் வேண்டு மொளிமாழ்குஞ் செய்வினை—யாஅது மென்னு மவர்,' 'நிரந்தரம் நினைப்பதாக நீநினைக்க வேண்டுமே,' 'நீயென்குறை சொல்லவேண்டு மார்வல,' 'யான் பொருதல் வேண்டும்,' 'வெய்யோற் கநேக நாள் வேண்டுமே,' 'இனைத்தென வறிந்த சினைமுதற் கிளவிக்கு—வினைப்படு தொகுதியி னும்மை வேண்டும்,' 'இன்னென வரூஉம் வேற்றுமை யுருபிற்—கின்னென் சாரியை யின்மை வேண்டும்' என்புழிச் செய்யுமென்னு முற்றுகாமல் வேண்டு மென்னுந் தவ்வியப் பிரத்தியயம் வந்தது. 'நலம் வேண்டி னாணுடைமை வேண்டும்' என்னும் பாட்டில் பரிமேலழகரும் இதனை விதிப் பொருட்டென்றார்.

வடமொழியிற் கர்த்தவ்வியமென்பதற்குப் பொருள் செய்ய வேண்டும்.

இவராலிக்காரியஞ் செய்யத்தகும், 'எய்திய செல்வத்த ராயினுங் கீழ்களைச்—செய்தொழிலாற் காணப் படும்.' 'கடைநிலத்தோ ராயினுங் கற்றுணர்ந் தோரைத்—தலைநிலத்து வைக்கப் படும்' கீழ்களை, கற்றுணர்ந்தோரை என இரண்டாம் வேற்றுமை விரிந்து நின்றும் உயர்திணைப் பன்மை படுமென்பதனோடு முடிதலின், செய்யுமென்னும் முற்றாகிய ஆற்பநேபதமன்றி யதவ்விய கிருத்துள் விதிப்பொருட்டாகிய கிருத்திய மென்பது தெற்றெனவறிக.

இனி 'உள்ளப்படுவன' எனவருந் திருக்கோவையாருள் சொற் சோதனை காட்டிய 'வஞ்சரையஞ்சப்படும்' என்பதற்கு அஞ்சத்தகு மென்பர் பேராசிரியர்; பரிமேலழகர் அஞ்சவேண்டுமென்பராதலின், கிருத்தியப் பிரத்தியமூன்றும் ஒன்றற்கொன்று பிரதிபதமாய் இருதிணையைம்பான் மூவிடத்தினும் நிற்றலில், அதவ்விய கிருத்தாமென்க.

முற்கூறிய விகரணியுள் பெறுகுவம், உண்ணாகிடந்தான், உண்ணாவிருந்தான், புகுதக, என்புழிப் பெறுவென்பது பகுதி, குவ்வென்பது விகரணி, வம் என்பது காலங்காட்டும் லகாரமாகிய இடைநிலைதோயிறுதி. உண் பகுதி, ஆ விகரணி, கிடந்தான் இருந்தான் என்பன லகாரமென்னும் இடைநிலைதோயிறுதி. புகு என்பது பகுதி, த என்பது விகரணி, க என்பது லகாரமென்னும் இடைநிலைதோயிறுதி. சொல்லு அருளு என்பதில் உ விகரணி பெற்று நின்றாற்போல, பச சகி ுச என விகரணி பெற்று நிற்கும் முன்னிலை யேவல்வினைச்சொல். இவற்றுள் லகாரமென்னும் இடைநிலைதோயிறுதி குன்றியது 'ஆயுமலந்தம்' என்னும் பாட்டினுட் காட்டுதும். 'திருநுதல்' முதல் இதுவரை கிருதந்தமென்பர். (எ)

சஉ. அடைமொழி யாந்தொகை தத்திதன் காரக மாஞ்சு
பந்த, நடைமயி லேவினை யெல்லாந் திஙந்தநற் றது
வினை, புடைபரந் துந்தனைச் சொற்பெயர் பாவம்
பொதுவினிற்கு, மிடைநிலை யாருண்டில் வேறெச்ச
மவ்யய மென்றறியே.

இதுவுமது. தொகைமுதன் மூன்றுஞ் சுபந்தமாம். வினையெல்லாம் திஙந்தமாம். முதனிலைத்தொழிற்பெயரும் உம்மையாற் புடைபரந்த தொழிற்பெயருமாகிய திங் பாவமும் கிருற்பாவமும்

பாவபதமாம். இருதிணைபாலிடமூன்றிற்கும் பொதுவாய் வருகின்ற இடைச்சொன் முதலாகிய அறுவகைச்சொல்லும் அவ்வியயமாம். எ - று.

'அடைமொழி' என்றவிதப்பால் பாவபதமுஞ் சுபந்தமாம். நன்னூலாரும் "வினையின்பெயரே" என்புழி வினைதன்னைச்சொலலும் பெயரென்றார்.

முதனிலை புடைபரந்தலாவது 'சாமானியம்' என்னும் பாட்டெட்டாட்டிய இம்முதலாகிய பாவபதப் பிரத்தியயங்களெனக.

பறவை, உடுக்கை, துடைப்பம், கிடக்கை எனமுறையே கருத்தாவுங் கருமமுங் கரணமும் அதிகரணமுமாகிப் புடைபரந்து பாவபதம் வருர். பணைதுறை, பெய்துறை, 'கெடுவாகவையாது,' 'அறிகொன்றறியான்' என்னும் முதனிலைகளும் உரைத்தல் கெடுதல அறிதல் எனப் பொருள்விரிந்து சொல்விரியாத இங் பாவபதமாம்.

இடைச்சொலலும் எச்சமுமலலாத நான்கும் வினைக்குறிப்பாதலின், அவற்றைநக கம்மியமானக் கிரியையாய் நிற்கும் அவ்வியயமென்பர். இருதிணையைம்பான மூவிடமாயடங்கிய லிங்கதிரயமும் புருடத்திரயமும் வசனத்திரயமுமான மூன்றிற்கும் பொதுவாய் நிற்றலின், இடைச்சொன்முதலிய வாறனையும் அவ்வியயமென்பர்.

உயர்திணை முப்பாற்குமுரிய யாரென்னும் பிரச்சினபதம் 'ஊறைகூட்டுண்ணுறு முருபனி யாமத்தெங்—கோதைகூட் டுண்ணிய தான் யார்மன் - போதெல்லாம்—தாதோடு தாழ்ந்தார்க் கச்சி வளநாடன்—றூம்தோடு வாராத வண்டு.' எ-ம். 'நானென்னுள்ளமார் ஞானங்களார்' எ-ம். நீயார் எ-ம். இருதிணையம்பான் மூவிடத்தும் வருதலானும், அவ்வியயமாயிற்று.

'மயில்கண் டன்ன மடநடை மகளிர்' எனவும் 'மயிலெனப் போந்து' எனவும் 'மணிமயிற் றெழில்' எனவும் திருமுருகாற்றுப் படையினும் திருக்கோவையாரினும் பரிபாட்டினும் முறையே மயிலை நடைக்குவமையாக்கலின், 'நடைமயிலே' என்றும்.

வடமொழியுதாரணம்:—கிம், அத்தி, நாத்தி, பிருதக்கு; இவை யார், உண்டு, இல்லை, வேறு என்பவற்றின் பிரதிபதம். பிரச்சினம், சற்பாவம், அபாவம், வியாகம் என்பன இந்நான்கிற்கும்பெயர். அமரசிங்கமென்னு நிகண்டில் மூன்றாங்காண்டத்துள் அவ்வியய

வர்க்கமெல்லாம் இடைச்சொல்லும் உரிச்சொல்லுமாம் ஆதலின், உரிச்சொல்லும் இடைச்சொல்லுளடங்குமெனக. 'ஓஒவிதற்பட்டது' இது சூசகாவ்வியயம். 'செரு அஅய்வாழியநெஞ்சு' என்புழி வாழியவென்பது வாசகாவ்வியயம். (அ)

சரு. காலத் திரயம் புருடத் திரயங் கலந்தலிங்கச்
சீலத் திரயம் வசனத் திரயஞ் சிறந்தவற்றுட்
கோலப்பெண் ணூணலியென்றிவை யாருங்குறிவசன
நீலத் தடங்கணல் லாயெழு வாய்க்கு நிகழ்த்தினவே.

சச. பூதந் தொடுவர்த்த மானம் பவிடியம் போதுவயிர்,
ஞேதத் தகைய பிரதம மத்திம முத்தமமா, மேதக்க
சேட மிலேசம் பகுதிப் பொருள்விகுதி, மாதர்ச்
சுவார்த்தமென் றோடாப வாதம் வழுவமைப்பே.

இவ்விரண்டும் அவை. காலத்திரயமுதலாக வசனத்திரயமீறுகப் பன்னிரண்டுள் இறப்பு நிகழ் வெதிர்வென்னு மூன்றும் முறையே பூதகாலம் வர்த்தமானகாலம் பவிடியத்காலமாம். படர்க்கை முன்னிலை தன்மை என்னும் இம்மூன்றும் பிரதமபுருடன் மத்திம புருடன் உத்தமபுருடன் எனவாம். ஆண்பால் பெண்பால் அலிப்பால் என்னுமிம்மூன்றும் புல்லிங்கம் திரீலிங்கம் நபுஞ்சகலிங்கம் எனவாம். எழுவாய்க்குக் கூறிய ஒருமை இருமை பன்மைக்கு ஏகவசனம் துவிவசனம் வெகுவசனம் எனவாம். சேடமிலேசம் என்பது உம்மைத்தொகை. இவை முறையே குறையும் மிகையுமாம். நூனதிகமென்பதுமது. பகுதிபொருள் விகுதி சுவார்த்தமாய் வரும் பிரத்தியயம். வழுக்காத்தல் தோஷாபவாதமாம். எ-று.

'குறியே லிங்கங் கூறுங் காலே' இஃது உரைசசூத்திரம்.

சத்துவகுணத்தைப் புல்லிங்கமெனவும், ரசோகுணத்தைத் திரீலிங்கமெனவும்,தமோகுணத்தை நபுஞ்சகலிங்கமெனவும்,இவை சாத்திரலிங்கமெனவும் கொள்வர். இக்குணங்களோடு கலவாத பொருளொன்றுமில்லையாம். ஆதலின், இக்குணங்களோடு கூடிய பொருளையுணர்த்துஞ் சொல்லையும் உபசாரத்தால் அவ்வாறு கூறுவரென்று பாணினி முதலாயினோரும் சைமினியும் நாலாமத்தியாயத்திற் கூறினரெனக. இவ்வாறு வரும் சாத்திரலிங்கத்தை லௌகிக லிங்கமென்று கொள்ளாதொழிக. இம்மூன்றுகுணமும் மிகுதி குறையொப்பாய் நிற்றல்பற்றி ஒருபொருட்சொல்லே மூன்றுலிங்கமுமாமென்பார்.

‘மிகுதி குறைவொப் பெனவரூஉ மூன்றும்—உபசய மபசயஞ் சமமென லாகும்.’ இஃதுரைச்சூத்திரம்.

‘இலேச மிகையே லவமென மொழிப—வெகுளக் கிரகண மென்பது மதுவே—குறையே சேடங் கூறுங் காலே. இஃதுரைச் சூத்திரம்.

ஆகாரவிறுதி யகரவிறுதியற்றே என்னாது ‘ஆகார விறுதி, யகர வியற்றே’ என்பதும, ஆதியதென்ப வபிகிதகர்த்தா வநபிகிதகர்த்தா என்னாது அநபிகிதமென்பதும், செய்த செய்கின்ற செய்யுமெனவாய்பாட்டில் என்னாது பாட்டிலென்பதும், எடுத்துக்காட்டென்னாது காட்டென்பதும், இலவாழ்க்கை வழி யெஞ்சல் என்னாது வாழ்க்கைவழி யெஞ்சலென்பதும், சீர்தூக்கிச் செயல் என்னாது தூக்கிச்செயலென்பதும், சேடமாம். இவ்வாறுரைத்ததனாற் பிறிதோரிலக்கணமுங் கொள்ளுதல் உரைகாரர் மதமெனக. இலேசம் பெரும்பாலும் வருதலின் எழுதிக்காட்டல் வேண்டாவாயிற்று.

சந்தோபிசிதமுங் காரிகையும்போல இலக்கியவிலக்கணங்கள் ஒருங்கு தோன்ற மாதர்ச் சுவார்த்தமென்னும். உ-ம். ‘மாதர்மனை மாட்சியாள்’ எ-ம். ‘கனங்குழை மாதர்கொல்’ எ-ம். ‘குறியெதிர்ப்பை நீரதுடைத்து’ எ-ம். ‘வண்ணவண்டின்குரல் பண்ணை போன்றனவே’ எ-ம். ‘நத்தம்போற் கேடு’ எ-ம். ‘சோதிவாயவுங் கண்ணவுஞ் சிவந்தன’ எ-ம். நீலகம், மௌத்திகம், படகம் எ-ம். இருவகை மொழியினும் சாமானியதத்திதனில் வரும். கௌத்திரிபிலவே என்பது போல வரற்பாலது திரிபிட மின்றே என்பதும் இருபெயரொடு மென்பது இருவயிற் பெயரொடுமென்பதும் அவ்வியயதத்திதனில் வரும். பாவதத்திதனில் வருதல் ‘முட்டாதுகூறிய’ என்னும் பாட்டினுட் காட்டினாம்.

வழூவற்க வென்றலும் வழூவமைத்தலுமென வழூக்காத்தல் இருவகைப்படும். குறித்தபொருளை அதற்குரிய சொல்லாற் சொல்லுகவென்றல் வழூவற்கவென்றலாம். குறித்த பொருட்குரிய சொல்லன்றாயினும் ஓராற்றான் அப்பொருளை விளக்குதலின் அமைக வென்றல் வழூவமைத்தலாம். அதனை வடநூலார் நிரங்குசாக்கவயஃ என்றுபோவர்.

ஆண்டுரைத்த காலமாவது மலைநிற்கும், யாறொழுகும், தீச்சுடும் என்றலின் நிகழ்வல்லதில்லையென்பாரும், ஒருவர் நடக்குந் தொழிற்கண் ஒருகாலம் முன்சென்றொழிய ஒருகாலம் பின்செல்லுமாத

லின் இறப்பு மெதிர்வுமாமென்பாரும், இவையெல்லாம் ஒருபொருளின் பண்புந் தொழிலுமல்லது காலமென்ற சொல்லுக்கு ஒருபொருட்பேறில்லை யென்பாரும் என ஆசிரியர் நால்வராதலின், அகத்தியர் "உலக வழக்க மொழுமுக் காலமு—நிலைபெற வுணர்தரு முதுமறை நெறியால்" என வேதங்கூறிற்றென்பா. முன்பிறந்தான், பின்பிறந்தான், மூத்தான், இளையான் என்பனவற்றை உதாரணங் காட்டிக் காலமுண்டென்பாருமுளர். (கூ-௧௦)

சுரு. வினைப்பெய ரோடவ் வயயமாங்கை யாதி மிடைநின்ற, தனைபெய ரிட்ட துபசர்க்கஞ் சுட்டினுட் டானகரத், தினைப்பெய ரிட்டது தற்சக்கம் யற்சத்தம் யாவெகர, முனைச்செயப் பாட்டு வினைபாவ கன்மணி மொய்த்தயக்கே.

இதுவுமது. வினைப்பெயரோடு கூடி நின்ற கை முதலாகிய அவ்வியயங்கள் உபசர்க்கமாம். வினைப்பெயரெனவே வினைச்சொல்லோடு வருதலுங்கொள்க. அகரச்சுட்டு முதலாகிய சொற்கள் தற்சத்தமாம். யாவெனனும் வினைப்பெயரும் எகரமுதலாகிய வினைப்பெயரும் யற்சத்தமாம். செயப்பாட்டுவினை கன்மணிப்பிரயோகத்தின்கண்ணும் இங் பாவப்பிரயோகத்தினகண்ணும் வந்த யக்காம். எ - று.

அகரத்தையும் எகரத்தையும் நிலைமொழியாய் நிறுத்தித் தொல்காப்பியா முடித்தலின், அவ்விரண்டெழுத்தையும் ஆகுபெயராக வுங்கொள்க.

உ-ம். கைமிகல், 'கலர்தாரைக் கைவிடுதல்,' 'கைதூவேன்,' 'நோலங்கருதினுங் கைகூடும்' எனக் கையென்பது உபசர்க்கமாய் வினைப்பெயரோடும் வினைச்சொல்லோடும் வந்தது. 'நூல்கால் யாத்த மாலை வெண் குடை' எ-ம். 'உயிரிற் றலைப் பிரிந்த வூன்' எ-ம். 'கலலாத மேற்கொண் டொழுகல' மேற்கோள் எ-ம். 'மீக்கூறு மன்னனிலம்' எ-ம். 'ஒல்லை யுணரப்படும்,' 'வலைலக்கெடும்,' புறங்கொடுத்தல், புறந்தருதல, புறப்படல், அகப்படல், 'இலம்படு புலவா' எனவும் உபசர்க்கம் வரும். கை, கால, தலை, மேல், மீ, ஒல்லை, வல்லை, புறம், அகம், இலம் என்பவை உபசர்க்கம். பரிமாறுதல வடமொழி யுபசாக்கம் பெற்ற தமிழ் வினைச்சொல்.

வடநூலார் உபசர்க்க மிருபதென்பர். அதிலோபம் அதிசயம் என்பன வடமொழியுபசர்க்கம். சிந்தாமணியாரும் 'அதிலோபமா

ந்தா்' என்றார். அதிநுட்பம் என்பது வினைப்பெயரோடும் வினைச் சொல்லோடும் வாராமையின், அவ்வியயீபாவமென்க.

'எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினு மப்பொருண்—மெய்ப்பொருள் காண்ப தறிவு' 'யாதனின் யாதனி னீங்கியா னோத—லதனி னதனி னிலன்' என்பன யற்சத்தம் வந்தபின் தற்சத்தம் வரும். இந்நியமம் வடநூலார் மதமாதலின், திருவள்ளுவரும் அவ்வாறு செய்யுட்செய்தாரென்க.

பாவ கர்மணியில் வருஞ் செயப்பாட்டு வினையை யக்கென்பர். அன்றியும் 'பொத்துப்படும்,' 'மன்றுபடும்,' 'சோர்வுபடும்' எனப் பெயரடுத்துவரும் படுவை யக்கு என்றும், இயற்றப்படுதல் வேறுபடுக்கப்படுதல் எனத் தொழிற்பெயரடுத்துவரும் படுவை ய என்றுங் கூறுவர். (கக)

சசு. ஆயு மலந்த மசந்த மலாதி யசாதியிவை, மாயுமெய் யீறுயி ரீறுயி ராதி மதிநுதலாய், கோயுமெய் யாதி சமத்தம் வியத்தந் தொகைவிரிமற் றேயும் பிரேரணை செய்யா யெனல்செய் யெனக்குன்றுமே.

இது சிலசொற்குப் பெயரும் முன்னிலையொருமை வினைச்சொற் குன்றி நிற்பதுங் கூறுகின்றது. மெய்யீறு அலந்தம் எனவும். உயிரீறு அசந்தம் எனவும், மெய்ம்முதல் அலாதி எனவும், உயிர்முதல் அசாதி எனவும் பெயர்பெறும். தொகைப்பதம் சமத்த பதமெனவும், தொகாப்பதம் வியத்தபதமெனவும் பெயர்பெறும். செய்யாயென்பது செய்யெனக் குன்றும். எ - று.

'பிரேரணை யேவல் பேசுங் காலே' இஃதுரைச்சூத்திரம்.

உ-ம். ஆல் அலந்தமும் அசாதியுமாம். மணி அலாதியும் அசந்தமுமாம்.

சக்கரன் செல்வம், மன்னன் குமாரன், சங்கம் படகம், வட்டம் பலகை, கமலம் தாள் என்பன விரியென்னும் வியத்தபதம். அப்பதங்கள் சக்கரச்செல்வம், மன்னகுமாரன், சங்கபடகம், வட்டப்பலகை, கமலத்தாள் எனப் பிளவுபட்டிசையாது, ஒருசொன்னீர்மையவாய்ச் சமத்தபதமென்னுந் தொகையாய், சக்கரனது செல்வம், மன்னனுக்குக் குமாரன், சங்கமும் படகமும், வட்டமாகிய பலகை, கமலமொத்த தாள் எனப் பொருள்பட்டு நிற்கும். அவ்வாறல்லது அது கு என்னும் விபத்திகளும் உம்மைகளும் உவமவுருபுகளும் நின்றழியாவென்க.

'செல்லாமை யுண்டே லெனக்குரை மற்றுநின்—வல்வரவு வாழ்வார்க் குரை.' என்புழி உரையாயென்பது உரையென நின்றது. வடநூலுள்ளும் பசகி என்பது பச எனக் குறைந்து நின்று, பசகி எனப் பொருள்படும். பஜ தியச திச என்பனவுமது. வடநூலார் இவ்வாறுரைக்குங் கருத்தேபற்றித் தொல்காப்பியரும் "செய்யா யென்னு முன்னிலை வினைச்சொற்—செய்யென் கிளவி யாகிடனுடைத்தே" என்றார். இச்சூத்திரத்துக்கு வடநூலார் மதம்பற்றிச் சேனாவரையர் செய்யாயென்னும் முன்னிலையேவல் வினைச்சொல் செய்யெனக் குன்றுமென்றுரைப்பர். இனி நச்சினார்க்கினியார் செய்யாயென்னும் எதிர்மறைச்சொல் செய்யென்னும் உடன்பாட்டுச்சொல்லாமென்றும், அது குன்றினதன்றென்றுமுரைப்பர். செய்யீரென்பதும் அவ்வாறு பொருள்படுதலின், செய்யென்கிளவியென்பதன்றியும் செய்யுமென்கிளவியாகிடனுடைத்தே என வேறொரு சூத்திரஞ் செய்யவேண்டும். 'மகனெனனன் - மக்கட் பதடியெனல்' என்பதும் உடன்பாடெதிர்மறையென்னும் இரண்டுவிதியும் பெறும். அதற்குஞ் சூத்திரம் வேறு வேண்டும். தொல்காப்பியர்க்கு எதிர்மறையும் உடம்பாடுமாய் நிற்குமென்பது கருத்தாயின், 'செய்யாயென்னு மெதிர்மறை வினைச்சொற்—செய்வாயென்னு முடம்பா டாகும்' எனச் சூத்திரஞ் செய்வர். அவ்வாறு சூத்திரஞ் செய்யாமையானும், அஃதுரையன்மையறிக. இனி முதனிலைகளைத் தொல்காப்பியர் 'ஒற்றிறு தொழிற்பெய ருயிரிறு தொழிற்பெயர்' என்றதல்லது முன்னிலையேவல் வினைச்சொல்லென விதியாமையானும், அம்முதனிலைகள் பெயராய் நின்றே பின் மூன்றிடத்திற்கும் உரிய இடைநிலைதோயிறுதிகளைச் சேர்ந்து வினைச்சொல்லாவதன்றித் தனியேநின்று வினைச்சொல் லாகாமையானும், தனியே நின்று முன்னிலைவினைச்சொல் லாயிற்றென்றால்,தனியே நின்று படர்க்கை வினைச்சொல்லாதலும் தன்மை வினைச்சொல் லாதலும் வேண்டும்; அவ்வாறாகாமையானும், நச்சினார்க்கினியாருரை வடநூலோடு மாறுபட்டதாமென்க. சாவவென்னெச்சத்திறுதி குன்றும் எனத் தொல்காப்பியர் முதலாயினார் எடுத்தோதிய உபலக்கணத்தால் 'பாலறிவந்த,' 'செய்தக்க,' 'மண்மாண் புனைபாவை யற்று' என வருவனவுமது. 'நுண்மாணுழைபுலம்,' 'வரிப்புனைபந்து' என வருஞ் செய்தெனெச்சத் தீறும் வினைத்தொகைகளாய்க் குன்றிய பெயரெச்சத்தீறும் இவ்வாறே கொள்க. இவை விவட்சாதீனம். (கஎ)

**௬௭. சின்மயஞ் சார்ந்ததத் தம்பொரு ளின்றிச் சிலபதங்க,
ளன்வயஞ் சம்பந்தந் தாற்பரி யத்தோ டநுபபத்திச்,
சொன்மயந் தோன்றப் பொருள்வே றுணர்த்திற் றுடி
யிடையாய், தன்மயஞ் சார்ந்த விலக்கணை யாமென்
பர் தார்க்கிகரே.**

இது பிறநூன்முடிந்தது தானுடம்பட்டிலக்கணை கூறுகின்றது. சில பதங்கள் தத்தம்பொருளையன்றி அன்வயமும் சம்பந்தமும் தாற்பரியமுமே பயனாக அம்மூன்றினோடும் தனித்தனி அநுபபத்தியுந் தோன்ற வேறு பொருளை யறிவிக்குமாகலின் இலக்கணையாம். எ - று.

சொன்மயம் சொற்பொருள். உபபத்தியன்மை அநுபபத்தி. அதற்குப் பொருள் பொருத்த மின்மை.

இலக்கணையாவது, பெயராக வினையாக நிற்குஞ் சொற்கள் தத்தம்பொருளையுணர்த்தாது, பொருளின்சம்பந்தப் பொருளையும் தாற்பரியப்பொருளையும் அறிவித்தல. சக்கியசம்பந்தத்தால இலக்கணையென்றார் வடநூலார.

உ-ம். 'சென்றதுகொல் போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையு—நின்றதுகொ னேர்மருங்கிற் கையூனறி - முன்றின்—முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்—குழந்துபின் சென்றவென் னெஞ்சு,' 'வைகல் பூங்கழி வாய்வர்து மேயுங் குருகினங்காள்—கைகள் கூப்பிச் சொல்லீர்' என்புழி நேர்மருங்கிற் கையூனறி, கைகள்கூப்பிசசொலலீ என்னும் பதங்கள் தத்தம்பொருளை யுணர்த்துதலுஞ் செய்யாது வேறுபொருளையுணர்த்துஞ் சம்பந்தமும் தாற்பரியமுமின்றி, அப்பதஙகள் நெஞ்சோடும் குருகோடும் அன்னுவயமே பயனாக நின்றன.

கங்கையுளிடைச்சேரி, புளித்தின்றான் என்றால் அவற்றுள் கங்கை புளி என்னும் பதங்கள் தத்தம்பொருள்மேலன்றி அப்பொருளின சம்பந்தத்தால் கரை பழம் என்னும் பொருளை யறிவித்து நின்றன.

'வீதி யுளங்கிழித் தூருவச் சென்றான்,' 'நிலஞ்செதி ளெடுத்தபாய்மா,' 'தீத்தும்மு வேலான்,' 'பாயிருள் பருகிப் பகல்கான் றெழுதரு பரிதி,' 'கள்ளி வயிற்றி னகில்பிறக்கும்,' 'நீளரிமேற் கண்படுக்கும்' என்புழி உளம், செதிள், தும்மு, பருகி, கான்று, வயிற்றில், கண்படுக்கும் என்னும் பதங்கள் தத்தஞ் சொற்பொருளின்

றித் தாற்பரியந்தோன்ற உள்ளநடுக் கிழித்து, வீதி நூளார்க்க, நீச்சிதற விட்ட வேல், இருணீக்கி எறித்து எழும்பரிதி, வயிற்றிடத்தில், நீளரிமேற்கிடக்கும் என வேறொருபொருளை யறிவித்து நின்றன. இவையெல்லாவற்றிற்கும் அநுபபத்திதாமே தோன்றுவன காண்க. இவ்வுதாரணங்களன்றி இவற்றிற்கெல்லாம் வேறேயுதாரணங் காட்டுவாருமுளர். அவையும் இவையாலடங்கும் நுண்ணறிவினோர்க்கென்க.

அவயவமே பயனாக நின்றதனைப் பொருள்வேறுணர்த்து மவற்றோ டொருங்கு நிறுத்தி முடிப்பது கூடுமோவோவெனின், "எச்சப் பெயர்வினை யெய்து மீற்றினும்" என்னுஞ் சூத்திரம்போலக் கடாவுரை காட்டி மறுக்கக் கிடந்தது.

இவ்விலக்கணங்கள் சத்தநூலிலக்கணமன்மையின், தொல்காப்பியர் பொருளியலுள் "நோயு மின்பமும்" என்னுஞ் சூத்திரத்துள் "உறுப்புடை யதுபோ லுணர்வுடை யதுபோன்—மறுத்துரைப் பதுபோல்" எனச் செய்யாமரபிற் றொழிற்படுத்தடக்குவர். வடமொழியிற் காளிதாசனும் மேகசந்தேசத்தினுள் இவ்வாறு கூறுதல் காண்க. இவ்விலக்கியங்களே இலக்கணமாகப் பிற்காலக் கவிகளும 'முல்லையெனு - மென்மாலை தோளசைய மெல்ல நடந்ததே—புன்மாலை யந்திப் பொழுது' எனவும், 'வால்வளை வாய்விட்டார்ப்ப' எனவும், 'கண்களே சொல்லும் வாய்திறந்தே' எனவுங் கூறுவர். (கக)

சஅ. மருளறு காரணங் காரியம் பேரொடு வந்துறழு,மிருளறு மொண்குணப் பேர்குணிப் பேர்வினை யோடி யையும், பொருள்வினை மற்றோர் பொருளினுந் தோன்றும் புலத்தொடுமாந், தெருளுறு பண்பு புலனிவை மாறியுஞ் சேர்ந்திடுமே.

இதுவுமது. காரணப்பெயர் காரியப்பெயராகியும், காரியப்பெயர் காரணப்பெயராகியும், மாறி வரும். குணம் குணியாயும், குணவினை குணிவினையாயும், வரும். ஒருபொருளின்றொழில் அதனோடியைந்த பிறிதோர்பொருளோடும் வரும். இடத்துநிகழ்பொருளின்றொழில் இடத்தோடும் வரும். பண்பும் புலனும் மாறியும் வரும். எ - று.

புலம் இடம். புலன் விடயம்.

உ-ம். 'பிறப்பென்னும் பேதைமை' பிறப்பிற் கேதுவாகிய பேதைமை; இது காரியங் காரணமானது. 'தீவினை யென்னுஞ் செருக்கு' தீவினையால் வருஞ் செருக்கு; இது காரணங் காரியமானது. 'இல்லதெ னில்லவண் மாண்பாறல்' மாண்புடையாளாறல்; இது குணங் குணியானது. 'சிற்றின மஞ்சும் பெருமை' இது குணவினை குணிவினையானது.'முன்னின்று பின்னோக்காச் சொல்' இது ஒருபொருளின் வினை மற்றோர் பொருளின் வினையானது. 'குளவளாக் கோடின்றி நீர்நிறைந் தற்று,' இந்தப்பானை நாஞ்சிய ரிசி பொங்கும் இவை புலமென்னும் இடத்துநிகழ் பொருளின் றொழில் இடத்தின்மே னின்றன.

'பொருளினுந் தோன்றும்' என்ற சகாரத்தால் 'பீலிபெய் சாகாடு மச்சிறும்' என்னுஞ் சினைவினை முதல்வினையாதலுங் கொள்க.

இன்சொல், வன்சொல், மதுரகவி, 'செவிகைப்பச் சொற்பொறுக்கும்' என்னும் உபசாரங்களெல்லாம் பண்பு புலன் மாறி வந்தன. (கசு)

சக. சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்குந் தமிழ்மொழிக்கும், வேற்றுமை கூறிற் றிணைபா லுணர்த்தும் வினைவிகுதி, மாற்றருந் தெய்வ மொழிக்கில்லை பேர்க் கெழு வாயுருபுந், தேற்றிய லிங்க மொருமூன்று மில்லை செழுந்தமிழ்க்கே.

இது வடமொழிக்குந் தமிழ்மொழிக்கும் பேதங் கோடிகூறிட்டு ஒருகூறுண்டோ இன்றோவென்பது கூறுகின்றது. திணையுணர்த்தும் வினைவிகுதியும், ஆண்பால் பெண்பாலுணர்த்தும் வினைவிகுதியும் வடமொழிக்கில்லை. தமிழ்மொழிக்குப் பிரதமாவிபத்தியும், இலிங்கத்திரயமுமில்லை. எ - று.

'சேதன னுயர்திணை யஃறிணை யசேதனம்.' இஃதுரைச் சூத்திரம்.

எற்புழிக்கோடலால் தமிழ்மொழிக்கும் அஃறிணைக்கண் ஆண்பால் பெண்பாலுணர்த்தும் வினைவிகுதியில்லையென்க.

"எழுவா யுருபு திரிபில் பெயரே" என்றதனாலே தமிழுக்குப் பிரதமாவிபத்தியில்லை யென்பது முன்னே கூறினும்; பின்னுங்கூறியது, இலிங்கஞ் சிறுபான்மை கொண்டு பெரும்பான்மை விலக்கவேண்டிய அநுவாதத்தாலென்க.

'ஒருமூன்றுமில்லை' என்ற சகாரத்தால் முற்றும்மை எச்சப்படுத்தி ஒருபொருடானே தன்னை விசேடிக்குமிடத்தும், குணங்கள் குணிகளை விசேடிக்குமிடத்தும், வடநூலார் மதம்பற்றி இலிங்கநியமம் ஏகதேசமாக வரும்.

உ-ம். சயதி என்றால் செயிப்பன், செயிப்பள், செயிக்கும், செயித்தது என ஓரிறே நின்று பொருளுணர்த்துமென்க.

'நாணென்னு நல்லாள் புறங்கொடுக்குங் கள்ளென்னும்—பேணுப் பெருங்குற்றத் தார்க்கு.' என்னுந் திருவள்ளுவரில் பரிமேலழகர் நாணென்னு நன்மை யொனறபாலதனை நல்லாளெனப் பெண்பாலாகக் கூறியது வடமொழி முறைமைபற்றி யென்றுராதலின், வடமொழியுள் லச்சையென்பது பெண்பாற் சொல்லென்க.

இனிச் சிலப்பதிகாரத்திலே 'தென்றலஞ் செல்வன் யாண்டுளன் கொல்லோ' 'திங்களஞ் செல்வன் யாண்டுளன் கொல்லோ' எ-ம். 'இன்னிள வேனில் வந்தன னுக' எ-ம். பெயராலும் வினையாலும் அவ்வவ சொற்களை ஆண்பாலாக்குவர். 'பால்வாய்ப் பிறைப்பிள்ளை யொக்கலைக் கொண்டு பகலிகழ்ந்த—மேல்பாற் றிசைப்பெண் புலம்புறு மாலை' எனப் பெண்பாலாக்குவர் சடகோபர் திருவிருத்தத்துள். 'வேனிலஞ் செல்வன் சுவைத்தமிழ் பாலை' என்பது மது. 'தோற்பையு ணின்று தொழிலறச் செய்தூட்டுங்—கூத்தன் புறப்பட்டக் கால்' என்னும் நாலடியாருள் கூத்தன் உயிர்க்கூத்தன். 'கொங்கலர் கோதைக் குமரி மடநல்லாண்—மங்கலம் பாடி மலிவெய்தக் - கங்கையாள்—பூம்புன லாகங் கெழீஇயினன் போரடுதோள்—வேம்பார் தெரியலம் வேந்து.' இச்செய்யுளிற் குமரியாற்றைக் கொங்கலர் கோதைக் குமரிமட நல்லாளென்றும், கங்கையாற்றை ஈறு திரித்துக் கங்கையாளென்றும் பெண்பாலாக்குவர். இனிச் சிந்தாமணியுள் 'ஆனையு ளரசன்ற னணிகிளர் வலமருப்பு' என வருவதனையும் அதன்பாற் படுத்துக.

இனிப் "பல்லோர்க் குறித்த திணைநிலைக் கிளவி" என்னுஞ் சூத்திரத்துள் சேனாவரையர் அந்தணர் அரசர் என்னும் பன்மையீற்றுச் சாதிப்பெயரை உயர்திணைப் பெயரென்றும், அந்தணன் அரசனென்னு மொருமையீற்றுச் சாதிப்பெயரை விரவுப்பெயரென்றுங் கூறுவர். அதுவு மொக்கும். நாணென்னு நல்லாள், தென்றலஞ் செல்வன் முதலியனவெல்லாம் சாதிப்பெயரன்மையானும், பரிமேலழகர் நாணென்னு நல்லாளென்பதனை உருவகமென்றமையானும், விரவுப்பெயராகாது இலிங்கமென்னும் பாலுணர்த்துஞ் சொல்லேயாமென்க. தானென்னும் படர்க்கை விரவுப்பெயரை,

யும், நீ நீரென்னும் யுஷ்மச்சத்தமாகிய முன்னிலை விரவுப்பெயரை யும், யான் யாமென்னும் அஸ்மச்சத்தமாகிய தன்மை விரவுப்பெய ரையும் வடநூலார் சாமானியலிங்கமென்றும், இலிங்கந் தோனாறு தன வென்றும், இடைச்சொற்களையும் இலிங்கந் தோனாறுதன வென்றுங் கூறுவர். தெனறலஞ்செலவன முதலியனவெல்லாந் தன்னைத் தான் விசேடித்தன. பிற்காலக்கவிகளும் 'சூழுமல முக த்துச் சொன்மாமகள்,' 'பொலம்புரி காஞ்சிப் புகழ்மகள்,' 'கொதி த்து மேற்றிசை மகளுலத் தகடபதம்,' 'உறுபகற சிறுவன்,' 'கங் கையாள்கடற் றலைமகன்,' 'தணிட்பில பெருங்கீர்த்தித் தையல' எனத் தன்னைத்தான் விசேடிக்குமிடத்து அவவாறு கூறுவர்.

வடநூலார் கர்மதாரயனென்னும் பண்புத்தொகைக்குப் பண்பு வேறொருலிங்கமாக நின்றலும் பண்புடைப்பொருள் எந்த லிஙகமாம் அர்தலிங்கமாக்கிப் புணர்த்துவராதலின, அடையாக நின்ற குணலிங்கத்தை அநித்தியலிஙகமென்பா.

உ-ம். கருஞ்சாத்தன், சாத்தி, சாத்தர், குதிரை, குதிரைகள என்பனவற்றைப் பொருள் விரிக்குஙகாற் கருவெனற பண்பின முதனிலையைக் கரியன, கரியள், கரியர், கரியது, கரியன என வீறு திரித்து வருமொழி எந்தலிஙகம் அந்தலிங்கமாக்கித் தொகுப்பரெ ன்பதுபற்றித் தொல்காப்பியரும் "ஐம்பாலறியும் பண்பு தொகு மொழி" என்றும், குணச்சொற் குணமுடையதனை யுணாத்த லான் ஒன்றனையொன்று விசேடித்து இருசொல்லும் ஒருபொரு ளின்மேல் வருமிடத்து "இன்ன திதுவென வரூஉம்" எனறும் பண்புத்தொகைச் சூத்திரஞ்செய்தது நேரே காண்க. கரிய சாத தன் எனச் சாமானியலிஙகமாகவும் விரிப்பர். இவையெல்லாம் குணஙகள் குணிகளை விசேடித்து நினறன. இவ்வுரை சேனாவ ரையருரை.

கருங்குதிரை யென்பதனைக் கரிது குதிரை கரியது குதிரை என விரித்தால் எழுவாயும் பயனிலையுமாவதல்லது தொகையாகா தென்று மறுத்த நன்னூலார் கூறியவண்ணம் கருமை செம்மை யென்பனவற்றோடு புணர்ந்ததன்றோவெனின், அவர் வாமனனா சினேந்திரன் செய்த சத்தநூல்பற்றி அவ்வாறு கூறுவர். 'வருந்தி யீன்றாண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்கேட் டில்கடிந் தாள்' எனக் குயில் காக்கைகளை ஈனறது வளர்த்த தென்னுமலே, ஈன்றாள் வளர்த்தாளென உயர்திணைக் கிருதந்தமாக்கிப் பெண்பா லாக்குதலுமது. இக்கருத்தறியாத நன்னூலுரைகாரர் இவற்றை யெல்லாம் உருவகமென்பர்.

தக்கிணாமூர்த்தி என்பழி இருமொழியும் பெண்பாலாதலின், முந்தினது கெட்டெழுத்தானது. தக்கிணதேசம் என்புழித் தேசம ஆண்பாலாகலின், நிலைமொழியீறு நெடில குறிலாய் வருமொழிக்காக ஆண்பாலாய் அகரமானது; என்னை? விசேடியம் எாதலிங்கமோ அந்தலிங்கமாம் விசேடணமுமானது. (௧௫)

௫௦. ஆக்கும் பிரதி பதத்துட னேயழி யாநிருத்தி, நோக்கும் படியச் சனைய வுதாரண நோக்கினர்சிர், தூக்கும் பொழு நரி தாவதொன்றில்லைசொல்லாதனவுங், காக்குந் திறங்கண்டு காப்பது வேகடன் கற்றவர்க்கே.

இஃதிந்நூலு ணுரைத்துரையாதன மயங்காதுணருமாறும் அவையடக்கமென்னும் விஷயமுங் கூறுகின்றது. நூற்புறனடையுமாம். பிரதிபதமும் நிருவசனமும் உதாரணமுஞ் சிந்தாக்கெப்பார்க்குமளவில், அரிதாயறியற்பாலது சிறிதாயினுமில்லையாம். இந்நூலுட் கூறாதனவற்றைக் கூறியதன்பாற் சார்த்தி உணர்த்தி அவற றை வழுவாமற் பாதுகாத்தல நாவலர்க்கு முறைமை. எ - று.

பிரதிபதமாவது பரியாயபதங்கள் பலவற்றினுள் ஒன்றிரண்டு பிரசித்தபதமாக வருதலும், முழுதும் வருதலுமாம். என்னையோ வெனின், அடி, கால்; நாசி, மூக்கு; காது, செவி; நெருப்பு, தீ; புடைவை, சேலை; என வருதலும், ஊழ், பால், முறை, தெய்வம், நியதி, உண்மை, பாக்கியம், பொறி, விதி என ஊழென்னுமதிகாரத்துட் காட்டினவுமாம்.

'நிருவசன நிருத்தியென விருவகை வசனமுஞ்—சொல்லின் முடியு மிலக்கணத் ததுவே.' இஃதுரைச்சூத்திரம்.

நிருவசனம் அல்லது நிருத்தி என்பதாவது, ஊழ்: அஃதாவது இருவினைப்பயன் செய்தவனையே சென்றடைதற்கேதுவாகிய நியதி என ஒருசொற்கு வாக்கியத்தொடராகப் பொருளுணர்த்து வதெனக. குடந்தமென்பதற்கு 'குடந்தங்கை கூப்பி மெய்கொட்டி நிற்றல்' எனச் சூத்திரமாகக் கிடப்பதூஉமது. இவ்வாறு மெய்ப்பாட்டியலுள்ளும் தண்டியலங்கார சூத்திரத்துள்ளும் ஒவ்வொரு சொற்களைப் பிரித்துப் பிரித்துக் கூறுவர்.

படியச்சு: அஃதாவது ஒருபொருளிருந்தவண்ணம் மயங்காது காட்டுதல். அவை எடுத்துக்காட்டு முதாரணம்.

இனிச் சொல்லாதனவற்றிற்கு உதாரணம்:—வேறு வேறு, ஒன்று ஒன்று, பத்துப்பத்து, பையப்பைய என்பன வெவ்வேறு,

ஒவ்வொன்று, பப்பத்து, பைபய எனத் தொகைச்சொற்கள்போல நிற்கும். வடநூலாரும் ஏகமேகமென்பதனை ஏகைகம் என்பர்.

பிறிதினியைபுநீக்குதலை அன்னிய யோக வியவச்சேதமென்றும், இயைபின்மை நீக்குதலை அயோகவியவச்சேத மென்றுங் கூறுவர்.

சாதியொருமையை சாத்தியேகவசனமென்பர். அஃதாவது ஒருசொல் ஒருமையீறு தோன்ற நின்றும் தோன்றாது நின்றும் பின்னொருமைப்பன்மை வினையீறாக மேல்வந்து முடிக்குஞ்சொற்களுமின்றித் தானே பன்மைப்பொருளுணர்த்துவது. 'ஈறு தோன்றிய சாதி யொருமையு--மீறு தோன்றாத சாதி யொருமையு--மென விரு திறப்படு மிருதிணை மருங்கினும்,' இஃதுரைச்சூத்திரம். உ-ம். 'சிவிகை - பொறுத்தானோ டூர்ந்தா னிடை' என வுயர்திணைக்கண் வரும். இதனைத் தொல்காப்பியத்துள் "மெய்நிலை மயக்கி னஃதுரு வும்" என்பதனுலடக்குவர் நச்சினார்க்கினியாரென்க. 'கவியொடும் புதனொடுங் கலந்து நாடொறும்—புவிபுகழ் நிடதர்கோன் புரவி யேழுடைக்—குவிதலைத் தேர்கடாய்க் குறைது நின்றெழு—மவிர்க்திர் வானவ னழகு மேயினன்.' வடநூலார் உயர்திணையினுஞ் சாதியொருமை காட்டினரென்பதறியவேண்டி வடமொழி நளன் காவியத்துள் இக்கவியைமாத்திரம் யாமொழிபெயர்த்தாம். இனி அஃறிணைக்கண்ணும் 'அஞ்சுவ தஞ்சாமை பேதைமை' எனத் திருவள்ளுவரினும், 'நூலெனப்படுவது நுவலுங்காலை' எனத் தொல்காப்பியத்தினும், ஈறு தோன்றிய சாதியொருமை வரும். 'தென்புலத்தார் தெய்வம்,' 'குணமென்னுங் குன்றேறி நின்றார்' என்புழிக் குணம் தெய்வம் என வீறுதோன்றாச் சாதியொருமை வரும். அவற்றினுரையானுங் காண்க. 'கடலோடா கால்வ னெடுந்தேர் கடலோடு—நாவாயு மோடா நிலத்து,' 'வேலாண்முகத்த களிறு' என்புழிப் பன்மை வினைச்சொல்லோடும் பன்மைவினைக்குறிப்புப் பெயரோடும் முடிந்தன வாயினும், அவற்றின்கட் சாதியொருமை யென்றமை காண்க. 'எண்ணென்ப வேனை யெழுத்தென்ப விவ் விரண்டுங்—கண்ணென்ப வாழு முயிர்க்கு,' 'கற்க கசடறக் கற்பவை கற்றபி—னிற்க வதற்குத் தக' இவற்றையும் வடநூலார் சாதிப்பன்மையென்பர்.

இனி ஒருபொருளை முன்னரெடுத்துக் கூறுவது புரோவாதம். அதனை ஒருநிமித்தத்தாற் பின்னருமெடுத்துக் கூறுவது அநுவாதம். உ-ம். 'அறத்தினூஉங் - காக்க மெவனோ வுயிர்க்கு,' 'அறத்தினூஉங் காக்கமு மில்லை' எனவரும். 'ஒருபெயர்ச் சொல்

லெனச் சுப்பேறி நீங்கல்' என்பதும் "ஒற்றள பெடுப்பினு மற்றென மொழிப" என்பதும் அநுவாதத்தாற் புரோவாதங் கூறுமனுஞ் சித்திக்கின்ற மாட்டேறும்.

விண்டதாமரை, 'விலங்கலைக் கால்விண்டு மேன்மேலிட என்புழி விண்ட, விண்டு என்னுஞ் சொற்கள் சகன்மகமும் அகன்மகமுமாய் வரும்.

இனி அலங்காரநூலார் இசையெச்சத்தைக் காகுவென்பர். அதற்கு உதாரணம்:—'நமருள்ள லெம்மை மறைத்திரோ" என்பதாம். அது சொல்லுங்கால் முகவிகாரமாதல் சொல்விகாரமாதல் தோன்ற நிற்கும்.

'நுசுப்பிற்கு - நல்ல படாஅ பறை' என விலக்கணையடியாய்த் தோன்றிய குறிப்பை இலக்கணமூலத்தொனி என்பர்.

'குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே—யுடம்போடுயிரிடை நட்பு' எனப் பெயரடியாய்த் தோன்றிய குறிப்பை அபிதாமூலத் தொனியென்றும், விருத்தலக்கணை யென்றுங் கூறுவர். அரக்கரைப் புண்ணியசன மென்பதுமது.

உடம்பொடு புணர்த்தலென்னு முத்தியை நிபாதமென்பர். 'வகைதெரிவான் கட்டே யுலகு,' 'பழமுதிர்சோலை மலைகிழ வோனே' என வரும்.

நிறக்குந்துணையுளுரைத்த ஆகாரியாரோபமாவது புத்திபூர்வகமாகச் சிலையைத் தெய்வமாகக்கொண்டு வழிபடுதலும், பிறனொருவனைத் தந்தையாகக்கொண்டு சிராத்தம் புசிப்பித்தலும் போல்வது.

அதிகாரத்தால் வருவித்து முடிப்பதனை அநுஷங்கமென்றும், அவாய்நிலையால் வருவித்து முடிக்குஞ் சொல்லை அத்தியாகார மென்றுங் கூறுவர்.

'கடுமொழியுங் கையிகந்த தண்டமும் வேந்த—னடுமுரண்டேய்க்கு மரம்.' என்புழி அரமென்னும் ஒருமைப் பெயரை வாக்கிய பேதமாகத் தனித்தனி கூட்டி முடிப்பதனைத் தேர்வட மிழுப்பார் போலப் பிரத்தியேகபந்தாந் நுவயமென்பர். இதுவுந் தூராந் நுவயத்து ளடக்கிக்கொள்க. பாணினீயத்துள் 'ராதிப:' என்னுஞ் சூத்திரத்துள் பாடியகாரர் முதலாயினார் ரவ்விற்குக் காரப்பிரத்தியயத்தோடு இபவென்னும் பிரத்தியயமும் விகற்பமாய் வருமென்றும் வான்மீகி 'ரகாராதீநி' என்றுரைத்ததனை உதாரணங்காட்டி முடிப்பரென்க.

விகற்பம் உறழ்ச்சி; எய்தியதன்மேற் சிறப்பு விசேடம்; என்பன பரியாயம். அஃதறியாதார் உற்சர்க்கத்துக்கு அபவாத மென்னு நிஷேத விதியாக மயங்கி வான்மீக மாரிடமென்பர்.

இனி அலங்காரநூலார் அபிதை, இலக்கணை, வியஞ்சனாவிர்த்தியென மூன்றுவகையாக்குவர். அவர் மதம்பற்றிப் பரிமேலழகரும் 'சொல்லின் - றொகை யறிந்த தூய்மை யவர்' என்னுந் திருவள்ளுவர்குறளுள் செஞ்சொல், இலக்கணைச்சொல், குறிப்புச்சொலென்பர்.

எடுத்தோத்தினைச் சத்தநூலார் பிரதிபதோக்த மென்பர். போலியை அன்னியதாப் பிரதிபத்தி என்பர். மங்கலமென்பதோரூருண்டு போலும் எனவரும் இவசத்தமாகிய ஒப்பில் போலியையும், அயங்கஞ்ராசாசித் எனவரும் வடமொழியிலும் வேண்டாவென்னுங் கனுவென்பதனையும், வாக்கியாலங்கார மென்பர். பொதுவா யெய்திய விதியை உற்சர்க்கமென்றும், எய்தியது விலக்கிப் பிறிதுவருஞ் சிறப்புவிதியை அபவாதமென்றுங் கூறுவர். கிங்கரோதி யாது செய்தான் எனவரும். இது சகன்மகமும் அகன்மகமுமாகி வினாவின் வரும்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்—வழுவல கால வகையி னானே." இச்சூத்திரம் பாணினி கூறியவாறு கூறினார். அது வடமொழியிற் காட்டுதும். வடநூலார் இரண்டெழுத்திற்கு ஒருகாரப்பிரத்தியயங் கொடுத்துத் தலகாரமென்றாற்போல "ணனஃகான் முன்னர்" "ளஃகான் முன்னர்" என்பர் தொல்காப்பியர்.

இனிச் சராவதியாற்று மேல்கரை கீழ்கரையாசிரியர் புறனையை வர்த்திகா வர்த்தகா என்பர்.

இந்நூலுட் சந்தேகந் தோன்றுவதனை மகாபாடியம், கையடம், சித்தாந்தகௌமுதி, சத்தகௌமுதி, வாக்கியபதீயம், அரிபீடிகை, தாதுவிருத்தி, பதமஞ்சரி, சத்தகௌத்துவம் கற்றவரைக் கேட்க. காசிகாவிருத்தி, பிரக்கிரியா கௌமுதி என்னு மிரண்டினும் சித்தாந்தம் பிறவாதாதலின், அவை கற்றோரைக் கேளாதொழிக. வாக்கியபதீயம், அரிபீடிகை, ஏலாராசீயம் முதலாயின வழங்குங்காலத்து அவ்வுரை நோக்கிச் சேனாவரையர் முதலாயினார் தொல்காப்பியத்திற் குரையெழுதினாரென்க. (கசு)

௫௧. சீதள சந்த்ர முகராம பத்திர தீக்கிதர்க்குப், போ
தொடு சென்று புகல்வோ மவர்க்கும் பொழுதில்லை
யேன், மேதினி யிற்றமிழ் செய்பிர யோக விவேகந்த
ன்னைப், பேதமிலாதபதஞ்சலிபாற்சென்றுபேசுவமே.

திங்குப்படலம் முடிந்தது.

---

## பிரயோகவிவேகவுரை முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---

பேர்கொண்டு நின்றபிர யோக விவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்மு—னேர்கொண்டு
கேட்டா னினிக்கண்ணுற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்கா லென்.

உம்பர்க் குரியபிர யோக விவேகத்தை
யைம்பத்தொருகவிதையா லுரைத்தான்—செம்பொ
மன்னு மதிற்குருகூர் வாழ்சுப பிரமணிய ந்சீர்
னென்னு மொருவேதியன்.

---

U. V. S. IYER LIBRARY ★ 22098